Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 பங்குனி 30 ஞாயிற்றுக்கிழமை (13.04.2014) பக்கங்கள் 20 ஓசை –194

# அமைதிச்சூழலை பாதுகாத்தாலே இயல்பு வாழ்க்கை சாத்தியமாகும்



## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்களின் இயல்பு வாழ்க்கை என்பது அமைதிச் சூழலைப்பாதுகாப்பதன் மூலமே உருவாகும். எனவே மீளவும் இந்த மண்ணில் அமைதியைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளை அனுமதிக்கமுடியாதென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கான "மஹபொல" புலமைப்பரிசில்கள் வழங்கும் நிகழ்வுகள் நேற்றைய தினம் யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்ட செயலகங்களில் இடம்பெற்றன.இந்த நிகழ்வுகளில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

அமைதிச் சூழல் ஒன்றை உருவாக்குவதற்காக நாங்கள் நீண்டகாலமாக உழைத்திருக்கிறோம்.

தமிழ் மக்களுடைய அரசியற்பிரச்சினைகளையும் வாழ்வாதாரத் தேவைகளையும் அமைதிச் சூழலில் வைத்தே தீர்க்க முடியும் என்றே நாங்கள் நம்புகிறோம். இந்த நம்பிக்கையைத்தான் சர்வதேச சமூகமும் வெளிப்படுத்தி வருகிறது. அமைதிப் பேச்சுகள் என்பதன் அர்த்தம் இந்த வகையானதே.

அமைதியைப் பாதுகாத்தால்தான் பதற்றமில்லாமல் எங்களின் வாழ்க்கையை நாங்கள் தீர்மானிக்க முடியும். அமைதியான ஒரு சூழலில்தான் கல்வி, பொருளாதாரம், அபிவிருத்தி நடவடிக்

19 ஆம் பக்கம் பார்க்க

# கூட்டறிக்கையின் உறுதிமொழிகளை நிறைவேற்றவேண்டும் இலங்கை

## வலியுறுத்துகிறது ஐ.நா.

இலங்கை அரசாங்கமும் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகமும் இணைந்து 2009ஆம் ஆண்டு வெளியிட்ட கூட்டறிக்கையில் வழங்கிய உறுதிமொழிகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டுமென ஐ.நா. கோரிக்கை விடுத்துள்ளது.

ஜெனிவாவில் கடந்த மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை செயற்படுத்த ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்துடன் ஆக்கபூர்வமான ஒத்துழைப்புகளை இலங்கை வழங்க வேண்டும் என ஐ.நா. பேச்சாளர் இரி கெனிகோ வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகம் மேற்கொள்ளவிருக்கும் விசாரணை குறித்து இலங்கையின் பல அறிக்கைகள் குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஜெனிவாத் தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் வரவேற்கவில்லை என அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் வெளியிட்டிருந்த அறிக்கையையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும்

19 ஆம் பக்கம் பார்க்க

## புது வருடப்பிறப்புக் கருமம்

**வாக்கிய பஞ்சாங்கம்**

சுபமங்கள ஜய வருஷம், சித்திரை 1ஆம் நாள் 14.04.2014 திங்கட்கிழமை காலை 6மணி 11 நிமிடத்தில் பூர்வபக்க சதுர்த்தசி திதியில் அத்த நட்சத்திரத்தின் 2ஆம் பாதத்தில் மேட லக்கினத்தில் பிறக்கின்றது.

ஆடை:- சிவப்பு நிறபட்டாடை.

**விஷா புண்ணிய காலம்:**

திங்கட்கிழமை அதிகாலை 2 மணி 11 நிமிடம் முதலாக முற்பகல் 10மணி 11 நிமிடம் வரை.

**கைவிசேஷம்**

14.04.2014 திங்கட்கிழமை காலை 7.11 - 7.31
14.04.2014 திங்கட்கிழமை முற்பகல் 10.04 - 12.03
14.04.2014 திங்கட்கிழமை பிற்பகல் 2.22 - 4.27
6.21 - 7.21
9.15 - 10.23
16.04.2014 புதன்கிழமை முற்பகல் 6.04 - 7.41
16.04.2014 புதன்கிழமை முற்பகல் 7.49 - 9.44
16.04.2014 புதன்கிழமை முற்பகல் 9.56 - 11.54
16.04.2014 புதன்கிழமை பிற்பகல் 2.14 - 4.02, 6.13 - 8.00,
16.04.2014 புதன்கிழமை பிற்பகல் 8.17 - 10.11

**நாள் வேலை ஆரம்பம**

14.04.2014 திங்கட்கிழமை காலை 6.11 - 7.31
14.04.2014 திங்கட்கிழமை முற்பகல் 10.04 - 12.03
16.04.2014 புதன்கிழமை காலை 6.04 - 741, 7.49 - 9.44
16.04.2014 புதன்கிழமை முற்பகல் 9.56 - 11.54

**திருக்கணித பஞ்சாங்கம்**

ஜயவருஷம் சித்திரை 1ஆம் நாள் 14.04.2014 திங்கட்கிழமை காலை 07.36 இல் பிறக்கின்றது. (அத்தம் நட்சத்திரம் 2ஆம் பாதம், பூர்வபட்ச சதுர்த்தசியில் சித்த யோகம்)

ஆடை:- வெண்ணிறப்பட்டாடை

**கைவிசேஷம்**

சித்திரை 1ஆம் நாள் திங்கட்கிழமை காலை 6.02.முதல் 7.30 வரை
" " பகல் 10.00 முதல் 12.05வரை
3ஆம் நாள் புதன்கிழமை காலை 6.01 முதல் 7.37 வரை

**நாள்வேலை ஆரம்பம்:**

திங்கட்கிழமை 14.04.2014 காலை 6.02 முதல் 7.30வரை
16.04.2014 புதன்கிழமை காலை 6.01 முதல் 7.37 வரை.

# வடக்கில் இராணுவ பிரசன்னம் தேவையென்பது நிரூபணம்

## அரசாங்கம் தெரிவிப்பு



கோபி உள்ளிட்ட மூவர் கொலலப்பட்டதன் ஊடாக வடக்கில் இராணுவத்தின் பிரசன்னம் நியாயமானது என்பது நிரூபணமாகியுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனித உரிமைகளுக்கான விசேட பிரதிநிதி அமைச்சர் மஹிந்த சமரசிங்க, கண்டி அஸ்கிரி மல்வத்து பீடாதிபதிகளை சந்தித்த போது இதனைத் தெரிவித்துள்ளார்.

வவுனியா நெடுங்கேணிப் பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கோபி உள்ளிட்ட மூன்று உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்.

வடக்கில் இராணுவத்தின் பிரசன்னம் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை

19 ஆம் பக்கம் பார்க்க

# கோபி, உட்பட மூவரின் சடலங்கள் அரசாங்க செலவில் அடக்கம்

வவுனியா நெடுங்கேணிப் பகுதி காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்டு அநுராதபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்த கோபி, அப்பன், தேவியன் ஆகிய மூன்று பேருடைய சடலங்களும் அரச செலவில் அநுராதபுரம், விஜயபுர பொது மயானத்தில் நேற்றையதினம் அடக்கம் செய்யப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்த மூவரும் பதவியா பகுதிக்கு உட்பட்ட காட்டுப்பகுதியில் உயிரிழந்ததையடுத்து, இந்தச் சடலங்கள் மீதான மரண விசாரணையை கெப்பிட்டிக்கொல்லாவ நீதவான நடத்தினார் என்றும், அவருடைய உத்தரவுக்கமைய அநுராதபுரம் சட்ட வைத்திய அதிகாரி மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டிருந்தார் என்றும் அவர் தெரிவித்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க

# பொதுபலசேனாவிற்கு உதவுவது அதிகாரம் படைத்தவர்களே

## என்கிறார் அமைச்சர் ஹக்கீம்

பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் உட்பட அந்த அமைப்பினர் அதிகாரம் படைத்தவர்களின் உதவியுடனேயே, ஜாதிக பல சேனா நடத்திய ஊடக சந்திப்பை குழப்பியதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

சம்பவம் நடந்த போது பொலிஸார் செயற்பட்ட விதம் இதனை உறுதிப்படுத்தியது. அண்மையில் நடந்த இவ்வாறான சம்பவங்களை ஆராயும் பொழுது இலங்கையில்

19 ஆம் பக்கம் பார்க்க

## தீயணைப்பு பாதுகாப்பு வாகனம் மாநகர சபைக்கு கையளிப்பு




எட்டு மில்லியன் ரூபா செலவில் யாழிற்கு புதிதாக அவசர தீயணைப்பு பாதுகாப்பு வாகனம் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் 12மணியளவில் யாழ்.மாநகர சபையில் வைத்து பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் யாழ் மாநகர சபைக்கு இந்த வாகனம் கையளிக்கப்பட்டது

மேலும் இந்த நிகழ்வில் யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ். மாநகர ஆணையாளர் பிரணவநாதன் மற்றும் யாழ் மாநகர சபை ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## தண்ணீரில் அரசியல் நடாத்தி மீளவும் தமிழரை அழிக்கச் சதி

### உதயன் எம்.பி. குற்றச்சாட்டு



திருகோணமலை மாவட்டத்தில் புலி அமைப்பில் இருந்த எழிலனால் அன்று மாவிலாற்றில் தண்ணீருக்குள் எறியப்பட்ட இனவாத நெருப்பு எமது எத்தனையோ தமிழ் உறவுகளை அழித்தது தற்போது இரணைமடு குடிநீர் திட்டத்தில் மண் அள்ளி வீசி தமிழ் மக்களிற்கே குடி நீர் இல்லாமல் வறட்சியினால் தவிக்க வைத்து அழிக்க வழியமைக்கின்றனர். என நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை புதுவருட சந்தையினை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தாகம் தீர்க்கும் தண்ணீரில் அரசியல் செய்யும் இவர்கள் மக்களிற்கு ஒருபோதும் எதையும் பெற்றுத்தரப்போவதில்லை. யாழ். மாவட்ட மக்களிற்கு இரணமடுத்தண்ணீரினை வழங்கக் கூடாது என எண்ணும் தமிழ் தேசியக்கூட்டமைப்பினர் தேர்தல் காலங்களிலும் யாழ். மாவட்ட மக்களிடம் வாக்கு மட்டும் எவ்வாறு கேட்கப்போகின்றனர். யாழ் மாவட்ட மக்களிற்கு குடிநீரினைக் கூட வழங்க கூடாது என எண்ணும் இவர்கள் தமிழ் மக்களிற்காய் எதைச்செய்யப் போகின்றனர். தமிழ் மக்களிற்கு தாகம் தீர்க்கும் குடிநீர் திட்டத்தில் முட்டுக்கட்டையாக இருக்கும் இவர்கள் தமிழருக்கு தீர்வை பெறுவோம் என கங்கணம் கட்டி திரிகின்றனர்.

குடிநீர் யாழ் மாவட்டத்தில் பற்றாக்குறையாகவுள்ளது என்பது அனைவரும் அறிந்த விடயம் சில பிரதேசங்களில் குடிநீர் இல்லாமல் விலங்குகள் இறக்க ஆரம்பித்துள்ளன இதே நிலை தொடருமாயின் யாழ். மாவட்டத்தில் குடிநீர் அற்றுப்போகும் நிலையில் பல பிரதேசங்கள் உள்ளன.

யாழ் மாவட்டம் மட்டுமன்றி கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேசமும் குடிநீரால் மிகவும் பாதிப்படைந்துள்ளது இந்நிலையில் குடிநீர் பிரச்சினையில் அரசியல் மேடை அமைக்கின்றனர் தமிழ்தேசியக்கூட்டமைப்பினர்.

தமது பதவிகளுக்கும் சுகங்களிற்குமாக மக்களை வாக்களிக்கச் செய்வதற்கு தேர்தல் காலங்களில் இனவாதம் பேசினால் மக்களை இலகுவாக ஏமாற்றி வாக்குகளை அபகரிக்க முடியும் என நன்கு அறிந்தவர்கள் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர். இவ்வாறான சுகபோக அரசியல் வாதிகளை என்று மக்கள் இனங்கண்டு மக்கள் மத்தியிலிருந்து வீசி எறிகின்றனரோ அன்று தான் எமது தமிழ் மக்களிற்கு பொற்காலம் மலரும் என ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திர அலன்ரின் உதயன் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஊர்காவற்றுறை பிரதேசசபைத் தவிசாளர் ஜெயகாந்தன், யாழ்மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் இரகுநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சமாதானம், மழை வேண்டி யாழில் ஆன்மீகப் பேரணி

பிறக்கின்ற புதுவருடத்தில் உலகில் சமாதானம் நிலவ வேண்டும் என்றும் மழை பெய்து பூமி செழிக்க வேண்டுமென்றும் இறைவனிடம் வேண்டுதல் செய்யும் ஆன்மீகப் பேரணியொன்று இன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது. இலங்கை சைவ மகா சபையும் அகில இலங்கை திருமுறை மன்றமும் இணைந்து இந்தப் பேரணியை ஏற்பாடு செய்துள்ளன.

காலை 9 மணிக்கு யாழ்.சத்திரத்துச் சந்தி ஞானவைரவர் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகின்ற இந்தப் பேரணியானது யாழ்.சிவத்தொண்டன் நிலையம் வரை இடம்பெறவுள்ளது. இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள திருமுருக கிருபானந்தவாரியாரின் வழித்தோன்றலான சக்திவேல் முருகனார் குழுவினரும் இந்தப் பேரணியில் கலந்துகொள்ளவுள்ளனர்.

எனவே, சிவனடியார்கள், சிவத தொண்டர்கள், சிவ மங்கையர்கள், வர்த்தகர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரையும் இந்த ஆன்மீகப் பேரணியில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.(இ)


### சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன் என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை

இல.6 கனகசபை லேன்
சிவலிங்கப் புளியடி
வண்ணார் பண்ணை
யாழ்ப்பாணம்.
0212228680, 0775925088

(C/3376)


## தமிழ்,சிங்களப் புத்தாண்டு விளையாட்டு விழா

சாவகச்சேரி நகராட்சிமன்றமும் சாவகச்சேரி பொலிஸாரும் இணைந்து நடாத்தும் தமிழ் சிங்கள புத்தாண்டு விளையாட்டு விழா நாளை சாவகச்சேரி நகரசபை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், மாகாணசபை உறுப்பினர் கே.சயந்தன், யாழ்.மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், பீ.எம்திலகரட்ண, யாழ்.பிரதிப் பொலிஸ் மா அதிபர் கே.எல்.பி. ரோகான் டயஸ், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நி.விமலசேன, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொ.ஜக்சீல் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

காலை 6 மணிக்கு பெண்கள் ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியும் கிரிக்கெட், கபடி, கயிறிழுத்தல் என்பன இடம்பெறுவதுடன் முட்டி உடைத்தல். யானைக்கு கண்வைத்தல், போத்தலில் நீர்நிரப்புதல், தேசிக்காய் கரண்டி ஓட்டம், சங்கீதக்கதிரை என்பன இடம்பெறுவதுடன் விசேடவான வேடிக்கைகளுடன் பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

(இ)

## துவிச்சக்கரவண்டிகள் வழங்கும் நிகழ்வு

(முழங்காவில்)

கற்றலில் துலங்கும், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு முழங்காவில் கிருஸ்ணாநகர் கிருஸ்ணர் கோயில் அறநெறிப் பாடசாலையின் ஒழுங்கமைப்பில் 12 துவிச்சக் கரவண்டிகள் வழங்கும் நிகழ்வு இன்று நண்பகல் 1 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இ.குபேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் தொண்டுநாத சுவாமிகள் கலந்து கொண்டு அருளுரை வழங்கவுள்ளார். (112)


## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 247 | திகதி 2014.04.11 | வர்ணம் நீலம்

வெற்றி இலக்கங்கள்

04 33 39 56 Y (ஆங்கில எழுத்து)

பரிசுத் தொகை ரூபா. 16,789,240/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 17 | 850,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 203 | 203,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 393 | 393,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9614 | 576,840/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4998 | 199,920/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 126759 | 2,535,180/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 18406 | 368,120/- |
| நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 16,789,240/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 6,126,060/- |

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 17,036,980/-

2014.04.18ம் திகதி வெள்ளிகிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது நீல வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும். நியத்த ஜய

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை.
யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47

(C/3379)

web : www.dlb.lk



## பாராட்டி வாழ்த்துகிறோம்



ஜோதிடர் வித்தியா ரத்னா
V.A சிவராசா

அவர்கள் சமய, சமூக, கலை, கலாசார பொது விடயங்களில் ஈடுபாடு கொண்டுள்ளவர்களுடன் தெரிவு செய்யப்பட்ட கல்விமான்களுக்கும் வர்த்தகர்களுக்குமான சமூக சேவையாளர் பட்டம் பெற தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவர் மேலும் பல சிறப்புக்கள் பெற்று பல்லாண்டு காலம் வளமோடு வாழ இனிதே வாழ்த்துகிறோம்.

திரு.திருமதி ரமணன் ஆனந்தி
குடும்பத்தினர்
கனடா

(C/3399)


## இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் நிலவுரிமை பெற்ற நீர்ப் பயனாளிகளின் இடாப்பைத் திருத்துதல்

இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் நீர் உரிமை பெற்றுக்கொண்ட நீர்ப்பாசன நிலங்களில் இடாப்பை மீளத் திருத்திக் கொள்வதற்கான குளக்குறியீட்டுப்பதிவேடு தயார்ப்படுத்துவதற்கென விண்ணப்பங்கள் மேற்குறிப்பிடப்படும் திட்டத்தின் கீழ் உள்ளடங்கும் அனைத்து நில உரிமையாளர்களிடமிருந்தும் கோரப்படுகின்றன.

இதற்கான மாதிரி விண்ணப்பப்படிவத்தினை தங்கள் பிரிவுக்கான பெரும்பாக அலுவலரின் காரியாலயத்திலோ, கிளிநொச்சி கமநல அபிவிருத்தி அலுவலகத்திலோ பெற்றுக்கொள்ள முடியும். உரிய மாதிரிப்படிவத்தில் அலுவலர்களிடம் 15.05.2014 இற்கு முன்னராகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். உரிய திகதிக்குப் பின்னராகச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

நீர்வரி இடாப்பின் திருத்தத்திற்கமையவே இனிவரும் காலங்களில் நீர் வழங்கல், உர விநியோகம் காப்புறுதி வசதிகள் என்பன அமுலாக்கப்படும் என்பதனையும் இத்தால் அறியத்தருகிறேன்.

அரசாங்க அதிபர்
கிளிநொச்சி மாவட்டம்

(C/3645)

# மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்க அதிகாரிகள் முன்வரவேண்டும்

## குடிநீர் திட்ட உரிமையாளர்

கடந்த ஏழு வருடங்களாக எமது சொந்த செலவில் வலி. தெற்கு மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கி வந்தோம் தற்போது மக்கள் குடிதண்ணீருக்காக அலைகிறார்கள் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் குடிதண்ணீர் விடயத்தில் பொருத்தமான நடவடிக்கை எடுத்து தாகம் தீர்க்க முன்வரவேண்டும்.

இவ்வாறு சர்வதேச நீர்த்தின நிகழ்வில் கலந்து கொண்ட மூளாய் குடிதண்ணீர் திட்ட உரிமையாளர் திருமதி பேபி ரோஜா ஸ்கந்தகுமார் தெரிவித்தார்.

வலி.மேற்கு பிரதேச சபையில் சர்வதேச நீர்த்தின விழா இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட திருமதி பேபிரோஜா ஸ்கந்தகுமார் நீரால் பரவக்கூடிய நோய்களும் தடுப்பு முறைகளும் தொடர்பாக கருத்துரை வழங்கிக் கொண்டிருந்த போது யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறைத் தலைவர் வைத்திய கலாநிதி இ.சுரேந்திரகுமார் குறுக்கிட்டு குடி தண்ணீரில் மலக்கிருமி உள்ளது என தெரிவிக்கப்பட்டால் அதனை தெரிவிக்கும் பொது சுகாதார பரிசோதகர் அவ்வறிக்கையை தெரிவிக்க வேண்டும் அல்லவா எனக்கோரினார். இதற்கு மருந்துவர் இவ்வாறான அறிக்கைகளை தெரிவிப்பது சுகாதார நடைமுறைக்கு பொருத்தமானதென்பகும் இவ்வாறான பரிசோதனைகளை உள்ளூராட்சி சபை யாழ்மருத்துவ பீடத்தில் அல்லது யாழ்ப்பாணம், வவுனியா தேசிய நீர்வழங்கல் சபைகளின் ஊடாகப்பெற்று வழங்கலாம் எனவும் தெரிவித்தார்.(92)

# குறும்திரைப்படப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரல்




குறுந்திரைப்பட உருவாக்கத்தில் ஈடுபட்டுள்ள இளையவர்களின் திறமைகளை சர்வதேச அரங்கிற்கு கொண்டுசேர்க்கும் நோக்கோடு ஹிமாலயா கிரியேசன்ஸ் தனியார் நிறுவனமானது 48 மணிநேர குறும்பட போட்டியினை முதன் முறையாக இலங்கையில் அறிமுகப்படுத்தி உள்ளது. இப்போட்டியில் சிறந்த குறும்படமாகத் தெரிவாகும் குறும்படம் முதலாவதாக அமெரிக்காவில் பிலிமாபலூசா (filmapalooza) நிகழ்வில் திரையிடப்படுவதோடு அங்கு சிறந்த குறும்படமாகத் தெரிவாகும் குறும்படத்திற்கு 5000USD பணப்பரிசும் ஏனைய விருதுகளும் வழங்கப்படும்.

அமெரிக்காவிலிருந்து தெரிவாகும் சிறந்த 10 குறும்படங்கள் இறுதியாக கேன்ஸ் இன் குறும்பட பகுதியில் திரையிடப் படுவதோடு தெரிவாகும் சிறந்த குறும்படத்திற்கு விருது வழங்கப்படும் எனவும் ஹிமாலய கிரியேசன்ஸ் தனியார் நிறுவனத்தின் தலைவர் ரெ.துவாரகன் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

இப் போட்டியானது தற்போது 120 நகரங்களில் இடம்பெறுவதோடு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்றுவரும் ஒரு சர்வதேச குறும்படப்போட்டியாகும், பதிவு செய்யும் அனைத்து குழுக்களும், தாம் குலுக்கல் முறையில் தெரிவு செய்யும் தலைப்பிற்கு ஏற்ப கதையினை உருவாக்குவது மட்டுமல்லாமல் தரப்படும் ஒரு வசனம், ஒரு கதாபாத்திரம் மற்றும் ஒரு பொருளினையும் இணைத்து 48 மணிநேரத்தில் குறும்படத்தினை உருவாக்கி, முழுமையாக்கி சமர்ப்பிக்க வேண்டும்.

48 மணிநேரத்தில் சில வரையறைகளுடன் குறும்பட உருவாக்கத்தில் ஈடுபடுவதால் மற்றைய குறும்படப்போட்டிகளைகப் போலல்லாது இப் போட்டியில் சவாலோடு சேர்ந்த ஒரு சுவாரசியம் இருப்பதோடு குழுவாக சேர்ந்து செயற்படுதல், திட்டமிடல், நேரத்திட்டமிடல், குறுகிய நேரத்தில் ஆக்கத் திறனை விருத்தி செய்தல் போன்ற விடயங்களையும் போட்டியாளர்கள் கற்றுக்கொள்ள முடியும்.

இது வளர்ந்து வரும் எமது சினிமாத் துறையில் கலைஞர்களிடையே விருத்தி செய்ய வேண்டிய சில பண்புகளென்பதால் குறிப்பிட்ட இப் போட்டியினை தெரிவுசெய்து இங்கு கொண்டுவந்தமைகான முக்கிய நோக்கங்களுள் இதுவும் ஒன்றாகும் என்று தெரிவித்தார்.

இப் போட்டி, எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு ஆம்பிக்கப்பட்டு 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு முடிவடையும் இதற்கான பதிவுகளை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளவேண்டும்.

# கைதடி முதியோர் இல்லத்தில் புத்தாடை வழங்கும் நிகழ்வு

கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கி வாழும் முதியோர்களுக்கு வடமாகாண சமூக சேவைத் திணைக்களத்தினால் நேற்று முன்தினம் புத்தாடைகள் வழங்கப்பட்டன.

புத்தாண்டை முன்னிட்டு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் இல்லத்தில் பல விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைக் கல்லூரி விரிவுரையாளர் திருமதி கிருஷாந்தி ரவீந்திரன் மாணவிகளின் நடனம் ஆகியன இடம்பெறவுள்ளதுடன், ரவீந்திரனால் பழைய சினிமாப் பாடல்களும் பாடப்படவுள்ளன.

சிறிப்புச் சொற்பொழிவுகளை ஓய்வுபெற்ற முன்னாள் மாவட்ட நீதிபதி விகடகவி மு.திருநாவுக்கரசு, சட்டத்தரணி ஜொனி மதுரைநாயகம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

சமூக சேவை உத்தியோகத்தர் வீ.சிவராஜா தலைமையில் பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது. "ஆண்கள் பெண்களை அதிகம் நேசிப்பது திருமணத்துக்கு முன்னரா? பின்னரா? என்னும் தலைப்பில் இப்பட்டிமன்றம் நடைபெறும்.

புதுவருடத்தில் முதியவர்களுக்குக் கைவிசேஷமும் வழங்கப்படவுள்ளது. (137)

# கிராமிய நீர்வழங்கல் சுகாதாரத்திட்டம் 4500 குடும்பங்கள் பயன்பெறுவர்

(யாழ்ப்பாணம்)


சமூக மயப்படுத்தப்பட்ட கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதார திட்டத்தின் கீழ் 4500 வரை யிலான குடும்பங்கள் பயன்களை பெறுவுள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் சமூகவியலாளர் பாலகுமாரி ஐங்கரன் தெரிவித்தார்.

யாழ்.தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையில் இடம் பெற்ற திட்ட முன்னேற்ற மீளாய்வு தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிராமப்புறத்திலுள்ள 1900 வறிய குடும்பங்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்குதல், வறுமைக் கோட்டிற்குட்பட்ட550 குடும்பங்களிற்கு குறைந்த செலவிடல் கூட கழிவு நீர் தொட்டியுடன் கூடிய மலசல கூடங்கள் அமைத்தல், நீர்மற்றும் சுகாதார வடிவமைப்பு, நிர்மாணம்,இயக்குதலும் பராமரித்தலும் மற்றும் நிதிமுகாமைத்துவம் உள்ளிட்ட பயிற்சி நெறியினை 200 மக்களுக்கு வழங்குதல், 1900குடும்பங்களுளுக்கு சுகாதார விழிப்புணர்வுமற்றும் சுத்தமான குடிநீர் பற்றி கல்வியறிவு வழங்குதல் ஆயிரம் பயனாளிகளுக்கு வேலைக்கான கொடுப்பனவு வழங்குதல் என்பன அடங்குகின்றது.

சுகாதார முன்னேற்ற திட்டத்தின் கீழ் 40 மலசல கூடங்கள் கட்டப்பட்டுள்ளதுடன் மேலும் 36 மலசல கூடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. எனஅவர் மேலும் தெரிவித்தார். (இ.)

# நாட்டைக் குழப்பிச் செய்யும் அரசியலும் நானூற்றுச் சொச்சம் பதவிகளும்!




'ஆடத்தெரியாதவன் மேடை சரியில்லை' என்று சொல்வதைக் கேட்டிருக்கிறோம்.

அப்படித்தானிருக்கிறது, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரின் 'மேடை சரியில்லை' என்ற கதையும்.

வடக்குக் கிழக்கில் அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தரப்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே இருக்கிறது.

அதிகமான பிரதேச சபைகளைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே கைப்பற்றி நடத்தி வருகிறது. வடக்கு மாகாணசபையையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே ஆட்சி செய்கிறது.

ஆனால், இதனால் தமிழ் மக்கள் என்ன வகையான நன்மைகளைப் பெற்றிருக்கிறார்கள் – பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்?

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் பிரதேச சபை – நகரசபை உறுப்பினர்களாகவும் மாகாணசபை உறுப்பினர்களாகவும் உள்ள கூட்டமைப்பினர் மக்களுக்காக என்ன மாதிரியான சேவைகளை, பணிகளைச் செய்து வருகிறார்கள்? எப்படியான திட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள்? அதில் துறைசார்ந்தவர்களின் பங்களிப்புகள் எப்படியிருக்கின்றன? அப்படியான பங்களிப்பாளர்களை அவர்கள் அழைத்து தங்களோடு இணைத்துள்ளனரா?

இந்த மூன்று அதிகார நிலைகளையும் பெற்றுள்ள கூட்டமைப்பினர் இதுவரையில் மக்களுக்குச் செய்துள்ள பணிகளினால் கிடைத்த பெறுபேறுகளும் சாதனைகளும் என்ன? அரசியல் ரீதியாக இவர்கள் மேற்கொண்ட முயற்சிகளின் பலாபலன்கள் என்ன?

இதைப்பற்றியெல்லாம் யாருக்காவது தெரிந்தால் தயவு செய்து அதைச் சொல்லுங்கள்.

குறிப்பாக நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் மாகாணசபை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்காக அரும்பாடு பட்ட உத்தியோகத்தர்கள், படித்தவர்கள், மதகுருமார் போன்றோர் இதற்கான பதிலைச்சொல்லியே தீர வேண்டும். குறைந்த பட்சம் தங்களுடைய மனச்சாட்சிக்காவது பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்.

அப்படி நீங்கள் இதற்கான பதிலைச் சொல்லவில்லை என்றால்....

குற்றம் செய்பவரைக் காட்டிலும் குற்றத்துக்குத் தூண்டியவரும் குற்றத்துக்கு ஆதரவளித்தவரும் அதற்கு ஒத்துழைத்தவருமே மிகக் கொடியவர் என்று சொல்லப்படுவதுண்டு. அத்தகைய குற்றத்தை இழைத்தவர்களாக வரலாற்றில் நீங்களே பதியப்படுவீர்கள்.

கூட்டமைப்பின் உறுப்பினர்கள் எவரும் இந்த மண்ணிலே நடக்கின்ற நல்ல காரி யங்கள் எதையும் ஆதரித்தவர்களும் இல்லை. அதை விரும்பியவர்களும் இல்லை. தமிழ்த்தேசியவாதிகளின் இதயம் என்றும் தமது சொந்த மக்களின் நல் வாழ்க்கைக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்று சிந்திப்பதில்லை. அத்தகைய எண்ணம் அவர்களுடைய இதயத்தில் என்றுமே இருந்ததில்லை.

ஆனால், இத்தகையவர்களுக்காகவே பல படித்தவர்களும் பெண்ணாம் பெரிய மதபோதகர்களும் துணை நிற்கிறார்கள். 'மாமா வேலை' பார்க்கிறார்கள்.

நல்ல வீதிகள் அமைக்கப்பட்டபோது, பல்கலைக்கழக வளாகங்கள் உருவாக்கப்பட்டபோது, பொதுச்சந்தைகள் கட்டப்பட்டபோது, தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டபோது, நகர அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டபோது, கல்விச் சாலைகள் நிறுவப்பட்டபோது, போக்குவரத்து வசதிகள் அதிகரிக்கப்பட்டபோது, மக்களுடைய தொடர்பாடல் விருத்தி செய்யப்பட்டபோது, அனைத்துப் பிரதேசங்களுக்கும் மின்சாரம் வழங்கப்படும்போது... ஆஸ்பத்திரிகள் நிர்மாணிக்கப்பட்டபோது... என எந்த நன்மைக்காரியங்களின்போதும் கூட்டமைப்பினர் அங்கே நின்றதில்லை.

இதையெல்லாம் வேண்டாம் என்றே தொடர்ச்சியாக எதிர்த்து வந்தனர். இதைச் 'சலுகை', 'பிச்சை' என்றெல்லாம் கொச்சைப்படுத்தியும் வந்தனர். ஆனால், இவை அனைத்தும் மக்களுக்கானவை. மக்களுடைய உரிமைகள். மக்களின் வாழ்க்கைக்கான அடிப்படைத்தேவைகள். (மக்களின் தேவைகளும் உரிமைகளும் இவர்களுக்குச் சலுகையாகவும் பிச்சையாகவும் தெரிகிறது).

மக்கள் தங்களின் சொந்த இடங்களில் – தங்களின் சூழலில், தங்கள் வாழ்க்கையைச் சுயமாக வாழும்போதே உண்மையான தேசியம் கட்டமைக்கப்படுகிறது. இதற்கு அவர்கள் வர்ழ்கின்ற பிரதேசங்களில் அடிப்படை வசதிகள் உருவாக்கப்பட வேண்டும். இதைச் செய்வது அபிவிருத்தி அரசியலாகட்டும், அடிப்படைத்தேவைகளை நிறைவேற்றும் அரசியலாகட்டும். அது ஒரு தேசியத்துக்கான அரசியல் என்பேன். ஆனால், இதைச் செய்த துரையப்பா துரோகி. ஜீ.ஜீ. பொன்னம்பலம் துரோகி. டக்ளஸ் தேவானந்தா விரோதி... என்று பொய்யுரைக்கப்படுகிறது.

ஏன் இந்தப் பொய்யுரைப்பு என்றால், இவர்களைப் பொறுத்தவரையில் குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பதே முக்கியம். சனங்களின் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தி, இனவாதத்தை வளர்த்து அதன்மூலமாகக் கிடைக்கின்ற ஆதாயங்களை அனுபவிப்பதற்காகவே, இந்த அரசியல் பிழைப்பை இவர்கள் மிகச் சுலபமாகச் செய்து வருகிறார்கள்.

அதேவேளை இவர்கள் சொந்த மக்களுடன் இணைந்து அவர்களுக்குச் சேவை செய்வதற்குப் பதிலாக அந்நியருக்குச் சேவகம் செய்கிறார்கள். அந்நியச் சக்திகளின் கால்களைக் கழுவுகிறார்கள்.

இதை எமது மக்கள் உணர்வதில்லை. இதற்கு தமிழ்ப்புத்திஜீவிகளிற் பலரும் ஊடகங்களும் விடுவதுமில்லை. இவர்களுடைய கண்ணை அதிகமாக மறைப்பது இனவாதமே. இந்த இனவாதம் இவர்களுடைய அறிவையும் மறைத்து விடுகிறது.

எனவேதான் இவர்கள் எப்போதும் பிழையான பக்கம் நிற்கிறார்கள்.

'தமிழ்ச்சாதியின் விதியே விதியே உன்னை என்னென்று சொல்வேன்....'

மிகப்பெரிய உண்மை இது, பலமே வாழ்வு
பலவீனமே மரணம். - *விவேகானந்தர்.*


தினப்பதிப்பு
**தினமுரசு**
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
**Online : www.emurasu.com**


## என்ன பிடுங்குகிறார்கள்?

தற்செயலாக விக்கிபீடியாவை மேய்ந்து வருகையில், சுவாரஷ்யமான, ஆனால் தேர்தலுக்குத் தேர்தல் பொங்குமாந் தமிழர்களாகிய நாம் சற்றே சுரணையடையக் கூடிய சில புள்ளிவிபரங்கள் கண்ணுக்குப் பட்டன.

தமிழ்மக்கள் தங்கள் தலைவிதியைத் தாரைவார்த்துக் கொடுத்திருக்கிற, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கிற அந்தத் தேர்தல் கூட்டுக்கு நாடாளுமன்றத்தில் பதின்மூன்று உறுப்பினர்கள், வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளில் மொத்தமாக 41 உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

வடக்கு மாகாண சபையும் வடக்கு கிழக்கிலுள்ள 76 உள்ளூராட்சி சபைகள் அதாவது நகரசபைகளும் பிரதேச சபைகளும் இவர்களது ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நானூறுக்கும் மேற்பட்டவர்கள் (யார் யாரென்று எத்தனை பேரை மக்களுக்கு நினைவில் உள்ளது?) மக்களால் தெரிவுசெய்யப்பட்ட, மேற்படி சபைகளின் உறுப்பினர்களாக அரசாங்கத்திடமிருந்து மாதாமாதம் சம்பளங்களைப் பெற்றுவருகிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், தெற்கிலுள்ள சபைகளின் உறுப்பினர்களைக் கூட போனடித்துக் கேட்டு, உறுப்பினர்களின் ஏனைய வாகன மற்றும் வசதி சலுகை வாய்ப்புகள் என்னென்ன என்று விசாரித்து அறிந்து கொள்கிறார்கள். சபை மூலமாகவும் அரசாங்கத்திடம் அதையெல்லாம் கேட்டுப் பெற்றுக் கொள்கிறார்கள்.

முதலமைச்சர் கூட, கொழும்புக்குப் போய்வர தனக்கான இலவச விமானப் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்துதரும்படி எழுத்துமூலம் கேட்டு ஆளுநரிடம் அனுமதியும் பெற்றுக் கொள்கிறார். எம்பிமார் என்றால் நேரடியாக ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களிடமே தங்களுக்கான சொந்த "டீல்"களை வைத்துக் கொள்கிறார்கள்.

தமிழ் மக்களின் தேவைகளுக்காக என்று இவர்கள் இதுவரை செய்திருப்பது எவையெவை என்று யாருக்காவது சொல்ல முடியுமா?

இவர்களது வீம்புப் பேச்சுக்களால் உருவான யுத்தத்தாலும், பிறகு இப்போதும் இவர்களது "தீர்வை நெருங்கவிடா"ச் சண்டித்தனப் பேச்சுக்களாலும் முற்றுமுழுதான வாதைகளைத் தொடர்ந்து அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் மக்களல்லவா!

இவர்களது உணர்ச்சிகரப் பேச்சுக்களில் மயங்கி, இவர்களுக்கே வாக்குகளை அள்ளிப் போட்டுக் கொண்டிருக்கும் அந்த மக்களின் வாழ்வை நிமிர்த்துவதற்கென அரசாங்கத்திடம் இவர்கள் எதையாவது கேட்டதுண்டா?

தங்களுக்குத்தேவையான சலுகைகளை வளைந்து குழைந்தோ இளித்துக் கெஞ்சியோ கேட்டுக் கொள்ளும்போது மட்டும் ஏன் அந்தத் "தமிழ்வீரம்" வந்து இவர்களைத் தடுப்பதில்லை? மக்களுக்கான வாழ்க்கைத் தேவைகள் என்று வந்தால் மட்டும், "அரசாங்கத்தின் பிச்சை நமக்குத் தேவையில்லை" என்ற வீறாப்பு முன்னுக்கு வந்துவிடுகிறதே!

அற்ப சலுகைகளும் அரசாங்கப் பிச்சையும் மக்களுக்கு வேண்டாம் என்று தாங்களாகவே விண்ணாணம் போடுகிறவர்கள், தேர்தல் வாக்குறுதியில் அந்த மக்களுக்குச் சொன்னபடி அரசியல் தீர்வை எடுப்பதற்காவது அரசுடன் பேசவேண்டுமல்லவா!

இந்தியாவைக் காட்டி முடிஞ்சால் அமெரிக்கா; அமெரிக்காவைக் காட்டி அது முடிஞ்சால் தென்னாபிரிக்கா எண்டு இந்தச் "சுத்து"களெல்லாம் எப்ப நிக்கும்? தமிழ்மக்களும் "சுத்துப்பட்டுக் கொண்டே" இருப்பதிலிருந்து எப்ப மீளுவார்கள்?

மக்களுக்குச் சேவை செய்யவென்று சொல்லி வாக்குகளைப் பெற்றுக்கொண்ட, இந்த நானூறுக்குமதிகமான பேரும், அரசாங்கச் சம்பளத்தையும் "அற்பமில்லாத" சலுகைகளையும் ஒருகுறையுமில்லாமல் பெற்றுக்கொண்டு, தமிழ்மக்களின் வாழ்க்கைக்குக் காட்டுவதென்ன – வருசாவருசம் ஜெனிவாத் திருவிழா தானா?

அல்லது அப்பப்ப ஆறு, குளங்களில் போய்ப் பார்த்தீனியம் பிடுங்குவதா?

-ஆசிரியர்.

# காகித ஆலையில் களேபரம்

# ஊழியர்கள் திரண்டுபோராட்டம்

## அதிகாரிகள் அறையில் வைத்து அடைப்பு

(கொழும்பு)

வாழைச்சேனை கடதாசி ஆலையின் ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள நிலுவையில் இரண்டு மாதச் சம்பளத்தினை வழங்குவதாக நிர்வாகம் அறிவித்து, வழங்காத நிலையில் ஐந்து பேரை ஊழியர்கள் அறையில் வைத்து பூட்டிய சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

கணக்காளர், முகாமையாளர், காசாளர் மற்றும் அலுவலக பணியாளர்கள் இரண்டு பேர் உட்பட ஐந்து பேரை நிர்வாகப் பகுதி காரியாலயத்தில் இருந்து வெளியேறாதவாறு பூட்டி வைத்தனர்.

பின்னர் இந்த இடத்திற்கு வருகை தந்த வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் ஆலையின் ஊழியர்களோடு கலந்தாலோசித்ததன் பின்னர் பூட்டப்பட்ட கதவு திறக்கப்பட்டது.

இதன் பின்னர் நிர்வாகத்துடனும், ஆலை ஊழியர்களுடனும் கலந்தாலோசித்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, ஊழியர்களுக்கான சம்பளம் வழங்கப்படும் என்று நிர்வாகத்தினர் கூறியதாகத் தெரியப்படுத்தியதை அடுத்து கலைந்து சென்றனர்.

இதேவேளை பாசிக்குடாவில் உள்ள உல்லாச விடுதிகளுக்கு வாகனேரி குளத்தில் இருந்து பெறப்படும் நீர் காகித ஆலையில் சுத்திகரிக்கப்பட்டே பாசிக்குடாவிற்கு குழாய் மூலம் செல்கின்றது. ஊழியர்கள் அந்த நீரையும் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் திறந்துவிடாமல் இருந்ததுடன், பொலிஸாரினால் வழங்கப்பட்ட உறுதிமொழியை அடுத்து அந்த நீர் விநியோகத்தையும் மாலை 6 மணி முதல் வழங்கியுள்ளனர்.

# பொதுபலசேனா செயலாளருக்கு மனநல சிகிச்சை வேண்டும்

## கிண்டல் செய்கிறார் அமைச்சர் டிலான்

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர், ஜாதிக பலசேன அமைப்பின் செயலாளர் பூஜித வட்டரெக்க விஜித தேரர் ஆகிய இருவரையும் மனநல மருத்துவர்களிடத்தில் அனுப்ப வேண்டும் என வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

இவர்கள் இருவரும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் எனவும் இவர்களின் செயற்பாடு பௌத்த ஆகமத்திற்கு தீங்கு அளிப்பதே தவிர நன்மை பயப்பது அல்ல எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஜாதிக பலசேனா அமைப்பு கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பிற்கு சென்ற ஞானசார தேரர் உள்ளிட்ட குழுவினர், அங்கு பதற்ற நிலையை தோற்றுவித்தமை தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

# புகைத்தல் பொருட்கள் கடத்தல் சுங்க சோதனையில் சிக்கியது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் நாட்டிற்குள் எடுத்துவரப்பட்ட 10 மில்லியன் ரூபா பெறுமதியான வெங்காயம் உள்ளிட்ட பொருட்கள் இலங்கை சுங்க அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

12,500 கிலோ கிராம் வெங்காயம், வெங்காய விதைகள், 1468 பாதணிச் சோடிகள், புகையிலை மற்றும் வெளிநாட்டு புகைத்தல் பொருட்கள் இதில் அடங்குவதாக சுங்கத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவை இந்தியாவிலிருந்து எடுத்து வரப்பட்டுள்ளன. கிரான்ட்பாஸில் வைத்து கைப்பற்றப்பட்ட இந்தப் பொருட்கள் கடந்த 7ஆம் திகதி கொழும்புக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

# குடும்பநல உத்தியோகத்தர்கள் பகிஸ்கரிப்பை கைவிட்டனர்

(கொழும்பு)

தாதியர்களுக்கு பிரசவ பயிற்சிகள் வழங்கப்படுகின்றமையை ஆட்சேபித்து 11 நாட்களாக முன்னெடுக்கப்பட்டிருந்த தமது பணிப்பகிஷ்கரிப்பை கைவிடுவதற்கு அரச குடும்பநல சுகாதார ஊழியர் சங்கம் தீர்மானித்துள்ளது.

சுகாதார அமைச்சருடன் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர், இந்தத்தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக் அந்த சங்கத்தின் தலைவர் தேவிகா கொடிதுவக்கு தெரிவித்தார்.

குடும்பநல சுகாதார உத்தியோகத்தர்களின் பணிப்பகிஷ்கரிப்புக் காரணமாக மகப்பேற்று சிகிச்சை நடவடிக்கைகள் தடைப்பட்டிருந்தன.

பிள்ளைகளுக்கான நோய் எதிர்ப்பு ஊசியேற்றல் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான ஆரம்பக்கட்ட சுகாதார சேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விமான எரிபொருள் கொள்கலன் தீயில் எரிந்து நாசம்

(கொழும்பு)

மத்தல விமான நிலையத்திற்கு விமான எரிபொருளை எடுத்துச் சென்ற கொள்கலன் வண்டி விபத்துக்குள்ளாகி தீக்கிரையாகியுள்ளது. இந்தச் சம்பவம் சூரியவெவ, மீகபுர பிரதேசத்தில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் நடந்துள்ளது.

கொழும்பு கொலன்னாவையில் இருந்து மத்தல விமான நிலையம் நோக்கி சென்ற கொள்கலன் வண்டியே இவ்வாறு தீப்பிடித்துள்ளது.

வீதி ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்த பஸ் வண்டி மீது கொள்கலன் வண்டி மோதியுள்ளது. விபத்துக்குள்ளான கொள்கலனில் 33 ஆயிரம் லீட்டர் விமான எரிபொருள் இருந்துள்ளது.

தீயினால் கொள்கலன் முற்றாக எரிந்துள்ளது. இந்த விபத்து காரணமாக ஏற்பட்ட இழப்பு இன்னும் மதிப்பிடப்படவில்லை.

## யாழ்ப்பாண சந்தியில் சுழல் காற்று

(கொழும்பு)

அனுராதபுரத்திலுள்ள யாழ்ப்பாண சந்தி மற்றும் மாத்தளை சந்தி பகுதிகளை ஊடறுத்து வீசிய கடும் காற்று காரணமாக 15 வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் நேற்றிமுன்தினம் கடும் காற்று வீசியுள்ளதாக அனுராதபுரம் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

காற்றினால் சேதமடைந்த வீடுகளின் உரிமையாளர்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.



# தமிழ் மக்களின் அரசியலில் ஜெனிவா ஒரு பின்னடைவு

■ சங்கர சிவன்

எதிர்பார்த்தது போலவே ஜெனிவா மகாநாட்டில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேறியிருக்கின்றது. இத்தீர்மானத்தை முற்றாக நிராகரிப்பதாகவும், அதில் சொல்லப்பட்டுள்ள எதையும் ஏற்கப்போவதில்லை என்றும் அரசாங்கம் சொல்கின்றது. தீர்மானத்தை அரசாங்கம் முற்றாக நிராகரிக்கும் பட்சத்தில் ஓரளவு பொருளாதாரத் தடையைச் சந்திக்க நேரிடும் என்றும் சில பொருட்களுக்கான விலைகள் அதிகரிக்கலாம் என்றும் அரசியல் மற்றும் பொருளாதாரத் துறைசார் நிபுணர்கள் சிலர் கூறுகின்றனர். ஜெனிவாத் தீர்மான விடயத்தில் அதிகூடிய அக்கறை எடுத்தவர்களான தமிழ்த் தலைவர்கள் இத்தீர்மானம் தமிழ் மக்களுக்குக் கிடைத்த மகத்தான வெற்றி என்று மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

ஜெனிவாவில் நிறைவேறிய தீர்மானத்தினால் வெற்றியீட்டியவர்கள் யார்? தோற்றுப் போனவர்கள் யார்? தமிழ் மக்களுக்கு மகத்தான வெற்றி என்பது எவ்வளவுக்குச் சரியானது? தீர்மானம் தொடர்பாக எழுகின்ற

**இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு காணப்படும் வரை தமிழ் மக்களின் எந்தப் பிரச்சினைக்கும் நிலையான தீர்வு கிடையாது. நியாயமான தீர்வு முழுமையான அதிகாரப் பகிர்விலேயே தங்கியுள்ளது. அதிகாரப் பகிர்வுக்குச் சாதகமான சூழ்நிலை கைதவறிப் போனதில் இன்றைய தமிழ்த் தலைமைக்குப் பிரதான பங்கு உண்டு. சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டம் உரிய முறையில் நிறைவேற முடியாத நிலையைத் தோற்றுவித்ததில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையுடன் தமிழ்த் தலைவர்களும் சம அளவில் பங்காளிகள். இது வரலாற்றின் பதிவு. அதிகாரப் பகிர்வுக்குச் சாதகமற்ற சூழ்நிலை இப்போது நிலவுவதற்கும் தமிழ்த் தலைவர்கள் பொறுப்பேற்க வேண்டும்.**

இக்கேள்விகளுள் மூன்றாவது கேள்வி பற்றிப் பார்ப்போம்.

ஜெனிவாத் தீர்மானத்தின் பிரதான அம்சங்களாகப் போர்க்குற்ற விசாரணை, அரசாங்கத்தின் பொறுப்புக் கூறல், பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தின் கீழான அதிகாரங்களை வட மாகாண சபைக்கு வழங்குதல் ஆகியவற்றைக் கூறலாம். வட மாகாண சபைக்கான அதிகாரங்களை வழங்குவதற்கு அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் பொறிமுறை ஏதும் சர்வதேச அரசியல் ஒழுங்கில் இருப்பதாகத் தெரியவில்லை. தீர்மானத்தை ஏற்க முடியாது என்று அரசாங்கம் கூறும் நிலையில் தீர்மானத்தின் அடிப்படையில் அதிகாரங்களை வழங்குவதற்கு மனித உரிமைகள் பேரவை என்ன நடவடிக்கையை எடுக்க முடியும்? அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையே இவ்விடயத்தில் அவசியமாகின்றது.

இந்த நடைமுறைச் சிக்கலை ஒருபுறத்தில் விடுவோம். பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழான அதிகாரங்களை வழங்குவது தானா தமிழ் மக்களின் பிரதான பிரச்சினை? அதற்கு மேல் அவர்களுக்கு வேறு எந்த உரிமையும் இல்லையா? வேறு எந்தத் தீர்வும் வேண்டாமா?

பதின்மூன்றாவது திருத்தத்தை அரசியல் தீர்வின் ஆரம்ப கட்டமாகவும் ஏற்க முடியாது என்று கூட்டமைப்புத் தலைவர்கள் அடிக்கடி கூறுகின்றார்கள். சர்வதேச சமூகம் இனப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தரும் என்றும் சொல்கின்றார்கள். அதே சர்வதேச சமூகம் தான் ஜெனிவா மாநாட்டில் பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழான அதிகாரங்களுடன் இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வுக்கான செயற்பாட்டை முடித்துக் கொண்டது. இதைத் தமிழ் மக்களுக்குக் கிடைத்த மகத்தான வெற்றி என்று கூறலாமா? ஜெனிவாத் தீர்மானம் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் மிகப் பெரிய பின்னடைவு என்பதுதான் உண்மையான நிலை.

இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு காணப்படும் வரை தமிழ் மக்களின் எந்தப் பிரச்சினைக்கும் நிலையான தீர்வு கிடையாது. நியாயமான தீர்வு முழுமையான அதிகாரப் பகிர்விலேயே தங்கியுள்ளது. அதிகாரப் பகிர்வுக்குச் சாதகமான சூழ்நிலை கைதவறிப் போனதில் இன்றைய தமிழ்த் தலைமைக்குப் பிரதான பங்கு உண்டு. சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டம் உரிய முறையில் நிறைவேற முடியாத நிலையைத் தோற்றுவித்ததில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையுடன் தமிழ்த் தலைவர்களும் சம அளவில் பங்காளிகள். இது வரலாற்றின் பதிவு. அதிகாரப் பகிர்வுக்குச் சாதகமற்ற சூழ்நிலை இப்போது நிலவுவதற்கும் தமிழ்த் தலைவர்கள் பொறுப்பேற்க வேண்டும்.

சாதகமற்ற சூழ்நிலை நிலவுகின்றது என்பதற்காக அதிகாரப் பகிர்வுக்கான முயற்சியைக் கைவிடலாமா என்ற கேள்விக்கு வருவோம்.

அதிகாரப் பகிர்வுக்கான முயற்சியைத் தமிழ் அரசியல் தலைமை கைவிட்டமையே அதிகாரப் பகிர்வுக்குச் சாதகமற்ற சூழ்நிலை உருவாகுவதற்குக் காரணமாயிற்று. சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டத்துக்குப் பகிரங்கமாக ஆதரவளித்து வந்த தமிழ்த் தலைவர்கள் இறுதி நேரத்தில் புலிகளின் செயலாணைக்குக் கட்டுப்பட்டு அத்தீர்வுத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்ததோடு நிற்காமல் புலிகளின் தனிநாட்டு நிகழ்ச்சி நிரலுடன் தங்களை இனங்காட்டிச் செயற்படத் தொடங்கினார்கள். இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வுக்கு எதிரான பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த பேரினவாத சக்திகளுக்கு இது தீனி போடுவதாயிற்று. தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக் கோரிக்கைக்குப் பின்னால் தனிநாட்டு நோக்கமே இருக்கின்றது என்பதைத் தமிழ்த் தலைவர்கள் வெளிப்படுத்திவிட்டார்கள் என்று பேரினவாதிகள் செய்த பிரசாரம் சிங்கள மக்கள் மத்தியில் எடுபடலாயிற்று. இவ்வாறு வளர்ந்தது தான் அதிகாரப் பகிர்வுக்குச் சாதகமற்ற சூழ்நிலை. சிங்களக் கடுங்கோட்பாட்டு வாக்கு வங்கியில் தங்கியிருக்கும் இன்றைய அரசாங்கம் இந்தச் சூழ்நிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றது.

புலிகளின் செயலாணையை ஏற்றுச் செயற்பட்ட தவறிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னும் விடுபடவில்லை. அரசியல் தீர்வைத் தவிர்க்கும் நோக்கத்துடனேயே இப்போதும் இவர்கள் செயற்படுகின்றார்கள். தனிநாட்டு நிலைப்பாட்டிலிருந்து விலகாதிருக்கும் புலம்பெயர்ந்த அமைப்புக்களுடனான உறவு அரசியல் தீர்வுக்கு எதிராக இவர்களைச் செயற்பட வைக்கின்றது. அரசியல் தீர்வு எவ்வளவுக்கு நிராகரிக்கப்படுகின்றதோ அவ்வளவுக்குத் தனிநாட்டுக்கான ஆதரவு தமிழ் மக்கள் மத்தியில் வளரும் என்ற கற்பனையில் மிதக்கின்ற புலம்பெயர் அமைப்புகளின் கட்டளையை மீற முடியாத அளவுக்குக் கூட்டமைப்புத் தலைவர்கள் கட்டுண்டிருக்கின்றார்கள். அதனால்தான் இவர்கள் தங்கள் அரசியல் செயற்பாடுகளை அரசியல் தீர்வைத் தவிர்க்கும் இலக்குடன் திட்டமிடுகின்றார்கள் அரசியல் தீர்வுக்கான திட்டமொன்றை முன்வைப்பதை நொண்டிச் சாட்டுகள் சொல்லித் தவிர்ப்பது, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்றித் தீர்வுக்கான ஆலோசனைகளை முன்வைக்க மறுப்பது, அரசியல் தீர்வை வலியுறுத்தும் வெகுஜனப் போராட்டங்களை ஏற்பாடு செய்யாதிருப்பது, இனப்பிரச்சினைக்குச் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் எனக் கூறி மக்களை ஏமாற்றுவது போன்ற சகல செயற்பாடுகளும் அரசியல் தீர்வைத் தவிர்க்கும் நோக்கத்தைக் கொண்டவை.

**தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை மேடைகளில் இவர்கள் பட்டியல் போடுகின்றார்களேயொழிய அப்பிரச்சினைகளுக்கான தீர்வுக் கோரிக்கைகளை முன்வைப்பதில்லை. தீர்வுக்காக முயற்சிப்பதுமில்லை. போர்க்குற்ற விசாரணையின் பக்கமும் இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான சர்வதேச செயற்பாட்டின் பக்கமும் தமிழ் மக்களின் சிந்தனையைத் திருப்புவதன் மூலம் இனப்பிரச்சினையையும் அதற்கான தீர்வையும் மக்களிடமிருந்து முழுமையாக ஓரங்கட்டுகின்றார்கள்.**

பிரச்சினைகளுக்கான தீர்வை முன்வைக்காமல் பிரச்சினைகளை மாத்திரம் முன்வைத்து மக்களை உணர்ச்சிவசப்படுத்தி அரசியல் செய்வதன் மூலம் தமிழ்த் தலைவர்கள் தங்கள் பதவிகளைத் தக்க வைப்பதோடு புலி சார்புப் புலம் பெயர் அமைப்புக்களின் எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றுகின்றார்கள். தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை மேடைகளில் இவர்கள் பட்டியல் போடுகின்றார்களேயொழிய அப்பிரச்சினைகளுக்கான தீர்வுக் கோரிக்கைகளை முன்வைப்பதில்லை. தீர்வுக்காக முயற்சிப்பதுமில்லை. இவ்வாறான அரசியலுக்காகவே ஜெனிவா மாநாட்டுக்குத் தமிழ்த் தலைவர்கள் அதிகளவு முக்கியத்துவம் அளிக்கின்றார்கள். போர்க்குற்ற விசாரணையின் பக்கமும் இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான சர்வதேச செயற்பாட்டின் பக்கமும் தமிழ் மக்களின் சிந்தனையைத் திருப்புவதன் மூலம் இனப்பிரச்சினையையும் அதற்கான தீர்வையும் மக்களிடமிருந்து முழுமையாக ஓரங்கட்டுகின்றார்கள். இந்த வழித் தலைவர்களின் அரசியல் பதவிகளைப் பாதுகாப்பதற்கும் புலம்பெயர் அமைப்புக்களைத் திருப்திப்படுத்துவதற்கும் உதவுமேயொழியத் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தரப்போவதில்லை. அதிகாரப் பகிர்வுக்கான அரசியல் முயற்சி தான் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தரும். எனவே, அதிகாரப் பகிர்வுக்கான முயற்சியை முன்னெடுப்பதைத் தவிர வேறு வழி தமிழ் மக்களுக்கு இல்லை.

அதிகாரப் பகிர்வை நோக்கிய நகர்வுக்கான ஆரம்பமாகப் பதின்மூன்றாவது திருத்தம் அமைகின்றது. மாகாண சபையை ஏற்று அதன் மூலம் செய்யக் கூடியவற்றைச் செய்கின்ற அதேநேரம் மேலதிக அதிகாரங்களுக்காகத் தொடர்ந்து முயற்சிப்பது அதிகாரப் பகிர்வுக்கான அரசியல் முயற்சியாகும். ஒரே தடவையில் முழுமையான அதிகாரப் பகிர்வை அடைவதற்கான சூழ்நிலை இப்போது இல்லையென்பதால் ஆரம்ப கட்டமாக மாகாண சபையை ஏற்றுக் கட்டங்கட்டமாக முழுமையான அதிகாரப் பகிர்வை நோக்கி முன்னேறுவது தான் நடைமுறைச் சாத்தியமான வழி.

வடமாகாண சபையின் நிர்வாகத்தைக் கைப்பற்றியிருக்கும் கூட்டமைப்புத் தலைமை மாகாண சபையை உரிய முறையில் செயற்படுத்தாமல் அதை முடக்குவதிலேயே கவனம் செலுத்துகின்றது. அரசியல் தீர்வை நிராகரிக்கும் நிகழ்ச்சி நிரலையே கூட்டமைப்பு இங்கு செயற்படுத்துகின்றது.

இனப்பிரச்சினையையும் அதற்கான தீர்வையும் திட்டமிட்டு ஓரங்கட்டும் கூட்டமைப்பின் உண்மையான நோக்கம் தங்கள் பதவிகளுக்கான பாதுகாப்பேயொழியத் தமிழ் மக்களின் நிலையான நலனல்ல. இந்தச் சுயநல அரசியலில் சுகம் காணும் இவர்கள் ஒருபோதும் சரியான, பாதைக்குத் திரும்பப்போவதில்லை. மக்கள் சரியான பாதைக்குத் திரும்புவதன் மூலமே தமிழ் அரசியல் ஆக்கபூர்வமானதாக அமையும். ●

# உருத்திரகுமாரனின் தலைக்கு ஒருகோடி ரூபா சன்மானம்

## இது ஹெல உறுமயவின் விருப்பம்

சர்வதேச நாடுகளில் இருக்கும் விடுதலைப் புலித் தலைவர்களை உயிருடனோ பிணமாகவே இலங்கைக்கு கொணடு வரவேண்டும் என ஜாதிக ஹெல உறுமயவின் மேல் மாகாண சபையின் உறுப்பினரும் அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளருமான நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப்புலிகளின் சர்வதேச தலைவர்களில் ஒருவரான நெடியவன் என்பவருக்கு அடுத்த தலைவர் எனக் கூறப்படும் கபிலன் என்ற நந்தகோபன் என்பவர் இலங்கை இராணுவத்தின் புலனாய்வு நடவடிக்கை மூலம் மலேசியாவில் இருந்து இலங்கைக்கு கொணடு வந்தது போல் உலக நாடுகளில் இருக்கும் ஏனைய புலித் தலைவர்கள் உயிருடனோ அல்லது பிணமாகவோ இலங்கைக்கு கொண்டு வரப்படவேண்டும்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி புலிகளை தோற்கடித்து பெற்ற வெற்றியை அடுத்து கிடைத்துள்ள இரண்டாவது வெற்றி இதுவாகும்.

பிரபா்கரன் கொலை செய்யபபட்ட பின்னர், புலிகள் அமைப்புக்கு தலைவராகவிருந்த கே.பி. என்ற குமாரன் பத்மநாதன் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டார். அவரது கைதைத் தொடர்ந்து புலிகளின் சர்வதேச வலையமைப்பு சீர்குலைந்தது. இந்த நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்திருக்க வேண்டும்.

மேற்குலக நாடுகளின் உதவியோடு புலிகளின் சர்வதேச வலையமைப்பு மீண்டும் உயிர் பெற்றது. புலிகளின் சர்வதேச முன்னணி இதன் மூலம் பலம் பெற்றது.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் மூலம் சர்வதேச புலிகள் எம்மை மயிர்க் கூச்செறியச் செய்தனர். அது ராஜதந்திர தாக்குதலாகும்.

மீதமுள்ள விடுதலைப் புலிகளின் தலைவர்களைத் தேடி நாம் நடவடிக்கைகளைத் தொடர்ந்திருக்க வேண்டும். நெடியவன், விநாயகம், உருத்திரகுமாரன், சுரேன் சுரேந்திரன், அருட்தந்தை இம் மானுவேல், அடேல் பாலசிங்கம், போன்ற புலிகளின் தலைவர்களை உயிருடனோ அல்லது பிணமாகவே இலங்கைக்கு கொண்டு வரும் புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவேணடும்.

உருத்திரகுமாரனின் தலையை கொண்டு வரும் நபருக்கு ஒரு கோடி ரூபா சன்மானம் வழங்கப்படும் என அறிவித்திருக்கலாம்.

இவர்களை இலங்கையிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற கோரிக்கையை இலங்கையின் ராஜ தந்திரத்தின் ஒரு பகுதியாக பயன்படுத்தியிருக்கலாம்.

புலிகள் செய்த போர்க் குற்றங்களை விசாரணை செய்த தனியான நீதிமன்றம் ஒன்றை ஏற்படுத்தி சரணடைந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்குத் தண்டனை வழங்கியிருக்கலாம்.

எமது கருணை, அன்பு மற்றும் மறதி போன்றவற்றை தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை அரசாங்கம் தடை செய்திருக்க வேண்டும். அத்துடன் கூட்டமைப்பின் தலைவர்களுக்கு தண்டனை வழங்கியிருக்க வேண்டும்.

## புதிய வருடத்தில் உற்சாகம் ஆண்டவனிடம் ஆசி பெறு கிறார்



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த வியாழக்கிழமை கதிர்காமம் சென்று சமய வழிபாடுகளில் ஈடுபட்டார். முதலில் கிரிவிகாரைக்குச் சென்ற அவர் அங்கு நடைபெற்ற சமய வைபவங்களில் கலந்துகொண்டு ஆசீர்வாதம் பெற்றார்.

அதன் பின்னர் கதிர்காமம் ஆலயத்தில் நடைபெற்ற பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டார். அங்கு வந்திருந்த பொது மக்களைச சந்தித்து அவர்களுடன் சினேகபூர்வமாக உரையாடினார். நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் வாஸ் தலைமையிலான பிரமுகர்கள் இந்த நிகழ்வுகளில் பங்குபற்றினர்.

# திருமலை மாணவர் படுகொலையை கண்டித்து நியூயோர்க்கில் நடந்தது ஆர்ப்பாட்டம்

நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்துக்கான இலங்கையின் பிரதி வதிவிடப் பிரதிநிதி சவேந்திர சில்வாவுக்கு எதிராக நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று நடாத்தப்பட்டது. இளைஞர் மன்னிப்பு பிரிவினால் இந்த ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டது.

திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் கொலை செய்யப்பட்டமை உட்பட்ட சம்பவங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டது.

இதன்போது சவேந்திர சில்வா, தமது அலுவலக அறையின் ஜன்னல் கண்ணாடியின் மூலம் ஆர்ப்பாட்டத்தை அவதானித்த பின்னர் ஜன்னலின் திரையை மூடிக்கொண்டமையை இன்னர்சிட்டி பிரஸ் காணொளி காட்சியாக படமாக்கியுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் பின்னர, இளைஞர் மன்னிப்பு பிரிவின் மஸாசுசெட்ஸ் (Massachusetts )இல் உள்ள பிரதிநிதி, ஐக்கிய நாடுகளின் இலங்கை காரியாலயத்துக்குச் சென்று சவேந்திர சிலவாவின், முகவரி அட்டையை எடுத்து வந்தார்.

இதன்போது தாம், பொறுப்புக்கூறல் தொடர்பாக விடுத்த கோரிக்கைக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என சவேந்திர சில்வா உறுதியளித்தாக அந்த பிரதிநிதி தெரிவித்தார்.

இதேவேளை 2009 ஆம் ஆண்டு இறுதிப் போரின்போது போர்க் குற்றங்களுக்கு காரணமான சவேந்திரசில்வாவை, ஐக்கிய நாடுகளின் அமைதி காப்பு படைக்கு ஆலோசகராக நியமித்தமை தொடர்பில் இனனர் சிட்டி பிரஸ், பான் கீ மூனின் பேச்சாளரிடம் வினவியது. இதற்கு பதிலளித்த பேச்சாளர், எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை.

## அனைவருக்கும் நீதி கிடைக்கட்டும் இது அமெரிக்கா விடுத்த புத்தாண்டுச் செய்தி



(கொழும்பு)

என்றுமில்லாதவாறு இம்முறை அமெரிக்க இராஜாங்க செயலாளர் இலங்கை மக்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துச்செய்தி ஒன்றைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ள அனைத்து இன மக்களுக்கும் நீதியும், மறுசீரமைப்பும், சமாதானமும் மலர்ந்துள்ள புத்தாண்டில் கிடைக்க வேண்டும் என்று, அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், இலங்கையில் ஜனநாயகம் மேலோங்கிய நாட்டைக் கட்டியெழுப்ப அமெரிக்கா தொடர்ந்து ஒத்துழைக்கும் என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா சார்பிலும், அமெரிக்க மக்கள் சார்பிலும், அனைத்து இலங்கை மக்களுக்கும், புலம்பெயர்ந்து வாழ்கின்ற இலங்கையர்களுக்கும் அவர் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

# மருத்துவர்களின் விடுதி இன்னமும் படையினர் வசம்

## மீட்டுத்தரக் கோரிக்கை

இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டிருக்கும் கிண்ணியா வைத்தியசாலைக்குச் சொந்தமான வைத்தியர்களின் உத்தியோக பூர்வ விடுதிகளை வைத்தியசாலைக்கு மீள ஒப்படைக்குமாறு கிழக்கு மாகாண சுகாதார விளையாட்டு தகவல் தொழில்நுட்ப கல்வி அமைச்சர் எம்.ஐ.எம். மன்சூர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்த விடுதிகளை இராணுவத்தின் பிடியில் இருந்து மீட்டுத் தருமாறு கிழக்குமாகாண அமைச்சர் மன்சூர் பொருளாதார பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமைக்கு கடிதம் எழுதியுள்ளார் . அவர் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

திருகோண மலை மாவட்டத்தில சிறு இடப்பரப்பை கொண்ட பிரதேசத்தில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் குடியிருக்கும் கிண்ணியா பிரதேச மக்களுக்கு சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக ஸ்தாபித்திருக்கும் வைத்தியசாலை கிண்ணியா தள வைத்தியசாலையாகும். சுனாமி அனர்த்தம் மற்றும் மூன்று தசாப்த காலமாக நடைபெற்று வந்த யுத்த சூழ்நிலையின் காரணமாக இவ்வைத்தியசாலைக்குரிய அநேகமான பௌதீக வளங்கள் அழிந்து போய் விட்டன . சாதாரண சூழ்நிலையில் துரிதமாக அபிவிருத்தி அடைநது வரும் கிண்ணியா பிரதேசத்துக்குச் சொந்தமான தள வைத்தியசாலையை மிகப்பயனுள்ள சுகாதார சேவை வழங்கும் இடமாக ஸ்தாபிப்பதற்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் என்ற ரீதியில் நடவடிக்கை எடுத்து வந்த போதிலும் கிண்ணியா வைத்தியசாலைக்கு வரும் விஷேட வைத்திய அதிகாரிகள் மற்றும் தாதியர்களுக்குமான தங்குமிட வசதிகளை வழங்க முடியாதிருப்பதால் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியதாக உள்ளது.

அதாவது கிண்ணியா தள வைத்தியசாலைக்குச் சொந்தமான தாதியர்களுக்கான உத்தியோகபூர்வ விடுதிகள் சுனாமி அனரத்தத்தின் பின்னர் இலங்கை கடற் படையினராலும் ,மக்களை பயமுறுத்திய மர்ம மனிதன் (Grees Man ) சம்பவத்தின் பின்னர் வைத்தியர்களின் உத்தியோகபூர்வ விடுதிகள் இலங்கை இராணுவத்தினராலும் கைப்பற்றப்பட்டது. இவ்விடுதிகளை மீண்டும் கிண்ணியா தள வைத்திய சாலையிடம் ஒப்படைக்குமாறு கிண்ணியா தள வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எனது செயலாளரிடம் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளார்.

# போதைவர்த்தகம் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

## தகவல் தெரிவிக்க இப்போது வாய்ப்பு

போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த விசேட வேலைத் திட்டத்தை அமுலாக்குவதற்கு புலனாய்வுத் தகவல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

1984 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு இது பறறிய தகவல்களைத் தெரிவிகக லாம். தகவல்கள் இரகசியமாகப் பேணப்படும்.

மதுவுக்கு முற்றுப்புள்ளி கோட்பாட்டை யதார்த்தமாக்கும் வேலைத்திட்டத்தின் மற்றுமொரு அங்கமாக சட்டவிரோத போதைப்பொருள், புகையிலை, மதுபான, கைத்தொழில் புலனாய்வு தகவல் நிலையம் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபையின் 30 ஆவது கொண்டாட்டம் நேற்றாகும். புதிய நிலையம் இராஜகிரயில் அபாயரகமான ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபையில் அமைந்துள்ளது.

போதைப் பொரூள் வர்த்தகம் தொடர்பான தகவல்களை திரட்டல், ஆய்வு செய்தல், மீளாய்வு, பரிமாற்றம் போன்றவை இதன் மூலம் மேற்கொள்ளப்படும்.

1984 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாக போதைப். பொருள் பாவனை தொடர்பான தகவல்களை எவரும் அறிவிக்கலாம். இத் தகவலை அறிவிப் போரின் இரகசியம் பாதுகாக்கப்படுமென நிலையத்தின் திறப்பு விழாவின் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

அபாயகரமான ஔடதங்கள் கட்டுப் பாட்டு தேசிய சபையின் தலைவி லேஷா டி சில்வா சந்திரசேன உட்படப் பலர் இதில் கலந்துகொண்டனர்.

# கடல்நீரை நன்னீராக மாற்றி மக்களுக்கு வழங்க ஏற்பாடு

## பாலகுமாரி ஐங்கரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடல் நீரினை நன்னீராக மாற்றி மக்களுக்கு குடிநீராக வழங்குவதற்கான நடவடிக்கைகள் நெடுந்தீவில் இடம்பெற்றுவருவதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் சமூகவியலாளர் திருமதி.பாலகுமாரி ஐங்கரன் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.


தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச்சபையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

சமூகமயப்படுத்தப்பட்ட கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்திட்டத்தின் கீழ் இந்த நன்னீர் திட்டம் முன்னெடுக்கப்படுவதோடு இது 3 மாதகாலப் பகுதியில் சாத்தியமாகும் எனவும் அவர் தெரிவித்தார்.


அதுமட்டுமன்றி நெடுந்தீவில் நலா 50 மீற்றர் கியூப் நீரினை உற்பத்தி செய்யக்கூடிய 2 இயந்திரங்கள் பொருத்தப்பட்டு இந்தத் திட்டம் செயற்படுத்தப் படவுள்ளது.

ஒரு மீற்றர் கியூப் நீரினை நன்னீராக்குவதற்கு 160 ரூபாய் செலவாகும். யாழ்ப்பாணத்தில் இருந்து நெடுந்தீவுக்கு குடிநீர் கொண்டு செல்லும் செலவினை பார்க்கிலும் கடல் நீரினை நன்னீராக மாற்றும் செலவு குறைவு. ஆனால் இத்திட்டத்தினை யாழ். மாவட்டம் முழுவதும் செயற்படுத்த முடியாது ஏனெனில் இதன் செலவு அதிகமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.(48)



சர்வதேச பெண்கள் தினத்தை மையப்படுத்தி Women and Media Collective (WMC) 2013 இற்கான அகில இலங்கை ரீதியான குறும் திரைப்படப் போட்டி ஒன்றினை ஒழுங்கமைத்து இருந்தது. அதில் பங்கு கொண்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவராஜ்ஜின் படைப்பான "சமநிலை" (THE BALANCE) திரைப்படம் அகில இலங்கை ரீதியில் முதல் இடத்தினைப் பெற்றுள்ளது. அத்துடன் போட்டிப் பரிசாக ரூபா நாற்பது ஆயிரமும் வழங்கப்பட்டது. (48)

# மக்களை அச்சுறுத்தி வந்த யானை பாழடைந்த கிணற்றுக்குள்



(விசுவமடு)

விசுவமடு இளங்கோபுரம் பகுதியில் கோபால் என்பவரின் காணியில் உள்ள பாழடைந்த கிணற்றுக்குள் கடந்த வியாழக்கிழமை இரவு யானை ஒன்று விழுந்துள்ளது. அண்மைக்காலமாக விசுவமடு தர்மபுரம் பகுதிகிளில் காட்டு யானையின் நடவடிக்கைகளால் மக்கள் பாதிப்புக்களை சந்தித்து வந்துள்ள னர். ஒரு சில மாதங்களுக்கு முன்னரும் விசுவமடு பகுதியில் கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தக் கல்லூரி மாணவன் ஒருவர் யானை தாக்கி உயிழந்திருந்தார்.

கடந்த வியாழக்கிழமை கிராமத்திற்குட்பிரவேசித்த யானை பற்றைகளால் சூழப்பட்டிருந்த பாழடைந்து கிணற்றுக்குள் த[illegible] விழுந்துள்ளது. பெருமளவு பொது மக்க[illegible] சென்று பார்வையிட்டு வருகின்றனர். யானையை மீட்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்டுகின்றது.

# காலாவதியான தண்ணீர் போத்தல்கள் விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பண்ணையில் உள்ள தனியார் பேருந்து நிலையத்துக்கு அருகில் உள்ள வர்த்தக நிலையங்கள் சிலவற்றில் காலாவதித்திகதி முடிவுற்ற நிலையில் தண்ணீர் போத்தல்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

அத்துடன் பேருந்து நிலையத்திலும் காலாவதித் திகதி பொறிக்கப்படாத தண்ணீர் போத்தல்கள் விற்பனை செய்யப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதுமட்டுமன்றி அங்குள்ள மலசல கூடங்கள் துப்புரவு அற்ற நிலையில் உள்ளதாகவும் இதனால் வெளியூர் செல்லும் பயணிகள் மிகவும் சிரமப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஆட்டோவை சேதப்படுத்தியவர் பிணையில் செல்ல அனுமதி

(யாழ்ப்பாணம்)

தனங்கிளப்புப்பகுதியில் முச்சக்கரவண்டி ஒன்றை உடைத்து நஷ்டம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு 15 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் கேரதீவைச் சேர்ந்தவர் எனவும் வழக்கு அடுத்த மாதம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)




# ஜய வருடம் உங்களுக்கு எப்படி?

**கும்பம்**

ஜய வருடப்பலாபலன்கள் நொந்த உள்ளங்களுக்கு ஆறுதலைத்தரும் வண்ணம் அமைந்துள்ளது. ஈடுபடும் முயற்சிகளில் முன்னேற்றமும் இலாபமும் ஏற்படும். பங்கினை முறித்துக் கொண்டு தனியாக இயங்கச்செயற்படுவர். பரீட்சை முடிவுகள் சாதகமாக அமைந்து அரசுத்தொழில் கிடைக்க வழியேற்படும். சிலரின் பிதாவின் தேகநலம் எதிர்பாராமல் பாதிக்கப்படும். சுபகாரிய நிகழ்வுகள் நடந்தேறும். புதியன கொள்வனவு செய்ய பண உதவி கிட்டும். நிலுவைகள் வந்துசேரும். மனைகள் பூரணமாகிவிடும். திசாபுத்திப்பலன் நன்றாக அமையின் வெளியூர்யோகம் வெற்றியைத்தரும். விவாகம் மற்றும் குழந்தைப்பாக்கியம் மனதினை மகிழ்வூட்டும்.

நோய் காரணமாக சிலர் பரீட்சைக்குத் தோற்றுவதைக்கைவிடுவர். நெடுங்காலமாக நிலவிய சொத்துப்பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு எட்டப்படும். மாமன்மாரின் கருணையால் நன்மைகிட்டும். வியாழசுகம் பாதிக்கப்பட்டிருப்பதினால் புதிய ஒப்பந்தங்களை ஏற்கவேண்டாம். இராகுகேது என்பன பாதகமாக இருத்தலினாலும் பிறரின் உதவியால் மட்டுமே முன்னேற்றம் அடைவர். வெற்றுக்காசோலையில் கையெழுத்திடவேண்டாம். தேகநலம் எதிர்பாராது பாதிக்கப்படலாம். நண்பர்களின் கசப்பு வார்த்தைகளை நம்பிமோசம் போகலாம். பதவி நிரந்தரமாக்காது இழுபடலாம்.

(தொடரும்)

ஜோதிர் வித்யாரத்னா,
வி.ஏ.சிவராசா

# முரசின் இன்றைய பலன்



**(13.04.2014 ஞாயிற்றுக்கிழமை)**

விஜய வருஷம் பங்குனி மாதம் 30 ஆம் திகதி.
திரயோதசி / அமிர்தம்.
உத்தரம் நட்சத்திரம் மு.இ. 10.04 வரை. பின் அத்தம்.
இராகு காலம் 04.36 - 06.06 வரை. சுபநேரம் 09.06 - 10.36 வரை.

**ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.**

**மேடம்** — கடன் அடைக்க நிலத்தினை விற்கும் முயற்சியில் ஓழியாழித்திரிதல், கால்நடை குறுக்கே பாய்ந்ததினால் சிறிய விபத்து ஏற்படல்.

**ரிஷபம்** — உள்ளூர் திருமணத்திற்காக வெளியூரிலிருந்து தாயகம்வரல், கிரகபாவம் கூழியிருப்பதினால் விவாக முயற்சி இழுபடல்.

**மிதுனம்** — பரீட்சை முழவினால் பெற்றோர் குதூகலமடைதல், புதிய ஜீவன் உருவாகும் நிலைகண்டு பரவசமடைதல்.

**கடகம்** — எதிர்பாராது சுபகாரிய நிகழ்வு ஏற்படல், தொலைபேசி மூலம் நிலுவை கிடைக்க சம்மதம் தெரிவித்தல்.

**சிம்மம்** — இழுபட்டுக் கொண்டிருந்த விவாகம் முற்றுப்பெறுவதினால் மகிழ்வு, தற்காலிக நியமனம் நிரந்தரமாதல்.

**கன்னி** — கலை, விளையாட்டுத்துறையில் சாதனை பரிசில்பெறல், ஏழரைச் சனி இருப்பதினால் புதிய முயற்சி தொடர்பாக ஆர்வமின்மை.

**துலாம்** — பலவேலைகளை ஒரே நேரத்தில் தலையில் போட்டதால் திண்டாட்டம், பிதாவின் தேகநலம் மேம்பாடு கண்டு புளகாங்கிதம் அடைதல்.

**விருச்சிகம்** — சட்டவிரோத மின்பாவனையால் தண்டத்திற்கு ஆளாதல், விஜஜெந்துவின் தாக்கத்தினால் பாதிப்படைதல்.

**தனுசு** — கௌரவத்திற்கு இழுக்குத்தேட நண்பரால் முயற்சி, புதியன கொள்வனவு செய்யகடன்படும் நிலை.

**மகரம்** — திருட்டுப்போன பொருள் முறையீடு காரணமாக கிடைத்தல், நோய் குணமடைவது கண்டு பதகளிப்பு நீங்குதல்.

**கும்பம்** — புதிய பதவி கிடைப்பதற்கான செய்தியால் மகிழ்வு, திருமணத்திற்காக தாயகம் வருதல்.

**மீனம்** — சகோதரருடன் ஏற்பட்ட மனத்தாங்கல் நீங்கிவிடல், இடைத்தங்கல் நாட்டிலிருந்து வெளியேறல்.




சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு அச்சுவேலி பொலிஸ் நிலையம் மற்றும் இராணுவத்தினர் இணைந்து அச்சுவேலி பிரதேசத்திற்குட்பட்ட வீர,வீராங்கனைகளுக்க...டயிலான விளையாட்டுப் போட்டி நேற்று நடாத்தியது. இதில் சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் மற்றும் பாரம்பரிய விளையாட்டு போட்டிகள் நடாத்தப்பட்டன. இதில் சைக்கிள் மற்றும் மரதன் ஓட்டப் போட்டியில் வீரர்கள் ஆயத்தமாவதைக் காணலாம். மரதன் ஓட்டப் போட்டியில் த. பிரசாந் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (85)

# ஐ.சி.சி.யின் புதிய திட்டம் ஏற்றது பாகிஸ்தான்



(...ூர்)

சர்வதேச க...கெட் சபையின் (ஐ.சி.சி) புதிய திட்டத்தை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஏற்றுக்கொண்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் வருவாய் மற்றும் நிர்வாக விவகாரங்களில் அவுஸ்ரேலியா, இந்தியா, இங்கிலாந்து ஆகிய 3 நாடுகளின் கிரிக்கெட் சபைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும் வகையில் சமீபத்தில் சட்ட திருத்தம் கொண்டுவரப்பட்டது.

பெரும்பாலான கிரிக்கெட் சபைகளின் ஆதரவுடன் நிறைவேறிய இந்த நிர்வாக சீர்திருத்த சட்டத்துக்கு இலங்கை, பாகிஸ்தான் கிரிக்கெட் சபைகள் மட்டும் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்தன.

இந்த நிலையில் சில தினங்களுக்கு முன்பு நடந்த சர்வதேச கிரிக்கெட் சபைக் கூட்டத்தில் புதிய நிர்வாக சீர்திருத்த திட்டத்தை சில நிபந்தனைகளுடன் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஏற்றுக் கொண்டுள்ளது.

இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் நஜம் சேதி அளித்த பேட்டியில், இந்தியா உட்பட எல்லா டெஸ்ட் அந்தஸ்து பெற்றுள்ள நாடுகளுடன் அடுத்த 8 ஆண்டுகளில் கிரிக்கெட் தொடர் நடாத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன், புதிய நிர்வாக சீர் திருத்தத்தை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஏற்றுக்கொள்ள சம்மதித்துள்ளது.

பெரிய நாடுகளுடன் நாங்கள் விளையாடவில்லை என்றால் அடுத்த இரண்டு ஆண்டுகளில் நாங்கள் பெரு நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டி வரும். அதனை நாங்கள் விரும்பவில்லை. இதன் காரணமாக ஐ.சி.சி.யின் புதிய திட்டத்தை ஏற்றுக்கொள்கின்றோம். நாங்கள் தனித்து நின்று ஒன்றும் நடக்கப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

# கிரிக்கெட் உலகின் சூப்பர் ஸ்ரார் உருவெடுக்கிறார் ஹோலி

(லண்டன்)

இந்திய அணியின் இளம் நட்சத்திரம் ஹோலி கிரிக்கெட் உலகில் உண்மையான சூப்பர் ஸ்ரராக உருமாறுவார். அதற்கான தடயங்கள் இருப்பதை அவருடைய துடுப்பாட்டத் திறன் வெளிப்படுத்துகின்றது என, இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் பொய்கொட் தெரிவித்துள்ளார்.

ஹோலி சமீப காலங்களாக உயர்தர கிரிக்கெட் திறனை வெளிப்படுத்தி வருகிறார். டெஸ்ட் கிரிக்கெட்டிற்கு ஹோலி புதியவர். இருப்பினும் விலை மதிப்பற்ற சில இனிங்ஸ்களை அவர் அதற்குள் விளையாடிவிட்டரர். அவர் உண்மையான சூப்பர் ஸ்ராராக உருமாறுவார் என்பதற்கான தடயங்கள் இப்போது தெரிகிறது.

அவரிடம் கிரிக்கெட் மீதான பற்றார்வம், உணர்ச்சிப் பெருக்கு கூடுதலாக உள்ளது. சில வேளைகளில் இது வரம்பு மீறி சென்றாலும் அவரிடம் உள்ள இந்தக் குணம் எனக்குப் பிடித்திருக்கிறது. ஜோகனஸ்பேர்க்கில் தென்னாபிரிக்காவின் சிறந்த பந்து வீச்சிற்கு எதிராக அவரது துடுப்பாட்டம் அசத்தலாக அமைந்தது.

அடுத்து இங்கிலாந்தில் அவர் டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்கவுள்ளார். இதில் ஹோலி தனது திறமைகளை நிரூபிக்கவேண்டும், பின்னர் அவுஸ்ரேலியாவில் நடைபெறவுள்ள போட்டித் தொடரிலும் அவர் சாதிக்க வேண்டும். குறிப்பாக, ஜோன்சன் அன்ட் கோ-விற்கு எதிராக தன்னை நிரூபிக்கவேண்டும். அனைத்து நாடுகளிலும் திறமையை வெளிப்படுத்தினால்தான் உலக கிரிக்கெட்டில் அவரது பெயர் நீங்கா இடம்பெறும். பிரட்மன், சச்சினுக்குப் பின் ஹோலிக்கு அவ்வாறான இடம் கிடைக்கும் என்றே எதிர்பார்க்கின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐ.பி.எல். தொடரில் அசத்துவோம்



(ஹைதராபாத்)

எங்கள் அணி சிறந்த கலவையுடன் இருப்பதால் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றது என ஹைதராபாத் சன் ரைசர்ஸ் அணியின் பயிற்சியாளர் டொம் மூடி தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல்.லில் கடந்த ஆண்டில் முதல் முறையாக ஆடினோம். முதல் பயணமே எங்களுக்கு சிறப்பாக (பிளே-ஆப் சுற்று வரை முன்னேற்றம்) அமைந்தது. எங்களது அணியில் அனுபவம், இளமை என்று சரியான கலவையில் வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். மீண்டும் சாதிக்க முடியும் என்று நம்புகிறேன் எனவும் டொம் மூடி தெரிவித்துள்ளா.

ஹைதராபாத் அணியின் ஆலோசகர் ஸ்ரீகாந்த் கூறும் போது, இந்த தொடருக்கு எங்களது அணி நன்றாக த...ாராகி இருக்கிறது. கடந்த சீசனில் விளையாடிய தவான், இசாந்த் சர்மா, க...ண் சர்மா, அமித் மிஸ்ரா, டரன் சமி, ஸ்ரெய்ன் போன்ற வீரர்கள் அப்படியே தெ...ருவது அணிக்கு பலம் சேர்க்கும் முக்கியமான அம்சமாகும் என்றார்.

ஹைதராபாத் சகலதுறை வீரர் இர்பான் பதான் கூறுகையில், காயம் காரணமாக இந்திய அணியில் இருந்து நீக்கப்ப...டேன். அதன் பின்னர் அணியில் இடம் பிடிக்க முடியவில்லை. மறுபடியு... அணிக்கு திரும்புவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளேன். அதற்கு இந்த ஐ.பி.எல். போட்டியை முழுமையாக பயன்படுத்திக் கொள்வேன் என்றார்.

மற்றொரு ஹைதராபாத் வீரர் இசாந்த் சர்மா கூறும்போது, இந்திய ஆடுகளங்களும், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆடுகளங்களும் ஒரே மாதிரியாக இருக்கும் என்று நினைக்கிறேன். அதனால் இந்தியாவில் ஆடுகிறோமோ அல்லது அரபு எமிரேட்சில் விளையாடுகிறோமோ என்பது ஒரு பிரச்சினையே கிடையாது. பொதுவாக ஆசிய ஆடுகளங்கள் அனைத்தும் ஒரே தன்மை கொண்டவை தான். ஆனால் ஆடுகளத்தன்மை எப்படி இருக்கும் என்பதை பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. களத்தில் வியூகங்களை சரியாக செயல்படுத்துவது தான் முக்கியம் என்றார்.

# சச்சினுடன் நேரத்தை செலவிட காத்திருக்கும் மைக்கல் ஹசி

மும்பை அணியின் சச்சினுடன், ஏழாவது ஐ.பி.எல். தொடரில் நேரம் செலவிடவுள்ளதை எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருக்கிறேன் என, மைக்கல் ஹசி தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய அணி வீரர் மைக்கல் ஹசி, கடந்த ஆறு ஐ.பி.எல். தொடர்களிலும் சென்னை அணிக்காக விளையாடினார். ருவென்ரி-20 போட்டி இளம் வீரர்களுக்கானது என்று பேசப்படும் சூழலில், 2013 தொடரில் சென்னை அணிக்காக 17 போட்டியில் 733 ஓட்டங்கள் குவித்து, அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்கள் வரிசையில் முதலிடம் பெற்றார். இந்நிலையில், மும்பைப் இந்தியன்ஸ் அணி, ஹசியை 5 கோடி ரூபாவுக்கு வாங்கியது.

ஏழாவது ஐ.பி.எல். தொடர் குறித்து மைக் ஹசி கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த ஆறு ஆண்டுகளாக சென்னை அணிக்காக விளையாடிய நிலையில், மும்பை அணிக்காக இம்முறை களமிறங்கவுள்ளது சற்று வித்தியாசமாகத் தான் இருக்கும். அதேநேரம், சம்பியன் அணியான மும்பையுடன் இணைவது, வான்கடே மைதானத்தில் விளையாட வாய்ப்புக் கிடைக்கவுள்ளதை பெரிதும் எதிர்பார்க் கிறேன். இந்த அனுபவம், இதுவரையில்லாத அளவுக்கு வித்தியாசமாக அமையும் என்று நம்புகிறேன். மும்பை அணியின் நட்சத்திர வீரர் சச்சின், ஓய்வு பெற்றுவிட்டார்.

என்றாலும், இவருடன் நேரம் செலவிடவுள்ளது, கிரிக்கெட் மற்றும் ஓய்வுக்குப்பின்னர் வாழ்க்கை குறித்து விவாதிப்பது போன்றவற்றை, எதிர்பார்த்து காத்திருக்கிறேன் எனத் தெரிவித்தார்.

# நம்பிக்கையான செயற்பாடே கிண்ணம் வசமாக காரணம்

## பெருமை கொள்ளும் சண்டிமால்

(கொழும்பு)

உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடரில் நாங்கள் நம்பிக்கையுடன் செயற்பட்டோம். வீரர்கள் அனைவரும் உளரீதியாக இத்தொடரை வெல்ல வேண்டும் என்ற ஒரு இலக்குடன் செயற்பட்டோம். இதன் விளைவே ருவென்ரி-20 தொடரின் கிண்ணத்தை நாங்கள் வெற்றி கொள்ள முக்கிய காரணம் என இலங்கை அணியின் இளம் வீரர் சண்டிமால் தெரிவித்துள்ளார்.

உலக கிண்ணப் போட்டி என்பது எந்த அணிக்கும் சவாலானதொரு தொடர் தான். இவ்வாறான தொடரில் எல்லா அணிகளும் தமது திறமைகளை வெளிப்படுத்தி சாதிக்க வேண்டும் என்ற இலக்குடனேயே செயற்படும். நாங்கள் அவ்வாறு தான் செயற்பட்டோம்.

ஆரம்ப போட்டி முதல் அனைத்து ஆட்டங்களிலும் மிகுந்த ஈடுபாட்டுடன் நாங்கள் களத்தில் செயற்பட்டோம். இதன் விளைவே 18 வருடங்களின் பின்னர் ஐ.சி.சி.யின் வெற்றிக் கிண்ணம் ஒன்றை வென்று நாட்டுக்கு கொண்டுவர முடிந்தது.

இக்கிண்ணத்தை வெல்வதற்கு சிரேஷ்ட வீரர்களின் பங்களிப்பு மிகப் பெரியது. எந்த நேரத்தில் எவ்வாறு விளையாட வேண்டும் என்பதை அவர்கள் எங்களுக்கு கற்... ந்தனர். இவ்வாறான வீரர்களின் கீ... ணியாற்றியது மிகுந்த மகிழ்ச்சியைத் த...ின்றது. இவர்களிடம் கற்றுக் கொண்ட ...டயங்களை இளம் வீரர்களுடன் பகிர்ந்... கொள்வேன்.

இதற்கும் அப்பா... மலிங்கவின் தலைமைத்துவமும் நாங்கள் கிண்ணம் வெல்ல முக்கிய காரணம் என்பதை நிராகரிக்க முடியாது. அவர் நியூசிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் சிறந்த தலைமைத்துவத்தை வெளிப்படுத்தியிருந்தார். அத்துடன் வேகப்பந்து வீச்சாளர்கள் தலைமைப் பதவியை வகிக்க முடியாது என்ற பொதுவான விமர்சனம் ஒன்று உண்டு. அதற்கு அவர் சிறந்த பதிலடி கொடுத்துள்ளார்.

நான் சிறு வயது முதலே தலைமைத் துவத்தை வகித்திருக்கின்றேன். பாடசாலை, கழகம் மற்றும் இலங்கை ஏ போன்ற அணிகளின் கப்டனாகச் செயற்பட்டிருக்கின்றேன். இதற்கூடாக சில விடயங்களை நான் கற்றுக்கொண்டதும் உண்டு. கிரிக்கெட்டில் சாதிக்க வேண்டும் என்ற வெறி எனக்கு சிறு வயது முதலே இருக்கின்றது. குறிப்பாக, எனக்கு 7 வயதாக இருக்கும்போது இலங்கை அணி 50 ஓவர் போட்டியில் உலகக் கிண்ணத்தை வென்றது. நான் உறவினர் வீட்டுக்குச்சென்றுதான் அப்



போட்டியை பார்த்தேன். இலங்கை அணி வெற்றிபெற்றதன் பின்னர் அப்பா, அம்மாவுடன் நான் பட்டாசு கொழுத்தி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினேன்.

ஆனால் இன்று வெற்றிபெற்ற அணியில் ஒரு வீரராக இருப்பது மகிழ்ச்சி அளிக்கின்றது. தொடர்ந்தும் சிறப்பான திறனை வெளிப்படுத்தி அணியில் நிரந்தர இடத்தைப் பிடிக்க வேண்டும் என்பதே எனது தற்போதைய இலக்கு எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

விளையாட்டுச் செய்திகள்

# கிண்ணம் வென்றது ஞானமுருகன் இளைஞர் கழகம்



(உடுவில்)

உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணிகளுக்கிடையிலான கால் பந்தாட்டப் போட்டியில் ஞானமுருகன் இளைஞர் கழக அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களிற்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் ஆண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் மாலை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் ஞானகலா இளைஞர் கழக அணியும், ஞானமுருகன் இளைஞர் கழக அணியும் மோதின. இதன் விளையாக ஞானமுருகன் இளைஞர் கழக அணி கோல் ஒன்றைப் போட்டுக் கொண்டது.

தொடர்ந்து இரு அணிகளும் எதிரணிகளின் கோல் பரப்பை ஆக்கிரமித்த வண்ணமிருந்தன. இதனால் கிடைத்த சந்தர்ப்பத்தை சாதகமாக்கிய ஞானமுருகன் இளைஞர் கழக அணி மேலுமொரு கோலைப் போட்டது. இந்நிலையில் 2-0 என்ற கோல் கணக்கில் ஞானமுருகன் இளைஞர் கழக அணி முன்னிலை பெற்றவேளை, முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

தொடர்ந்தும் 2ஆவது பாதியிலும் ஆதிக்கம் செலுத்திய ஞானமுருகன் இளைஞர் கழக அணி மேலுமொரு கோலைப் போட்டு ஸ்திர நிலையைப் பெற்றது. இதற்குப் பதிலடி கொடுக்கும் முனைப்பில் இறுதி வரை செயற்பட்ட ஞானகலா அணியால் ஒரு கோல் கூடப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இறுதியில் ஞானமுருகன் இளைஞர் கழக அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. (48)

# மென்பந்து கிரிக்கெட் அரையிறுதி, இறுதி

(சுன்னாகம்)

புதுவருடத்தை முன்னிட்டு சுன்னாகம் றியல் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 19 வயதிற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டியை நடாத்தி வருகின்றது.

இப்போட்டித்தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் நாளை பிற்பகல் 2.30 மணிக்கு சுன்னாகம் றியல் ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் இரட்டையப்புலம் அணியும், சுன்னாகம் நண்பர்கள் அணியும் மோதவுள்ளன.

இரண்டாவது அரையிறுதி போட்டியில் சுன்னாகம் றியல் ஸ்ரார் அணியும், சுன்னாகம் சிவன் ஸ்ரார் அணியும் மோதவுள்ளன. தொடர்ந்து இறுதிப் போட்டி நடைபெறும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (48)

# மன்னார் நகர முதல்வர் வெற்றிக் கிண்ணம் வலயக் கல்விப் பணிமனை அணி வசம்



(மன்னார்)

மன்னார் நகர முதல்வர் வெற்றிக் கிண்ணத்தை மன்னார் வலயக் கல்வி பணிமனை அணி கைப்பற்றிக் கொண்டது. மன்னார் நகர சபை உத்தியோகஸ்தர் நலன்புரிச்சங்கம் ஏற்பாடு செய்திருந்த நகர முதல்வர் வெற்றிக்கிண்ணத்திற்கான அரச மற்றும் அரச சார்பற்ற திணைக்களங்களுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த புதன்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் மன்னார் வலயக் கல்விப்பணிமனை அணியும், மன்னார் பிரதேச செயலக அணியும் மோதின.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற மன்னார் வலயக் கல்விப்பணிமனை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய மன்னார் பிரதேச செயலக அணி நிர்ணயிக்கப்பட்ட பத்து ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 71 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 72 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மன்னார் வலயக் கல்விப் பணிமனை அணி 9.3 ஓவர்கள நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

இப்போட்டி நிகழ்வில் மன்னார் நகர சபைத் தலைவர் எஸ். ஞானப்பிரகாசம், நகர சபை உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டு போட்டியை கண்டு களித்தமை குறிப்பிடத்தக்கது.

# முழுமதி இளைஞர் கழகம் சம்பியன்

(கோப்பாய்)

கோப்பாய் பிரதேச இளைஞர் கழக அணிகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் தொடரில் கட்டப்பிராய் முழுமதி இளைஞர் கழக அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

கோப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழக அணிகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் கிரிக்கெட் சுற்றுப்போட்டி அண்மையில் இடம்பெற்றது.

இச்சுற்றுப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் கட்டப்பிராய் முழுமதி இளைஞர் கழக அணியும், கட்டப்பிராய் ஞானபாஸ்கரோதயம் இளைஞர் கழக அணியும் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கட்டப்பிராய் முழுமதி இளைஞர் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட ஐந்து ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 42 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கனிஸ்ரன் 19, துஸ்யந்தன் ஆட்டமிழக்காது 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ராம் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 43 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கட்டப்பிராய் ஞானபாஸ்கரோதயம் இளைஞர் கழக அணி 4.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 26 ஓட்டங்களை பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் ராம் 18 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் நிசாந், கனிஸ்ரன், தாருஹாசன், துஸ்யந்தன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். (48)

# பிரேசிலுக்கு காத்திருக்கிறது சவால்

பிரேசில் அணி ஆறாவது முறையாக கிண்ணத்தை வெல்வதென்பது இலகுவான காரியமில்லை. கடும் சவால்களை முறியடிக்க வேண்டிய கட்டாயம் அணிக்கு உண்டு என பிரேசில் கால்பந்து ஜாம்பவான் பீலே தெரிவித்துள்ளார்.

வர்த்தக ரீதியிலான மின்சார பல்பை கண்டுபிடித்த எடிசன் நினைவாக எனக்கு பெயர் வைத்தனர். என் தந்தை இப்படித் தான் அழைத்தார் பின், என் பள்ளி நண்பர்கள்தான், பீலே என பெயரிட்டனர். யாராவது இப்படிக் கூப்பிட்டால், அவர்களிடம் சண்டையிடுவேன். தற்போது இந்தப் பெயர் தான் நிலைத்துவிட்டது.

என்னோடு, மரடோனா, மெஸ்சி என யாரையும் ஒப்பிட்டு பேசக்கூடாது. ஒவ்வொருவரும் தனிப்பட்ட ஸ்டைலில் விளையாடுவோம். எனக்கு ஒரு கிளப் அணியை தந்து, வீரர்களைத் தேர்ந்தெடுக்கச் சொன்னால், முதல் ஆளாக பிரேசிலின் நெய்மருக்குத்தான் வாய்ப்புத் தருவேன். இவர் எங்கள் தேசிய அணி வீரர் என்பது கூடுதல் சிறப்பு.

பிரேசில் அணி இம்முறை, 6ஆவது முறையாக உலக சம்பியன் பட்டம் வெல்வது அவ்வளவு எளிதானதல்ல. ஜேர்மனியை எடுத்துக் கொண்டால், இளம் வீரர்கள் அதிகம் உள்ளனர். ஸ்பெயின் அணி பல திறமையான வீரர்களை கொண்டுள்ளதால், மிகுந்த பலத்துடன் உள்ளது. இத்தாலி, உருகுவே, ஆர்ஜென்ரீனாவும் களத்தில் இருப்பதால், சவால் அதிகம் காணப்படுகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



கைதடி தெற்கு மின்னொளி மழலைகள் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த வாரம் முன்பள்ளி முன்றலில் நடைபெற்றது. இதில் சிறார்களின் வண்ணமயமான விளையாட்டு நிகழ்வுகள் பல நடைபெற்றன. இதில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், 25 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெற்றி இலக்கை நோக்கி இரு சிறார்கள் ஓடுவதையும் காணலாம். (51)

# இன்றைய ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினரால் நடாத்தப்பட்டு வரும் அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் லீக் போட்டி ஒன்று இன்று யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தெல்லிப்பளை கிறாஸ் கோப்பர்ஸ் அணியும், யாழ். சென்றல் அணியும் மோதவுள்ளன. இப்போட்டியில் வெற்றிபெறும் அணி புள்ளிகள் அடிப்படையில் இறுதிப் போட்டியில் பங்கு கொள்ளும் வாய்ப்பை பெற்றுக்கொள்ளும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி.)

# நந்தகோபன் கைது பல உள்ளூர் வெளியூர் தொடர்புகளை வெளிப்படுத்தும்

– டி.பி.எஸ்.ஜெயராஜ் கட்டுரையிலிருந்து.



Nanthgoban

இலங்கை பாதுகாப்புத் துறை, வெளிநாட்டில் செயல்பட்டு வந்த எல்.ரீ.ரீ.ஈ யின் ஒரு மூத்த தலைவரை ஈரான் மற்றும் மலேசிய அதிகாரிகளின் உதவி மற்றும் ஒத்துழைப்புடன் வெற்றிகரமாக கைது செய்துள்ளது. மூத்த எல்.ரீ.ரீ.ஈ தலைவரான நந்தகோபன் சரியாக ஒரு மாதத்துக்கு முன்பு 2014 மார்ச் 6இல் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளர்.

நந்தகோபன் என அழைக்கப்படும் மூத்த எல்.ரீ.ரீ.ஈ தலைவர், நெடியவன் என்கிற பேரின்பநாயகம் சிவபரனின் கட்டுப்பாட்டிலுள்ள எல்.ரீ.ரீ.ஈ யின் வெளிநாட்டு வலையமைப்பின் இரண்டு பிரதித் தலைவர்களில் ஒருவராவார். நந்தகோபனின் உண்மைப் பெயர் கபிலன், இவரோடு அரவிந்தன் என்கிற இரும்பொறையும்தான், புலம்பெயர்ந்தோர் பகுதியிலுள்ள நெடியவன் குழுவின் இரண்டு பிரதித் தலைவர்களாக உள்ளார்கள். இரும்பொறை ஐரோப்பாவில் செயற்படும்போது தென்கிழக்கு ஆசியாவை தளமாகக் கொண்டு நந்தகோபன் இயங்கி வந்தார்.

மலேசிய ஈரான் அதிகாரிகளின் உதவியுடன் கைது செய்து வந்துள்ள இலங்கை அதிகாரிகள் ஒரு சாமர்த்தியமான கருணையுடனேயே நந்தகோபனை நடத்தி வருகிறார்கள். அவரை ஒரு வசதியான வீட்டில் தடுத்து வைத்திருப்பதுடன் நிபுணத்துவம் வாய்ந்த வைத்தியர்கள் உட்பட மருத்துவர்களால் கவனிக்கப் பட்டும் வருகிறார். ஐரோப்பாவில் உள்ள அவரது மனைவியுடன் தொடர்பு கொண்டு அவரது தற்போதைய நிலைமை பற்றி அறிவிக்கவும் அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிப்பதின்படி, இலங்கை அதிகாரிகளுக்கும் மற்றும் நந்தகோபனுக்கும் இடையே நடந்த ஆரம்பகட்ட கலந்துரையாடல்கள் மிகவும் வெற்றிகரமாக உள்ளன என நிருபிக்கப்பட்டுள்ளன. வெளிப்படையாக நந்தகோபன் ஒரு சூழ்நிலைக் கைதியின் நிலையில் உள்ளதால், இலங்கை அதிகாரிகளுடன் ஒத்துழைப்பதற்கு அதிக ஆர்வம் காட்டுவதுடன் அவர்களுக்கு தேவையான தகவல்களையும் வெளிப்படுத்தி வருகிறார். நந்தகோபன் ஒரு முக்கிய எல்.ரீ.ரீ.ஈ செயற்பாட்டாளரும் தற்போதைய வெளிநாட்டு எல்.ரீ.ரீ.ஈ நடவடிக்கைகள் பற்றிய முதல்நிலை அறிவு உள்ளவராகவும் உள்ளதால், அவரைக் கைது செய்ய முடிந்ததை இட்டு இலங்கை பாதுகாப்பு அதிகாரிகள் மகிழ்ச்சியில் திளைப்பதாகச் சொல்லப்படுகிறது.

எல்.ரீ.ரீ.ஈ தலைவர் சிவபரன் என்கிற நெடியவன், நோர்வே அதிகாரிகளின் அழுத்தம் காரணமாக தன்னைப்பற்றிய குறைவான சுயவிபரங்களை மட்டுமே வெளிப்படுத்தி செயற்பாடுகளை குறைத்துக் கொண்டு நோர்வேயில் வசித்து வருகிறார், அதனால் அவரது நம்பிக்கைக்கு உரிய உதவியாளர்களான நந்தகோபன் மற்றும் இரும்பொறை ஆகியவர்களிடமே வெளிநாட்டு எல்.ரீ.ரீ.ஈ கிளைகள் மற்றும் முன்னணி அமைப்புகளின் நாளாந்த நிருவாகத்தை கவனிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டுள்ளது.

நிதி சேகரிப்புக்கு இரும்பொறை பொறுப்பாகவுள்ள அதேவேளை, நந்தகோபன் முக்கியமாக பிரசாரப் பகுதியில் கவனம் செலுத்தி வந்தார். அவர் எல்.ரீ.ரீ.ஈ சார்பாக உத்தியோகபூர்வ அறிக்கைகளை விடுதலைப்புலிகளின் அனைத்துலக செயலகம் என்கிற பெயரின்கீழ் வெளியிட்டு வந்தார். எல்.ரீ.ரீ.ஈயின் உலகளாவிய பிரசார செயற்பாட்டை நந்தகோபன் ஒருங்கிணைத்து வந்தார். அதற்கு அப்பால் வெளிநாட்டிலுள்ள எல்.ரீ.ரீ.ஈயின் பல்வேறு ஊடக அமைப்புகளான தொலைக்காட்சி வலையமைப்புகள், வானொலி நிலையங்கள், செய்திப்பத்திரிகைகள், இதழ்கள் மற்றும் இணையத் தளங்கள் என்பனவற்றையும் நந்தகோபன் இயக்கி வந்திருக்கிறார். தமிழ்நாடு மற்றும் இலங்கையில் உள்ள அநேக அரசியல்வாதிகள் மற்றும் ஊடகவியலாளர்களையும் கூட நந்தகோபன் தொடர்பு கொண்டிருக்கிறார்.

இலங்கையிலும் மற்றும் வெளிநாட்டிலும் தற்போது நிகழும் எல்.ரீ.ரீ.ஈ செயற்பாடுகள் பற்றி நந்தகோபன் பயனுள்ள தகவல்களை வழங்குவார் என்கிற நன்னம்பிக்கையில் இலங்கை அதிகாரிகள் உள்ளார்கள். "புலம்பெயர் புலிகள் பற்றி அவர் வழங்கும் தகவல்கள் உண்மையில் இன்றைய திகதிக்கு பொருத்தமானதாகவும் பெறுமதி வாய்ந்ததாகவும் இருக்கும், ஏனெனில் அவர் கைது செய்யப்படும் வரைக்கும் அவர் வெளிநாட்டிலுள்ள எல்.ரீ.ரீ.ஈ கட்டமைப்புடன் தொடர்பில் இருந்திருக்கிறார்" என்று அதிகாரப் பூர்வமான வட்டாரம் தெரிவித்தது.

"தற்சமயம் நந்தகோபனிடம் இதுவரை முடிவுற்ற சம்பவங்கள் பற்றிய சுருக்கமான விசாரணை நடைபெற்று வருகிறது, அவருடைய மருத்துவ சிகிச்சையின் பின்னரே முறைப்படியான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன. அப்போது நாங்கள் பெறுமதியான பெருமளவு தகவல்களைப் பெறமுடியும் என எதிர்பார்க்கிறோம். நந்தகோபனிடம் இருந்து புதிய தகவல்களப் பெற்றுக் கொண்டதன் விளைவாக, தடை செய்யப் படுவோர் பட்டியலில் இன்னும் அதிகமான பெயர்களைக் கொண்ட ஒரு புதிய வர்த்தமானி அறிவித்தல்கூட வெளிவரலாம்" என அந்தத் தகவல் வட்டாரம் கூறியது.

புலிகள் இயக்கத்தில் நந்தகோபன் நெடியவனைக் காட்டிலும் மிகவும் மூத்த அங்கத்தவராவார். ஆனால், வெளிநாட்டு எல்.ரீ.ரீ.ஈ அமைப்பில் நந்தகோபன் நெடியவனின் கீழ் துணைத் தலைவராக கடமையாற்றினார்.

உலகளாவிய தமிழ் புலம்பெயர்ந்தோரிடையே உள்ள எல்.ரீ.ரீ.ஈ கிளைகள் மற்றும் முன்னணிகளின் தற்போதைய கட்டமைப்புகள், நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகள் பற்றிய தகவல்களைத் தரக்கூடிய ஒரு சுரங்கமாகவே அவர் கருதப்படுகிறார்.

வரும் நாட்களில் வெளிநாட்டு எல்.ரீ.ரீ.ஈ பற்றியும் தமிழ்நாடு மற்றும் இலங்கையிலுள்ள சில தமிழ் அரசியல்வாதிகளுடனும் மற்றும் ஊடகவியலாளர்களுடனும் உள்ள தொடர்புகள் பற்றியும் பெறுமதியான பல தகவல்களை நந்தகோபன் வெளிப்படுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்தகைய வெளிப்படுத்தல்களின் பின்விளைவுகளை எதிர்காலத்தில் உணரக் கூடிய சாத்தியம் உள்ளது.

# Big Bad Wolves - நானறிந்த ஓநாய்களிலே...




- சுரேஷ் கண்ணன் -

சமீபத்தில் பார்த்த மிகச் சிறந்த திரைப்படமாக. இதைச் சொல்வேன். நண்பர் Quentin Tarantino-வும் இதையே வழிமொழிந்திருக்கிறார் என்பதிலிருந்தே இந்த இஸ்ரேலியத் திரைப்படத்தின் சிறப்பை அறியலாம்.

பல திரில்லர் திரைப்படங்களை பார்த்துப் பழகியவர்கள் கூட எந்த சாத்தியங்களையெல்லாம் யூகிக்கிறார்களோ அதையெல்லாம் உடைத்துக் கொண்டு அற்புதமாக நகர்கிறது திரைக்கதை, ஆங்காங்கே சில சகித்துக் கொள்ளக்கூடிய கிளிஷேக்கள் இருந்தாலும். திரைக்கதை எழுத விரும்புவர்கள் இதை தங்களின் பயிற்சிக்காக கூட எடுத்துக் கொள்ளலாம். கோயன் சகோதரர்களின் பாணியில் அமைந்திருக்கும் இத்திரைப்படத்தை இயக்கியவர்களும் இருவரே. டரண்டினோவையும் ஹிட்ச்கொக்கையும் கலந்ததொரு பாணியில் அமைந்திருக்கிறது இதன் திரைக்கதை.


குரூரமான காட்சிகளின் இடையே வசனங்களிலும் திரைக்கதையின் சில பகுதிகளிலும் தெறிக்கும் அட்டகாசமான அபத்த நகைச்சுவை இத்திரைப்படத்தை மேலும் சுவாரசியமாக்குகிறது. உதாரணமாக எனக்கு மிக பிடித்ததொரு காட்சி. எதிராளியின் மார்பை தீயால் பொசுக்கும் ஒரு கிழவர், பிறகு தனது மனைவியிடமிருந்து வரும் தொலை பேசி உரையாடலின் போது 'தான் சிகரெட் பிடித்ததை சொல்லாதே' என்று சித்திரவதை செய்யப்பட்டவரிடமே சைகையால் திருட்டுக் கெஞ்சல் செய்யும் காட்சி.

படத்தின் ஒளிப்பதிவு (குறிப்பாக shot composition), பின்னணி இசை போன்ற பல நுட்பமான அம்சங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியதும் செல்ல வேண்டிய தூரமும் நிறைய இருக்கிறது. இஸ்ரேலியர்களுக்கும் அரேபியர்களுக்குமான வரலாற்றுப் பகையும் பிரிவும் கூட மின்னல் கீற்றாக சில காட்சிகளில். நடிகர்கள் அத்துணை பேரும் அற்புதமாக நடித்திருக்கிறார்கள்.

சமீபத்தில் வெளியான டென்மார்க் திரைப்படமான 'The Hunt' ஐயும் இதையும் கூட ஒருவகையில் இணைகோடாக வைத்து யோசித்துப் பார்க்கலாம். 'எல்லாவற்றையும் சந்தேகி' என்கிறார் கார்ல் மார்க்ஸ் (தானே?). படத்தின் இறுதிக் காட்சியை நீங்கள் யூகித்து விட்டிருந்தால் நிச்சயம் உங்களை காவல்துறையில் சேர்த்துக் கொள்வார்கள்.

நம்மூர் இளம் இயக்குநர்கள் இதை இறக்குமதி செய்து கொத்து பரோட்டா போட்டு ஒரு காதல் ட்ராக்கையும் குத்துப் பாடலையும் எப்படியாவது இணைத்து விடுவார்கள் என்று யோசிக்கும் போதுதான் ஆயாசமாக இருக்கிறது.

# The USA bombing list since WW2



5

# ஆயிரம் வருடங்கள் வாழ்வது எப்படி?

- சுந்தர் வேதாந்தம் -

மற்ற செல் வரிசைகளைப்போல் மிகச்சரியான வெப்பநிலை, ஈரப்பதம் எதையும் கேட்காமல் கிடைத்த இடத்தில் எல்லாம் இந்த ஹீலா உயிரணுக்கள் சுலபமாக வளருவதால், மருந்து தயாரிக்கும் ஆய்வகங்களுக்கும், பல்வேறு விதமான உயிரணு ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் விஞ்ஞானிகளுக்கும் இந்தச் செல் வரிசை ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. எனவே போலியோ தடுப்பூசி கண்டுபிடித்ததற்கான ஆய்விலிருந்து, எயிட்ஸ் நோய் ஆராய்ச்சி, அக்கி (Herpes), லுக்கிமியா, பலவிதமான காய்ச்சல்கள், இரத்த ஒழுக்கு (Hemophilia) சம்பந்தப்பட்ட ஆய்வுகள், நகலிடுதல் (cloning), மரபணு படமிடல் (gene mapping), கதிர்வீச்சு சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகள் என்று பலவற்றிலும் ஹீலா உயிரணுக்கள் பங்கேற்றிருக்கின்றன, விண்வெளியில் பறந்த றொக்கெற்களில் பயணித்து இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், ரஷ்யாவில் சில ஆய்வகங்களில் ஒரு அறையில் வைக்கப்பட்டிருந்த ஹீலா உயிரணுக்கள் எயர் கண்டிஷன் காற்றோடு சேர்ந்து போய் பக்கத்து அறைகளில் வைக்கப்பட்டிருந்த வேறு செல் வரிசைகளோடு கலந்து, மிக வேகமாக தங்கள் குணாதிசயங்களை அந்த உயிரணுக்களுக்கும் கொடுத்து நடந்த கலப்படத்தின் மூலம், அங்கு நடந்து கொண்டிருந்த வேறு ஆய்வுகளை பாழடித்த வரலாறு கூட உண்டு.

இந்த ஹீலா செல் வரிசையின் சக்தியை புரிந்துகொண்டு விஞ்ஞானிகள் இந்த உயிரணுக்களை மட்டும் மிக மரியாதையுடனும் கவனத்துடனும் நிர்வகித்து வருகிறார்கள். சில புள்ளி விவரங்களின்படி கடந்த அறுபது வருடங்களில் உருவாக்கப்பட்ட ஹீலா உயிரணுக்களின் மொத்த எடை ஐந்து கோடி தொன்களுக்கு மேலாக இருக்குமாம். அந்த எண்ணின் பிரம்மாண்டத்தை ஒரு கணம் நின்று யோசித்து புரிந்து கொள்வது அவசியம்.





Figure 1.3
Diagram of mitosis in animal cells. During interphase, the DNA is doubled in preparation for cell division. During prophase, the nuclear envelope breaks down and a spindle forms between the

### டெலோமியர் மர்மம்

இந்த ஹீலா செல் வரிசை மட்டும் ஹேய்பிலிக் எல்லைக்கெல்லாம் அடிபணியாமல் இஷ்டத்திற்கு வளர முடிந்தது எப்படி என்று பல ஆய்வாளர்கள் நுண்ணோக்கிகளுக்குள் தலையை விட்டு தேடிக்கொண்டிருந்தார்கள்.

இந்தத் தேடலின் முதல் படியாக பாதி வயதான, அதாவது ஒரு இருபத்தைந்து முறை பிரிந்து வளர்ந்த, ஒரு உயிரணுவை கொஞ்ச நாட்கள் மிகக்குறைந்த வெப்பநிலையில் இருக்கும் ஒரு குளிர்பதன பெட்டியில் போட்டு உறைய வைத்தார்கள். அந்த நிலையில் உயிரணுக்கள் பிரிந்து வளர்வது நின்று போய் அவை தூங்கப் போய் விடுகின்றன. பின் அதனை திரும்பவும் சாதாரண வெப்பநிலைக்கு கொண்டுவந்தால் விழித்துக்கொண்டு திரும்பவும் வளர ஆரம்பித்தன. ஆனால் வளர்ச்சி என்னவோ விட்ட இடத்திலிருந்துதான்.

எனவே இன்னொரு இருபத்தைந்து முறை பிரிந்து வளர்ந்தவுடன் போதும் என்று வளர்வதை நிறுத்திக்கொண்டு பின் வழக்கம் போல் மடிய ஆரம்பித்தன. எத்தனை நாட்கள் அல்லது மாதங்கள் அல்லது வருடங்கள் உறைய வைத்தாலும் இந்த நடத்தையிலிருந்து மாறுபாடு எதுவும் தெரியவில்லை. எனவே இத்தனை முறை மட்டுமே பிரிந்து வளர முடியும் என்பதுதான் எல்லையே தவிர குறிப்பிட்ட காலம் என்று எல்லைக்கோடு ஏதுமில்லை என்பது புரிந்தது.

ஆய்வைத்தொடர்ந்து இன்னும் பல கோணங்களில் இருந்து அலசிப்பார்த்து, 1970களிலேயே இந்த ஹேய்பிலிக் எல்லை புதிரின் விடை உயிரணுக்களின் உட்கருவிற்குள்தான் இருக்கிறது என்று நிச்சயம் செய்துவிட்டார்கள். எப்படி? முதலில் ஒரு புது உயிரணுவை எடுத்து ஆய்வகத்தில் பீட்ரி தட்டில் போட்டு அதன்பாட்டுக்கு வளரவிட்டார்கள். அப்படி அது ஒரு நாற்பத்தி ஐந்து முறை பிரிந்து வளர்ந்தபின் அதைக் குளிர்வித்து வளர்ச்சியை தற்காலிகமாக நிறுத்திவிட்டு, மெல்ல அதன் உட்கருவை அறுத்தெடுத்து தூக்கி எறிந்துவிட்டு வேறொரு புது உயிரணுவின் உட்கருவை எடுத்து இந்த உயிரணுவில் பொருத்தி, திரும்பவும் அதை 37 டிகிரி வெப்பநிலைக்கு கொண்டுவந்து எழுப்பிவிட்டார்கள்.

தான் தூங்கிக்கொண்டிருந்தபோது தனக்கு நடந்த அறுவைச் சிகிச்சை பற்றி ஒன்றும் தெரியாத உயிரணு விழித்துக்கொண்டபின் மீதமிருந்த ஐந்து முறை மட்டும் வளராமல் திரும்பவும் ஐம்பது முறைக்கு மேல் வளர்ந்து காட்டியது! எனவே இந்த ஹேய்பிலிக் எல்லை உயிரணுவின் உட்கருவுக்குள் இருந்துதான் நிர்வகிக்கப்படுகிறதென்பது உறுதியானது.

அதற்கப்புறம் இன்னொரு பத்து வருடங்கள் எத்தனையோ ஆய்வாளர்கள் முடியை பிய்த்துக்கொண்டு வழுக்கையானபின், புதிரின் விடை டெலோமியர் என்று சொல்லப்படும் குரோமசோம் நுனிகளில் இருப்பது புரிந்தது.

(தொடரும்)

# ‘ஒரு பெருந்துயரும் இலையுதிர் காலமும்’

- வெள்ளைக் கிருஷ்ணன் -




கு. றஜீபனின் ஐந்தாவது கவிதைத் தொகுதி “ஒரு பெருந்துயரும் இலையுதிர் காலமும்”. வெளியீடு -“காலச்சுவடு”. றஸ்மி அட்டையை வடிவமைத்திருக்கிறார். ஆங்கில நூல்களைப் போல வித்தியாசமான வடிவ மைப்பு. ஜெயமோகனின் முன்னுரை. இந்த முன்னுரை தொடர்பாக முகப்புத்தகத்தில் நீண்ட விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

இந்தப் பின்னணி அல்லது முதன்மைகளோடு உள்ள இந்தக் கவிதை நூல் சமகால அரசியலை உள்ளோட்டமாக விமர்சிக்கிறது. இன்னொரு வகையில் மனதின் உள்ளோட்டங்களைப் பதிவு செய்கிறது. இதைப்பற்றி முன்னுரையில் ஓரளவுக்கு விவரிக்கிறார் ஜெயமோகன். தொகுதியின் தலைப்பைப்போல பெருந்துயரத்தின் பெருமூச்சாகவும் இலையுதிர்காலமுமாகவே பெரும்பாலான கவிதைகள்உள்ளன. இருளிலும் இரத்தத்திலும் புதைந்து போன கடந்த காலத்திலிருந்து மீள முடியாமல் நிகழ்காலத்தில் தவித்துக் கொண்டிருக்கும் கவிஞனின் அக உலகம் கவிதைகள் முழுதிலும் உள்ளோட்டமாகத் தன் நரம்புகளைப் பரவியிருக்கிறது.

“வழிகாட்டிகள்” என்று வந்தோரெல்லாம் தவறாகவே வழிகாட்டியதால், இடம்மாறிப் போன கனவுகள், எல்லாத் துளிர்களையும் கருக்கி விட்டன. இந்த இடம்மாறிய கனவு-களால் இன்னும் துளிர்க்க முடியாத நிலையே தொடர்கிறது. இது பெரும் தத்தளிப்பை, தவிப்பை உண்டாக்குகிறது. இதனால் உறங்க முடியவில்லைக் கவிஞனால். எதிலும் அமைதி கொள்ள முடியவில்லை.

**‘கனத்த வெளிகளாக**
**நிரம்பிப் போயிருக்கிறது**
**எமது எதிர்காலம்**
**பற்றிய வெறுமைகள்....’**

என்பது இந்தக் கொதிப்பின் வெளிப்பாடே. இப்படி மறுகி மறுகித் துயரத்துள் புதையும் மனதையே இந்தக் கவிதைகள் அதிமாகக் கொண்டிருக்கின்றன. நீக்கமற நிறைந்திருக்கும் இலையுதிர்வு. விசும்பல்.

ஆனாலும் றஜீபன் இந்தத் தொகுதிகளை மூன்று பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார். முதல் பிரிவு - ஒரு பெருந்துயரம். இதில் 11 கவிதைகள் உண்டு. முதற்கவிதை, **‘தோற்றுப்போன கனவு-களும் மீள முடியா பெருந்துயரும்’**. இந்தத் தலைப்பே இந்தத் தொகுதியின் அத்தனை கவிதைகளின் அடிச் சரடு. இதுவே அத்தனை கவிதைகளின் நரம்பு. இரண்டாவது பகுதி - இலையுதிர்காலம். இதில் 23 கவிதைகள் உள்ளன.

**‘நீண்டுகொண்டே**
**போகிறது**
**இரவின் கொடிய**
**இருட்டு...**
**ஏதுமறியாக்**
**குழந்தைபோல**
**இன்னும்**
**விழிபிதுங்கியபடியே**
**இருக்கிறோம்**
**எமக்கான ஒரு**
**பகல் இன்னும்**
**விடியவேயில்லை....’**

இலையுதிர்காலம் இன்னும் துளிர்க்கவில்லை என்பதை இந்தப் பகுதி திரும்பத்திரும்பப் பல விதங்களில் சொல்லிக்கொண்டேயிருக்கிறது.

மூன்றாவது பிரிவு - துளிர்ப்பு. நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் என்று வலிய எண்ணினாலும் அதை மீறி அடிச் சரடாக, நரம்பு மண்டலமாக உள்ளோடும் துயர் இங்கும் வந்து பாய்ச்சுகிறது இரத்தத்தை. இந்தப் பிரிவின் முதற்கவிதை, விடிவு. ஆனால் விடிவைப் பற்றிப் பேசவேயில்லை. விடிய முடியாத நிலையைப் பற்றியே விரிகிறது.

**‘அப்படியொன்றும்**
**விடிந்ததாகத்**
**தெரியவில்லை**
**சூரியன் மறைவை**
**மேகம் மறைத்துக்**
**கொண்டுதானிருக்கிறது..**
**......இன்னும்**
**புரிதலுக்கான காலம்**
**கைகூடவில்லையோ..?’**

இப்படி இந்தத் தொகுதியின் முழுக்கவிதைகளுமே அரசியலைத் தம் மையத்துள் வைத்துள்ளன. கவிதைகளின் மூன்று பிரிவுகளும் இதையே வெளிப்படுத்துகின்றன. ஆனால், கவிதைகளில் அரசியல் சொற்களோ, சமகால நிகழ்ச்சிச் சித்திரிப்புகளோ வெளிப்படையாக இல்லை. சமகால நிகழ்ச்சிகளின் பதிவுகளாகவும் விமர்சனங்களாகவும் கவிதைய்ய நேரடிப்படுத்த விரும்பவில்லை றஜீபன். இதன் மூலமாக வழமையான ஈழக்கவிதைகளிலிருந்து சற்று விலகியிருக்க முயற்சிக்கிறார்.

எதிர்ப்புச் சூழல்தான் எதிர்க்கும் மனநிலையை - வீரியத்தை வளர்க்கிறது என்ற நம்பிக்கையோடு தான் வலியுறுத்துகின்ற துளிர்ப்பை நம்பிக்கையாக்குகிறார், இப்படி -

**‘இரைகளுக்காக**
**இன்னமும்**
**காத்திருக்கின்றன**
**பருந்துகள்**
**குஞ்சுகள்**
**மறைக்கப்பட்ட**
**கூடுகளிலிருக்கின்றன**
**பேரண்டத்தின் தாகம்**
**குஞ்சுகள்**
**பருந்துகளாகவே**
**வளர்கின்றன’**

இங்கே ஒரு குழப்பமும் நிகழ்கிறது. வன்முறைக்கு வன்முறைதான் பதிலா. அல்லது வன்முறை வன்முறையை வளர்க்கிறதா? அடக்குமுறைக்குப் பதிலாக இன்னொரு அடக்குமுறையா. வல்லரசிற்குப் பதில் இன்னொரு வல்லரசா?

மரபிலக்கியத்திலும் தமிழ்மொழியிலும் புலமைசார்ந்த வேட்கையோடியங்கும் கு. றஜீபனின் இந்தத் தொகுதிக் கவிதைகள் அவருடைய முந்திய கவிதைகளிலிருந்து விலகியுள்ளன. இந்தப் புதிய பாதை புதிய பயணங்களை அவரிடம் உருவாக்கினால் மேலும் உற்சாகமாக நாம் புதிய கவிதைகளைப் படிக்கலாம்.

றஜீவன் நம்பிக்கையள்ப்பதைப்போல “எரி சாம்புலின் மணம் அடங்கிய காற்றில் புதிய சுவாசம் வீரியம் கொள்வதாக” இருக்கட்டும். சுயவிமர்சனம் என்ற விரிநோக்கில் மீள்பார்வை, தயக்கமின்மை, வெளிப்படை, சார்பின்மை என்று தன் கவிதைகளை நிகழ்த்தி, சமகாலத்தை விதை காலமாக்க முனைகிறார் கு. றஜீபன். இந்தக் கவிதைகளைக் கவனத்திற்குரியதாகக் கொள்ள வேண்டியது, தமிழ்ச் சூழலின் பொறுப்பு.

# புதுவருடப் பிறப்பு நற்கரும விபரம்



இனிய ஜய வருடமானது நாளை திங்கட் கிழமை முற்பகல் 6 மணி 11.நிமிடத்தில் பூர்வபக்க சதுர்த்தசித் திதியில் சாத்வீக குண வேளையில் நட்சத்திர ஆட்சியாகிய காகம் நடைத தொழிலும் சூக்குமபட்சி நடைத்தொழிலும் செய்யுங்காலத்தில் பிறக்கின்றது.

முதல் நாள் இரவு அதாவது ஞாயிற்றுக் கிழமை 2 மணி 11நிமிடம் முதல் முற்பகல் 10 மணி 11 நிமிடம் வரைக்கும் விஷு புண்ணிய காலமாகும்.

இப்புண்ணிய காலத்தில் மக்கள் யாவரும் துயில் நீக்கி எழுந்து தலையிலே மருத்து நீர் தேய்த்து தலையில் ஆலமிலையும் காலில் விளாவிலையும் வைத்து நீராடுதல் வேண்டும்.

அதன் பின்பு வெள்ளை, சிவப்பு நிற ஆடையும் அல்லது வெள்ளை வேட்டி சிவப்புக்கரையுடன் புத்தாடை அணிந்து சுவாமி தரிசனஞ் செய்ய வேண்டும்.

பிறகு தாய் தந்தையரை வணங்கி ஆசி பெற்று குலதெய்வ வழிபாடியற்றி அதன் பின்னர் பெரியோர், மூத்தோர் குரு ஆகியோரை நமஸ்கரித்து ஆசி பெற்றுக் கொள்ள வேண்டும். அதன்பின்னர் உறவினர் நண்பர்களுடன் அளவளாவி தயிர்சாதம் உண்டு மகிழலாம்.

குத்துவிளக்கு, தீபம், நிறைகுடம், கண்ணாடி முதலிய மங்கலப் பொருட்களைத் தரிசித்து எல்லோருடனும் கூடி மகிழ்ந்து அறுசுவை உணவு உண்டு மகிழ்ந்திருக்கலாம்.

முக்கிய குறிப்பு:

ரோகினி, உத்தரம் 2,3,4ஆம் கால்கள், அத்தம் சித்திரை 1,2ஆம் கால்கள், திருவோணம், அவிட்டம் 3,4,6 கால்கள், சதயம், பூரட்டாதி 1,2,3ஆம் கால்கள், ஆகிய இவற்றில் பிறந்தவர்கள் கட்டாயம் தவறாமல் மருத்து நீர் தேய்த்து ஸ்நானஞ் செய்து இயன்ற தான தர்மங்களைச் செய்து தங்களது தோஷத்தை நிவர்த்தியாக்கிப் பரிகாரஞ்செய்தல் வேண்டும்.

**புதுவருடக்கைவிசேஷம்**

14.4.2014 திங்கட்கிழமை காலை 6.11 – 7.31 மு.ப.

10.04 – 12.03

16.04.2014 புதன்கிழமை காலை 6.04 – 7.41 காலை

7.50 – 9.40

சைவநெறிக்கலாநிதி
இராஜசயா ஸ்ரீதரன்

# பண்டிகைக்கால பாதுகாப்பு பொலிஸார் உஷார் நிலையில்

(யாழ்ப்பாணம்)

புதுவருட காலத்தில் யாழ். குடாவில் குற்றச்செயல்களைத் தடுக்கும் முகமாக விசேட பாதுகாப்பு வேலைத்திட்டத்தை பொலிஸார் முன்னெடுக்கவுள்ளதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

இந்தத்தினத்தில் மதுபான நிலையப்பகுதிகளிலும் பிரதான வீதிகளிலும் பொலிஸார் இந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத்தெரிவித்துள்ளார். புதுவருட கொண்டாட்டங்களின் நிமித்தம் மக்கள் பல்வேறு பகுதிகளுக்கும் சென்றுவரக்கூடும் இதன் காரணமாக பொதுமக்களின் பாதுகாப்புக்கருதி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (பா)

# இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பொற்பதி இந்து விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் புதுவருடத்தை முன்னிட்டு 10ஆவது ஆண்டாக இரத்ததான நிகழ்வு நாளை காலை 9 மணிக்கு கொக்குவில் பொற்பதி அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ் இரத்ததான நிகழ்வில் அனைவரும் பங்குகொண்டு உயிர்காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ் இரத்ததான நிகழ்வில் இரத்ததானம் செய்வோருக்கு ஊக்குவிப்பு பரிசில்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப் படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# வறுமையின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு உதவிகள்

(கரணவாய்)

பிரதேச செயலகங்களின் சமூக சேவைப் பிரிவால் வடக்கு மாகாண மத்திய சமூகசேவைத் திணைக்களத்தின் உதவியுடன் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு பல்வேறு சேவைகள் வழங்கப்படுகிறது.

இதில் வாய்பேசாத, காது கேட்காதவர்களுக்கு அடையாள அட்டை வழங்கல் இதற்கு கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்ட பயனாளியின் கோரிக்கைக் கடிதம், மருத்துவச் சான்றிதழ், முத்திரை அளவிலான இரண்டு படம் அவசியமானது.

மேலும் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு சுய தொழிலை மேற்கொள்ள நன்கொடையாக 10 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது. இதற்கு குடும்ப அட்டை, கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்ட பயனாளிகளின் கோரிக்கைக் கடிதம், கணவன் இறப்பு அல்லது விவாகரத்து எனின் அதன் அத்தாட்சிப்பத்திரம் என்பவற்றுடன் சமூகமளித்தல் வேண்டும்.

மாற்று ஆற்றலுடைய குடும்பதுக்கு வீடமைப்பினை மேற்கொள்ள, 250000 ஆயிரம் ரூபாவும், வீடு திருத்தத்திற்கு 1 இலட்சத்து 50 ஆயிரம ரூபாவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே வழங்கப்படுகிறது.

இதற்கு கிராம அலுவலரினால் உறுதிப்படுத்தப்பட்ட பயனாளியின் கோரிக்கைக் கடிதம், மருத்துவச் சான்றிதழ் என்பவற்றுடன் நேரடியாக சமூக மளித்தல் வேண்டும். என அறிவிககப் பட்டுள்ளது.

இதுதொடர்பான தகவல்களை கரவெட்டி பிரதேசத்தில் வசிப்போர் கரவெட்டி பிரதேச செயலக சமூகசேவைப் பிரிவுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (18)

# மக்கள் பங்கேற்பு திட்டத்தில் வீதிகள் மீள புனரமைக்கவேண்டும்

## வலி.மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சி தலைவர் கோரிக்கை

மக்கள் பங்களிப்பு திட்டம் மூலம் வலி. மேற்கில் உள்ள 25 கிராம அலுவலர் பிரிவில் உள்ளக வீதிகளே (பிரதேசசபை) முன்னுரிமை படுத்தப்பட்டுள்ளது.

எனவே 25 கிராம அலுவலர் பிரிவிலும் வாக்கெடுப்பு மூலம் வந்த முதலாவது வீதியை யூன மாதத்திலாவது முன்னுரிமை அடிப்படையில் மீள புனரமைப்புச் செய்ய வேண்டும் என வலிகாமம் ஈ.பி.டி.பி.யின் இணைப்பாளரும் வலி.மேற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான சிவகுரு பாலகிருஸ்ணன் தெரிவித்தார்.

வடக்கின் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டமும் மீள் புனரமைப்பு பணியும் எனும தலைப்பில் சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) மேலும் தெரிவிக்கையில், மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித்திட்டம் வடக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் நிறைவுற்றுள்ளது.

இதில் ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளிலும் பிரதேச சபை வீதிகளே முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு மக்களால் வாக்கெடுப்பு மூலம் முதலாவதாக முன்னிலைப் படுத்தபட்ட வீதிகளை யூன் மாதத்தில் மீள்புனரமைப்பு பணியையும் அதனை தொடர்ந்து ஏனைய அபிவிருத்திகளையும் முன்னெடுத்து அபிவிருத்தி செய்யலாம். இவ்வாறு மக்கள் பங்கேற்பு திட்டத்திற்கு வலுச் சேர்க்க வேண்டுமாயின் கிராம அலுவலர் மட்டத்தில் முதலாவதாக மக்களால் முன்மொழியப் பட்ட திட்டங்களை முன்னெடுக்க சம்பந்தப்பட்ட சபைகள் முன்வர வேண்டும் என கேட்டுக்கொண்டார். (92)


# திருட்டுக்கும்பல் பொலிஸ் வலையில் சிக்கியது

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் யாழ். மாவட்டத்தின் பல் வேறுபகுதிகளிலும் நடைபெற்ற பதினைந்து பாரிய குற்றச்செயல்களுடன் தொடர்புடைய நான்கு பேர் மானிப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருப்பதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இந்தத்தகவலைத்தெரிவித்துள்ளார். குற்றச்செயல்கள் தொடர்பாக பொலிஸார் மேற்கொண்டுவந்த புலனாய்வு நடவடிக்கையின் மூலமாகவே இவர்கள் கைது செய்யப் பட்டதாகவும் தெரிவித்த அவர் இந்தப்பாரிய குற்றச்செயல்களில் இரண்டு சுன்னாகத்தில் நடைபெற்றிருப்பதாகவும் களவு, வீடு உடைத்துக் கொள்ளை, நகைக்களவு மடிக்கணனிகள் திருட்டு, கடை உடைத்துத்திருட்டு என்பன இந்தப் பாரிய குற்றச்செயல்களில் அடங்கியிருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் இவர்கள் கொட்டடி,கொட்டடி கிழக்கு, அளவெட்டி மற்றும் சுன்னாகம் போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவித்த அவர் இவர்கள் எதிர்வரும் 16ஆம் திகதிவரைக்கும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இதேவேளை இந்தச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் தொடர்ந்து புலனாய்வு நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.(பா)




கல்வியமைச்சு இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து வடமராட்சி கல்வி வலய கணனி வள நிலையத்தில் நடாத்திய தேசிய தொழிற்தகைமை கற்கை நெறி அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் விருந்தினர் மங்கள விளக்கேற்றுவதையும், வடமராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் யோ.இரவீந்திரன் உரையாற்றுவதையும், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.ரீ. ஜெயசீலன் யுவதி ஒருவருக்கு கையேட்டை வழங்குவதையும் காணலாம். (01)

# வாழ்வின் எழுச்சி புதுவருடச் சந்தைகள் மக்களின் பொருட்கொள்வனவுக்கு சிறந்தமுறை

## ஈ.பி.டி.பி. வடக்கு மாகாணசபை உறுப்பினர்



... புதுவருடச்சந்தைகள் ம... சிரமமற்ற பொருட்கொள்வனவிற்கு சிறந்த பொறிமுறையாக காணப் படுகின்றது என ஈ.பி.டி.பி.யின் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ...தவநாதன் தெரிவித் துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத் தினால் ஆரம்பிக்கப்பட்ட வாழ் வின் எழுச்சி புதுவருட சந்தை யினை திறந்துவைத்து உரை யாற்றும் போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரை யாற்றுகையில்,

நாடளாவிய ரீதியி... ...டை முறைப்படுத்தப்பட்டுவரும் ... வின் எழுச்சித் திட்டத்தின் மூல... உற்பத்தி செய்யப்படும் உள் ளூர் உற்பத்திகள் நேரடியாக பாவ னையாளர்களை சென்றடைய வேண்டும் என்பதற்காகவும் வரும் புத்தாண்டில் மக்கள் தமக்கு தேவையான பொருட்களை இல குவாக கொள்வனவு செய்வதற் கான வாய்ப்பை வழங்கும் நோக் கிலேயே இவ்வாறான வாழ் வின் எழுச்சி சந்தைகள் நடத்தப் படுகின்றன என்றார்.

அது மட்டுமன்றி எமது மாவட்டத்தில் மீள்குடியேற்றத் தின் பின்னர் வாழ்வின் எழுச்சி திட்டத்தினூடாக அதிகளவான வாழ்வாதார செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன. அவற்றின் முன்னேற்றங்க ளும் இவ்வாறான சந்தர்ப்பங் களினூடாக வெளிக்கொண்டு வரப்படவேண்டும். அத்தோடு இவ் வாறான மக்கள் நலன்சார் திட் டங்களின் மேம்பாட்டுக்காக பல உத்தியோகஸ்தர்களும் அர்ப் ...ணிப்புடன் சேவையாற்றி வரு ...றார்கள். ஆகவே தொடர்ந் து... ...ப்பணத்தோடு உழைக் கின... ...ப்பத்தில் மக்களின் வாழ்ந... ...ரித கதியில் மேம்படுய... அந்த மேம் பாட்டை இலக்... ...வைத்து அனை வரும் செயற்பட... ...ண்டும் என வும் அவர் குறிப... ...டார்.

இதேவேளை உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் இயங்கிவரும் சந்தைகள் வினைத்திறனற்ற நிர் வாகத்தின் கீழ் இயங்கிவருவ தனால் சிரமங்களை எதிர்கொள் ளும் நுகர்வோரின் பிரச்சினை களுக்கு தீர்வினை வழங்கும் வகையில் வாராந்த சந்தைகள் இயங்கவேண்டும். அதற்கான நடவடிக்கைகள் துரிதமாக முன் னெடுக்கப்படவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தரார்.

இதேவேளை இங்கு உரை யாற்றிய மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் பிரதேச ரீதியாக தொடர்ந்தும் வாராந்த சந்தைகளை செயற் படுத்துவதன் அவசியம் உணர்த் தப்பட்டுள்ள நிலையில் அவ் வாறான சந்தைகளை செயற் படுத்தவது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படும் என தெரிவித்தார்.

கரைச்சிப் பிரதேச செயலர் நாகேஸ்வரனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிளி நொச்சி மாவட்டசெயலக உதவித்திட்டப்பணிப்பாளர் மோகனபவன், மாவட்ட சமுர்த்தி திட்ட உதவி ஆணையாளர் இர்பான், மாவட்ட பிர தித்திட்டப்பணிப்பாளர் கேதீஸ் வரன், கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் குகராசா, பிரதேச சபையின் செயலாளர் கிருஸ்ண குமார், கரைச்சி பிரதேச செய லக உதவித்திட்டப்பணிப் பாளர் அமல்ராஜ், தேசிய கைத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்டப்பணிப்பாளர் சசிகரன் உள்ளிட்ட அதிகாரிக ளும் மற்றும் கிராம மட்ட அமைப் புக்களின் பிரதிநிதிகளும் அரச திணைகளங்களின் அலுவலர் களும் வியாபாரிகளும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

## பன்னிரு திருமுறை முற்றோதல்

அகில இலங்கை திருமுறை மன்றத்தினர் சிவயோக சுவாமி களின் பொன்விழா வருட குரு பூசைதினத்தை முன்னிட்டு பன் னிரு திருமுறை முழுவதும் முற் றோதவுள்ளனர்.

நாளை பிறக்கவிருக்கும் ஜய வருடப்பிறப்பன்று தொடங்கி தினமும் காலை 7மணி முதல் 8 மணிவரையும் மாலை 5 மணி முதல் மாலை 6மணிவரையும் யாழ். சிவத்தொண்டன் நிலைய நாயன்மார் மண்டபத்தில் மாதம் ஒரு திருமுறை முற்றோதல் என பன்னிரண்டு மாதமும் பன்னிரு திருமுறையை முற்றோதவுள் ளனர்.

இந்த முற்றோதல் நிகழ்வில் பங்கு கொள்ள விரும்பும் அடி யார்கள் பங்கு கொண்டு பயன் பெறலாம் என மன்ற அமைப் பாளர் அறிவித்துள்ளார்.


## சமுர்த்தி உத்தியோகத்தர்களின் கணக்குகள் திடீரென மீளாய்வு

யாழ். மாவட்டத்தில் பணி யாற்றும் சமுர்த்தி உத்தி யோகத்தர்களின் கணக்குகள் திடீரென மீளாய்வு செய்யப் பட்டு வருவதாக தெரிவிக்கப் படுகின்றது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் தீவுப்பகுதியில் கடமை யாற்றுகின்ற சமுர்த்தி உத்தி யோகத்தர் ஒருவர் பயனாளி ஒருவரிடமிருந்து சேமிப்புப் பணத்தினைப் பெற்றுள்ளதாக வும் அந்தப் பணத்துக்குரிய பற்றுச்சீட்டில் புதுவருட தினத் துக்குரிய திகதி பதியப்பட் டுள்ளதாக யாழ். மாவட்ட சமுர்த்தி தலைமை அலுவலகத் துக்குக் கிடைத்த தகவலைய டுத்தே இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருவதாக தெரி விக்கப்படுகின்றது.

கடந்த வருடமும் இது போன்ற சம்பவம் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமன்றி இத்திட்டத் துக்கமைய திரட்டப்படுகின்ற சேமிப்புகளுக்கு ஒருசில சமுர்த்தி அலுவலர் பின் திகதியிட்ட பற் றுச்சீட்டுக்களை வழங்கியுள்ள தாக பயனாளிகள் அதிகாரியி டம் சுட்டிக்காட்டியுள்ளனர். இத னைத் தடுக்கும் முகமாகவே இந்த நடவடிக்கைகள் நடைபெற் றுவருகிறது. என தெரிவிக்கப் படுகின்றது.



வண்ணை காமாட்சி அம்பாள் ஆலய மஞ்சத்திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றபோது...

## சிறப்பு பூசை வழிபாடுகள்

சுன்னாகம் சிவன்கோயில் தேவஸ்தானத்தில் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு சிறப்புப் பூஜை வழிபாடு இடம்பெறவுள் ளது.

காலை 6மணிக்கு சங்கராந்தி அபிஷேகம் இடம்பெற்று அத னைத் தொடர்ந்து விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறும் அத னைத் தொடர்ந்து சுவாமி வீதி யுலா வரும் காட்சியும் இடம் பெறும்.

## பதிவிறக்கப் பெட்டகம்

ஈழத்து இலக்கியப் பரப்பில் போர்க்கால இலக்கியம் குறித்து உரையாடல், அதிகம் கவிதைகளில்தான் மையங் கொண்டுள்ளது. அரச ஒடுக்குமுறையாலும் அதற்கு எதி ரான குரல்களாலும், ஈழத்து கவிதை புடம்போடப்பட்ட அன் றைய நாட்களில், போர்க்கால இலக்கியம் என்பது பெருமள விற்கு அரச ஒடுக்குமுறை சார்ந்து உருப்பெற்றதேயன்றி, போராளிகள் என்போரின் மக்கள் விரோத செயல்களை முன் னிறுத்தியதாக, அது அமைந்திருக்கவில்லை. ஆங்காங்கே ஒரு சில குரல்கள் வெளிப்பட்டதேயன்றி, அது ஒரு ஒரு இலக் கியப் போக்காக இருக்கவில்லை. ஆங்காங்கே வெளிக் கிளம்பிய சில குரல்களும் ஈழத்து இலக்கிய உரையாடல் வெளிக்குள் இடம்பிடிக்க முடியாதவொரு சூழலே அன்று நில வியது.

விடுதலைப்புலிகள் வசம் ஒரு கட்டுப்பாட்டு பகுதியிருந்த காலத்தில், ஏராளமான படைப்புக்கள் வெளிவந்திருந்தன. புலி உறுப்பினர்கள் பலரும் எழுதியிருந்தனர். அவ்வாறான படைப்புக்களில் விடுதலைப்புலிகளை விமர்சிப்பதென்பது முடியாதவொரு காரியமாகவே இருந்தது. வன்னிக்கு வெளி யிலிருந்து எழுதியவர்களும் கூட, தங்களது படைப்புக்க ளில் அரச அடக்குமுறைகள் குறித்து பேசியளவிற்கு, ஒரு சிறிதளவேனும் விடுதலைப்புலிகளின் தவறுகள் குறித்து பேசியதற்கு சான்றில்லை.

ஆனால் இன்று எல்லாவற்றையும் காய்தல் உவத்தலற்ற முறையில், திரும்பிப் பார்க்குமாறு காலம் படைப்பாளுமை களை வலியுறுத்துகின்றது. ஆனாலும் இதுவரை பேசப்பட் டவை ஒரு சிறு பகுதியென்பதே எனது அபிப்பிராயம். பேச வேண்டியவைகள் இன்னும் ஏராளம் உண்டு. அனைத்தும் இலக்கியப்பரப்பில் பேசப்படும் ஒரு சூழல் தோன்றும் போது தான், ஈழத்தின் போர்க்கால இலக்கியமென்பது அதன் முழு வீச்சில் வெளிப்படும்.

ஆனால் இதிலுள்ள துயரம், ஈழத்து அரசியல் பரப்பில், புனிதமென்றுரைத்த ஒன்றின் மீதான விமர்சனம், நேற்று எவ்வாறு நோக்கப்பட்டதோ, இன்றும் கூட அது அவ்வாறுதான் நோக்கப்படுகிறது. இது ஈழத்து அரசியலின் சாபக்கேடு. அது இலக்கியத்திலும் தொடர்கிறது. அரசியல் எங்கெல் லாம் ஜனநாயக மறுப்புடன் புணர்ந்து கொள்கிறதோ, அங் கெல்லாம் இலக்கியத்திலும் ஒரு அச்சுறுத்தும் அசரீரி இருக் கவே செய்யும். ஜனநாயகத்தை மற்றவர்களிடம் கோரும் சில தமிழ்த் தேசியவாதிகள், அதனை தங்களுக்குள் அனும திக்க முடியாத கோழைகளாகவும் இருப்பதன் வெளிப்பாடே இது.

**– யதீந்திரா ("ஒரு பயணியின் போர்க்காலக் குறிப்புகள்" நூல் விமர்சனத்தில்)**

மதியம் ஒரு நண்பருடன் தொலைபேசிக் கொண்டிருந்த போது பேச்சு 'அசீமானந்தா' பக்கம் திரும்பியது. எல்லா மதங் களையும் சமமாக ஏற்கும் இராமகிருஷ்ண பரமஹம்சரின் வழியிலிருந்து அவர் மாற்று மதத்தினரை வெறுக்கும் ஆர்.எஸ்.எஸ் வழிமுறைக்கு எப்படித் திரும்பினார் எனப் பேச ஆரம்பித்தோம். அசீமானந்தா தன் வழிமுறைகள் பற்றி நேர்மையாகவும், உண்மையாகவும் பேசுவதைக் குறித்து நான் சொன்ன போது அந்த நண்பர் கேட்டார். "அப்படியென் றால், அவரை வன்முறையாளர் இல்லை victim என்று சொல் லலாமா?"

இல்லை அப்படிச் சொல்ல இயலாது. நூறுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்ட பல வன்முறைகளில், திட்டமிடுதல் தொடங்கி, வெடி குண்டு தயாரிப்பிற்கான நிதி உதவி செய்வது, வெடி குண்டுத் தாக்குதலை நடத்திவிட்டு வந்தவர்களைத் தன் ஆசி ரமங்களில் வைத்துப் பாதுகாப்பு அளித்தது வரை இந்தத் தாக்குதல்களில் தனது பங்கை அவர் வெளிப்படையாக ஒத் துக் கொள்கிறார். "ஆனால் தன் வன்முறை பற்றி அவருக் குக் குற்ற உணர்ச்சி இல்லை. அது இந்துக்களுக்குத் தான் ஆற்றும் நன்மை என அவர் மனதார நம்புகிறார்..."

சிறிது நேரத்திற்குப் பின் தொடர்ந்தேன். "ஆனால் ஒரு வகையில் நீங்கள் சொல்வது உண்மைதான். அவர் ஒரு வகையில் victim தான்."

"Victim of Ideology"

அமார்த்ய சென் Identity I Violence என்றார். Ideology யும் கூட ஒரு வகையில் Violence தான்.

"ஆனால் Ideology ஐ "நல்லது X கெட்டது" எனப் பிரிக்கலாம் தானே?" – இது நண்பர்.

"பிரிக்கலாம்தான். படுகொலைகளையும் நல்லவை–கெட் டவை எனப் பிரிக்க முடியுமானால்" என்றேன். –அ.மார்க்ஸ்

# கூட்டமைப்பின் இரு தவிசாளர்களை பதவிநீக்க தமிழர் விடுதலைக்கூட்டணி ஏகமனதாக தீர்மானம்

கடந்த 5 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைச் செயலகத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் சபைக்கூட்டம் கட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த பொதுச் சபை உறுப்பினர்கள் தங்கள் மாவட்டங்களைச் சார்ந்த பிரச்சினைகளையும், ஆலோசனைகளையும் முன்வைத்து பிரேரணையைச் சமர்ப்பித்தனர்.

வன்னிப் பிரதேசத்தின் இரு தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆட்சிப் பொறுப்பில் உள்ள தவிசாளர்களின் பொறுப்பற்ற தன்மைபற்றியும், பாரபட்ச நடவடிக்கை பற்றியும், முரண்பாடுகள் பற்றியும் சபை உறுப்பினர்களே குற்றச்சாட்டுக்களை முன்வைத்ததாகத் தெரியவருகிறது.

பொதுச்சபை உறுப்பினர்கள் பலரது கருத்துக்களுக் குப்பின் இரு தவிசாளர்களையும் கட்சியிலிருந்து விலக்கி தவிசாளர் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென ஏகமனதாக முடிவெடுத்துள்ளனர்.

# ரஷ்யாவுக்கு புதிய தூதுவர் மேஜர் ஜெனரல் கிரிசாந்த டி சில்வாவுக்கு வாய்ப்பு



(கொழும்பு)

இராணுவத்தின் தலைமை அதிகாரியாக பணியாற்றி வருகின்ற மேஜர் ஜெனரல் கிரிசாந்த டி சில்வாவை, ரஷ்யாவுக்கான பிரதித் தூதுவராக அரசாங்கம் நியமிக்கவுள்ளதாக கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இவர் இலங்கை இராணுவத்தின் இரண்டாம் நிலைத் தளபதியாகவும் உள்ளார். இரண்டு ஆண்டுகளுக்கு இவர் ரஷ்யாவில் பிரதித் தூதுவராகப் பணியாற்றவுள்ளார்.

தற்போது ரஷ்யாவுக்கான பிரதித் தூதுவராகப் பணியாற்றும் மேஜர் ஜெனரல் நந்தன உடவத்தையிடம் இருந்து இவர் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவுள்ளார்.

# முப்படைகளும் உஷார் நிலையில் மக்களும் விழிப்புடன் இருக்கவேண்டும்

## இராணுவப்பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாதுகாப்பு தொடர்பாக முப்படைகளும் எந்த நேரமும் உஷார் நிலையில் உள்ளன. எனவே பொதுமக்களும் விழிப்புடன் இருக்கவேண்டும் என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்ட 5 இலட்சம் ஏக்கர் காணி பொது மக்களிடம் வழங்கப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக வடக்கில் இராணுவ முகாம்கள் காணப்பட்ட 26 ஆயிரத்துக்கும் அதிகமான காணிப்பகுதியில், முகாம்கள் அகற்றப்பட்டு தனியாருக்கும், அரசாங்கத்துக்கும் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய இதனைத் தெரிவித்துள்ளார். கோபி, அப்பன் மற்றும் தேவியன் ஆகியோர் இராணுவ நடவடிக்கையால் கொல்லப்பட்டமை தொடர்பில் கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தேசிய பாதுகாப்பு தொடர்பில் பாதுகாப்பு தரப்பினர் தொடர்ந்து எச்சரிக்கையுடன் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் செயற்படுகின்ற சிலத் தரப்பினர் தொடர்பில் பாதுகாப்பு தரப்பினரைப் போலவே, பொது மக்களும் அவதானமாக இருக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

எனினும் பாதுகாப்புத் தொடரபில் யாரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

# வாக்கு எண்ணும் நடவடிக்கை பொன்சேகாவுக்கு திருப்தியில்லை

## மீள எண்ணப்பட்டது விருப்பு வாக்குகள்

சரத் பொன்சேகா தலைமையிலான ஜனநாயகக் கட்சியின் விருப்பு வாக்குகள் நீதிமன்ற உத்தரவையடுத்து மீள எண்ணப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் நடைபெற்ற மேல் மாகாணசபைத் தேர்தலில் சரத் பொன்சேகா தலைமையிலான ஜனநாயகக் கட்சி போட்டியிட்டது.

இந்தக் கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்கள் சிலரினால் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து, விருப்பு வாக்குகளை மீள எண்ணுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி மற்றும் வேட்பாளர்கள் முன்னிலையில் நேற்று விருப்பு வாக்குகளை எண்ணும் நடவடிக்கை ஆரம்பமானது.

தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்களின் விருப்பு வாக்குகளில் மாற்றமிருக்காது எனவும், தோல்வியடைந்த உறுப்பினர்களின் விருப்பு வாக்குகளில் சில மாற்றங்கள் காணப்படலாம் எனவும் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கூட்டமைப்பு தூதுக்குழு தென்னாபிரிக்காவில் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

தென்னாபிரிக்கா சென்றுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள், அந்நாட்டின் இலங்கைக்கான சிறப்பு பிரதிநிதி சிறில் ரம்போஷாவை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர்.

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான பிரதிநிதிகள் கடந்த 9 ஆம் திகதி தென்னாபிரிக்காவுக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ளதுடன் இன்று வரை அவர்கள் அங்கு தங்கியிருப்பர். இலங்கைக்கான தென்னாபிரிக்காவின் சிறப்பு பிரதிநிதியை சந்தித்த கூட்டமைப்பின் பிரதிநிதிகள், அவருடனான பேச்சுவார்த்தைகள் பயனுள்ளதாக அமைந்தது எனக் கூறியுள்ளனர். தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேகப் ஜூமா நியமித் துள்ள இலங்கைக்கான சிறப்பு பிரதிநிதி ரம்போஷா விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ள நிலையில் கூட்டமைப் பினருடன் இந்தச் சந்திப்பு நடந்துள்ளது.

# புலிகள் விட்டுச் சென்ற முகாமில் புதையல் தோண்ட முயற்சித்தவர்கள் கைது

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவில் புதையல் தோண்டும் முயற்சியில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 09 பேரையும் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காரக்காடு பிரதேசத்தில் புலிகளின் முகாம் இருந்த பிரதேசத்தில் புதையல் தோண்டிக்கொண்டிருந்ததாகக் கூறப்படும் 09 பேர் கடந்த 28ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

குறிப்பிட்ட இடத்தில் பணம் அல்லது பெறுமதியான பொருட்கள் புதைத்து வைக்கப்பட்டிருக்கின்றதா என்பதைக் கண்டறிய பேராதனைப் பல்கலைக்கழகத்தின் உதவி நாடப்பட்டிருந்த நிலையில் இரு பேராசிரியர்கள் இது தொடர்பில் ஆய்வினையும் மேற்கொண்டு நீதிமன்றில் அறிகைக சமர்ப்பித்திருந்தனர்.

இது தொடர்பான வழக்கு வியாழக்கிழமை ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி றியாழினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது சந்தேக நபர்களின் சார்பில் பிரபல சட்டத்தரணி பிரேம்நாத் ஆஜராகி வாதங்களை முன்வைத்தார்.

இதன்போது பொலிஸாரினால் பிணையில் விடுவிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்ட போதும் குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரங்களை சமர்ப்பிக்குமாறு சட்டத்தரணி பிரேம்நாத் கோரியிருந்தார்.

இந்த நிலையில் சந்தேக நபர்கள் தொடர்பில் போதிய ஆதாரங்கள் இல்லாத காரணத்தினால் ஒன்பது பேரையும் நீதிமன்றம் விடுவித்ததாக சட்டத்தரணி பிரேம்நாத் தெரிவித்தார்.

# சொகுசு பேருந்து சேவை வடமேல் மாகாணத்தில் ஆரம்பம்

(கொழும்பு)

பொது நலவாய மாநாட்டுக்காக கொண்டு வரப்பட்ட ஒன்பது கோடி ரூபா பெறுமதிமிக்க ஆறு சொகுசு பேருந்துகள் வடமேல் மாகாணத்தில் சேவையில் ஈடுபடுத்தும் உத்தியோகபூர்வ வைபவம் குருநாகல் பஸ்தரிப்பு நிலையத்தில் நடைபெற்றது.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு தேசத்திற்கு மகுடம் வேலைத் திட்டத்தின் கீழ் இந்த சேவை வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வடமேல் மாகாண முதல் அமைச்சர் தயாசிறி ஜயசேகர கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

இதில் குருநாகல் மாநகர முதல்வர் காமினி பெரமுனகே உட்பட இலங்கை போக்குவரத்து சபை உத்தியோக்தர்களும் கலந்துகொண்டனர்.

இந்த ஆறு பேருந்துகளில் குருநாகல் தெற்கு டிப்போவுக்கு ஒன்றும் குருநாகல் வடக்கு டிப்போவுக்கு ஒன்றும், குளியாப்பிட்டிய டிப்போவுக்கு இரண்டும், சிலாபம் டிப்போவுக்கு இரண்டும் எனப் பகிர்ந்தளிக்கப்பட்டது குருநாகலில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த இரண்டு பஸ்களும் குருநாகல் - கண்டி 602 இலக்க வீதியில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

# விதிகளை மீறினால் வர்த்தகர் மீது நடவடிக்கை

## வர்த்தக அமைச்சு அறிவிப்பு

நுகர்வோர் சட்டங்களை மீறி செயற்படுகின்ற வர்த்தகர்களை சுற்றிவளைக்கும் நடவடிக்கைகள் புதுவருடப் பிறப்பு நிடைவடைந்த பின்னரும் மேற்கொள்ளப்படவுள்ளன.

வர்த்தகத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ இதனைத் தெரிவித்துள்ளார். தரமற்ற பொருட்கள், பொருட்களைப் பதுக்கி விற்றல், விலையை அதிகரித்து விற்றல் போன்றசெயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அததுடன் கட்டுப்பாட்டு விலையை மீறி அரிசி விற்பனையில் ஈடுபடுகின்ற வர்த்தகர்களை கைது செய்வதற்கான சுற்றிவளைப்பு நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# யுத்தத்தால் உளநலப் பாதிப்பு மனநல சிகிச்சைக்கு செயற்றிட்டம்

(கொழும்பு)

யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கு மனநல ஆலோசனை வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கு விரைவில் மன நல ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்க உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

மனநல ஆலோசனைகளை வழங்குவது மிகவும் அவசியமானது என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

யுத்த வலய மக்கள் எதிர்நோக்கக்கூடிய உளவியல் பிரச்சினைகள் மற்றும் ஏனைய அழுத்தங்கள் தொடர்பில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சமூக சேவைகள், மகளிர் விவகாரம், சுகாதாரம் போன்ற பல்வேறு அமைச்சுக்களினால் இந்த ஆலோசனைச் சேவைகள் நடாத்தபபடுகின்றன.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு எவ்வாறான ஓர் பொறிமுறைமையின் கீழ் மனநல ஆலோசனைகளை வழங்குவது என்பது குறித்து அண்மையில் கலந்துரையாடப்படடுள்ளது.

# சந்திரிக்காவின் மெய்க்காவலர்களுக்கு மன்னிப்பு வழங்கினார் ஜனாதிபதி


ரூகாந்த மற்றும் சந்திரலேகா ஆகியோருக்கு இடையூறு விளைவித்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் குற்றவாளிகளாக நீதிமன்றத்தினால் இனங்காணப்பட்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் பாதுபாப்பு பிரிவைச்சேர்ந்த 10 பேருக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மன்னிப்பு வழங்கியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து அந்த 10 பேரும் சிறைச்சாலையிலிருந்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வெளியேறியுள்ளதாக அந்த செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


25) SLT என்பதன் அர்த்தம்
1) பத்திரிகை நிறுவனங்கள் 2) நூலகம்
3) ஸ்ரீலங்கா டெலி கொம் 4) இலங்கைஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

26) வெளிநாட்டுக்கு அனுப்பவேண்டிய கடிதத்தை இடவேண்டிய தபால் பெட்டியின் நிறம் என்ன?
1) நீலம் 2) சிவப்பு 3) பச்சை 4) வெள்ளை

27. கீழே தரப்பட்ட படங்களுள் எல்லே விளையாட்டின் படம் எது?

(1)

(2)

(3)

(4)


28) தாவரங்களின் தண்டுகள் ஒளியை நோக்கி வளருவதற்குக் காரணம் எது?
1) உறக்க முன்னிலை அசைவு 2) ஒளித்திருப்ப அசைவு
3) தொடுகை முன்னிலை அசைவு 4) இரசனை அசைவு

29) வீட்டு ஈக்கள் மூலம் பரப்பப்படும் நோய் எது?
1) பெரி பெரி 2) மலேரியா 3) கொலரா 4) கழலை நோய்

30) இலங்கையிலுள்ள எழுத்தாளர்களின் படைப்புக்களை பதிந்து வைத்து புலமைச் சொத்துரிமையை பாதுகாக்கும் அமைப்பின் குறியீடு
1) ISBN 2) SLA 3) ISO 4) LLO

31) புராதன இலங்கையில் முதன் முதலில் அமைக்கப்பட்ட குளம் எது?
1) கலாவாவி 2) அபயவாவி 3) திஸாவாவி 4) நம்பொட

32) நிலத்திலும் நீரிலும் இறங்கக்கூடிய விமானம் எவ்வாறு அழைக்கப்படும்?
1) எயார்பஸ் 2) ஜெட்விமானம் 3) சீபிளேன் 4) யுத்த விமானம்

33) இலங்கையில் உள்ள மிக அழகான நீர்வீழ்ச்சி எது?
1) துன்கிந்த 2) பம்பரகந்த 3) விக்டோரியா 4) நம்பொட

34) விவசாயிகளுக்கு உதவும் பிராணி எது?
1) நுளம்பு 2) மண்புழு 3) நத்தை 4) அணில்

35) நெல் அறுவடையுடன் தொடர்புடைய கிராமிய சொல் எது / எவை?
1) அரிவிவெட்டல் 2) பொலி தூற்றுதல்
3) குஞ்சுவாயன் 4) மேற்கூறியயாவும்

36) மரத்தில் இறுக்கமாக அறையப்பட்டுள்ள ஆணியைப் பிடுங்குவதற்கு பொருத்தமான உபகரணம் எது?
1) புரிசாவி 2) ஆணி பிடுங்கி 3) திருகுயக்கு 4) திருகாணி

**இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்**



## தரம் - 5 புலமைப் பரிசில் ப[illegible]சை - 2014

பகுதி - II
1 மணி 15 நிமி



# கல்விமுரசு

பின்வரும் நிகழ்ச்சி நிரலை வாசித்து அதன் கீழ் கேட்கப்படும் வினாக்களுக்கு [illegible]டை எழுதுக.

**பாடசாலைப் பரிசளிப்பு விழா - 2012**

இடம் : பிரதான மண்டபம்
திகதி : 30- 05- 2012
நேரம் : பி.ப 2.00 - பி.ப 6.30
1- இறை வணக்கம்
2- மங்கள விளக்கேற்றல்
3- வரவேற்புரை - துணையதிபர்
4- தலைமையுரை - அதிபர்
5- முதன்மை விருந்தினர் உரை
6- பரிசில்கள் வழங்குதல்
7- கலை நிகழ்ச்சிகள் - சின்னஞ் சிறிய மாணவர்கள்
8- நன்றியுரை
9- தேசிய கீதம்

1) "பரிசளிப்பு" என்பதனைப் பிரித்து எழுதுக? ----------------------------------
2) பரிசளிப்பு விழா நடைபெறுவதற்கு எடுத்த நேரம் எவ்வளவு? -------------------
3) இங்கு வந்துள்ள அடுக்கிடுக்குத் தொடரை எழுதுக. -------------------------
4) நிரலில் உள்ள பெயர் அடைமொழி ஒன்று தருக ------------------------------
5) இந்நிகழ்ச்சியில் வரவேற்புரையை வழங்கியவர் யார்? -------------------------
6) இங்குள்ள பொதுப்பாற் சொற்களுள் ஒன்றை எழுதுக? -----------------------

02) பின்வரும் தொடர்கள் ஒவ்வொன்றும் வெளிப்படுத்தும் கருத்தை எழுதுக.
1) அத்தி பூத்தாற் போல ---------------------------------------------------
2) வேலியே பயிரை மேய்ந்தது -----------------------------------------------

03) பின்வரும் தொடர் மொழிக்கு ஒரு மொழி எழுதுக.
1) அரசன் முறை கேடாக ஆளும் ஆட்சி -------------------------------------
2) உணவாகப் பயன்படும் உமி நீக்கப்பட்ட நெல்-------------------------------
3) இனிப்பு, புளிப்பு , உவர்ப்பு , துவர்ப்பு, உறைப்பு , கசப்பு ஆகியன ------

04) அடைப்பில் உள்ள சரியான விடையைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.
1) வேடன் வில்லை வளைத்துப் ------------------------ தொடுத்தான்.
(பானம் / பாணம்)
2) சதங்கையின் ------------------------ கணீர் கணீர் என்று கேட்டது.
(ஒழி, ஒலி, ஒளி)

05) சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் அமைக்க

திருத்துவது / காரியம் / சிறுவயதில் / இயலாத / திருந்தாத / பிள்ளையைத்

------------------------------------------------------------

06) பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

1) நீ அதைப் பார்த்தாயா என்று கேட்டான்

2) கொழும்பு மட்டக்களப்பு கண்டி காலி ஆகிய இடங்களில் கண்காட்சி நடைபெறும்

07) பின்வரும் வசனங்களில் காணப்படும் பிழையை திருத்தி சரியான வசனத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

1) நான் கடைக்குச் சென்று இளனி வாங்கி அருந்தினேன்

------------------------------------------------------------

2) பரீட்சையில் சித்திஅடைந்ததால் ராணி பல்கலைக்கழகம் சென்றாள்

------------------------------------------------------------

08) கீழே உள்ள மரபுத் தொடரின் கருத்தை எழுதுக.

1) உப்பில்லாப் பேச்சு ----------------------------------------

2) கதை கட்டுதல் ----------------------------------------

09) பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொல்லை எழுதுக.

1) ஜுன் ---------------- 2) ஆகஸ்ட் ----------------

3) டிசம்பர் ----------------

10) கருத்தை தமிழில் எழுதுக.

1) Please Clean the Classroom

------------------------------------------------------------

2) Wash your hands

------------------------------------------------------------


11) சிங்களச் சொற்களுக்கும், வசனத்துக்கும் உரிய தமிழ்க் கருத்தை எழுதுக.

1) கெசெல் ----------------------------------------

2) நீல் பாட்ட ----------------------------------------

3) குருதுமி உகன்வனவா ----------------------------------------

12. அரச விளம்பரப் பலகையில் இவ்வாறான மலர் இருப்பதை அவதானித்திருப்பீர் அதன் அர்த்தம்




1) வளமான எதிர்காலம் 2) உலக நிலைப்பாடு
3) தர்மமும் நீதியும் 4) சமாதானம்



13) இலங்கைப் பணத்தை அச்சிட்டு வெளியிடும் வங்கி எது?
1) மக்கள் வங்கி 2) மத்திய வங்கி
3) இலங்கை வங்கி 4) கொமஷியல் வங்கி

14)



அருகில் உள்ளபடத்தின் அர்த்தம்
1) இங்கே குப்பை போடவும்
2) இங்கே குப்பை போடவேண்டாம்
3) குப்பை போட்டால் தண்டனை
4) சுத்தத்தைப் பேணவும்

15) பின்வரும் பூக்களில் இரவில் மலரும் பூ
1) செம்பருத்தி 2) தாமரை 3) நந்தியாவட்டை 4) இருவாட்சி

16) மருந்தாகப் பயன்படும் இலைகளில் ஒன்று
1) கற்பூரவள்ளி 2) மாவிலை 3) நொச்சி 4) பாகை

17) எமது நாட்டின் தேசியப்பறவை
1) காணாங்கோழி 2) வெண் புறா 3) காட்டுச்சேவல் 4) இருவாட்சி


18) மீன்டின் ஒன்றைத் திறக்க மிகப் பொருத்தமான உபகரணம்
1) டின் கட்டர் 2) மூடி திறப்பான் 3) பாக்குவெட்டி 4) வாள்

19) பாது காப்புக்காக பயன்படுத்தும் உபகரணமாக அமையாதது
1) தலைக்கவசம் 2) கையுறை 3) சப்பாத்து 4) சீருடை

20) பேருந்தில் கண்டிப்பாக பயணிக்கக்கூடாத பகுதி
1) ஆசனம் 2) மிதிபலகை
3) பின்பக்க ஆசனம் 4) சாரதிக்கு முன்னால் உள்ள ஆசனம்

21. முன்னால் வலப்பக்கம் திரும்பவும் என்பதை வெளிப்படுத்தும் வீதிக்குறியீடு எது?


1) 2) 3) 4)



22) வேலைகளை இலகுவாக்க பாடப்படும் பாடல் வகைகளுள் அடங்குவது
1) தாலாட்டுப்பாடல் 2) தொழிற்பாடல்
3) ஒப்பாரிப்பாடல் 4) கும்மிப்பாடல்

23) பின்வரும் விவசாய உபகரணங்களில் ஏர் எது?

1)



24) ஊச்சு துளைக கமராவனூடாக பொருளொன்றை பாககும போது தோனறும வதம்
1) நேராக 2) பெரிதாக
3) தலைகீழாக 4) சாய்வாக

# அந்த கறுப்புப் பட்டியலில் உள்ளவர்கள் யார்?

(முன்னைய தொடர்....)

நடேசப்பிள்ளை சிவதாசன் அல்லது ராசன், பிறந்த இடம்: வி.கி குடியுரிமை: நெதர்லாந்து தாவடி தெற்கு, கொக்குவில், நித்தியானந்தம் பொன்னுத்துரை அல்லது மனோ, பிறந்த இடம்: வி. கி குடியுரிமை: நெதர்லாந்து மாவிட்டபுரம், தெல்லிப்பளை, ஜேசுரத்தினம் ஜோசப் மனோகரன் அல்லது மனோ,பிறந்த இடம்: வி.கி குடியுரிமை: நெதர்லாந்து கோவிந்தபுரம், இளவாலை, யாழ்ப்பாணம், திருநா இளவரசன் அல்லது அரசன் பிறந்த இடம் : வி.கி., குடியுரிமை: நெதர்லாந்து புற்றளை புலோலி தெற்கு, புலோலி, இரத்னசிங்கம் ஜெயபாலன் அல்லது பாலன் பிறந்த் இடம் : வி.கி., குடியுரிமை: நெதர்லாந்து மணல்தெரு, கம்பர் மலை, வல்வெட்டித்துறை, அருளானந்தசிவம் கமலநாதன் அல்லது பங்கயன், பிறந்த இடம் : வி.கி., குடியுரிமை: நெதரலாந்து கலைநகர் வீதி, சித்தங்கேணி, சிவதாசன் பிறந்த இடம்: வி.கி., குடியுரிமை: நெதர்லாந்து முருகேசு ரகுபதி, பிறந்த இடம்: வி.கி., குடியுரிமை: நியூசிலாந்து வியாபாரிமூலை, பிரதான வீதி, பருத்திதுறை, பாண்டியன் (என அறியப்படுகின்ற பெயர்), பிறந்த இடம் : வி.கி., குடியுரிமை: நியூசிலாந்து சிவசாமி சிவமகேசன் அல்லது சிவா, பிறந்த இடம்: வி.கி. குடியுரிமை: நோர்வே மாவடி, பொலிகண்டி, வல்வெட்டிதுறை, தியாகராஜா உமைபாலன் அல்லது உமா, பிறந்த இடம்: வி.கி., குடியுரிமை: நோர்வே சிவன் கோவில் வீதி, வட்டுக் கோட்டை வீதி கிழக்கு, வட்டுக் கோட்டை, ராஜகோபால் ஸ்ரீஸ்கந்தராஜா அல்லது சின்னவன் பிறந்த இடம் : வி.கி., குடியுரிமை: நோர்வே கொக்குவில் மேற்கு, கொக்குவில், வேலுப்பிள்ளை இராசரத்னம் பிறந்த இடம் : வி.கி., குடியுரிமை: நோர்வே கண்ணகி அம்மன் கோவில் வீதி, வட்டுக்கோட்டை, மேரி பிரிஜிதா வசந்தி பிரான்சிஸ் அல் லது வசந்தி, பிறந்த இடம் : வி.கி, குடியு ரிமை: நோர்வே ஆனந்தபுரம், கிளி நொச்சி, ஆசைப்பிள்ளை பிரான்சிஸ் சேவியர் பிறந்த இடம்: வி.கி, குடியு ரிமை: நோர்வே பாரதிபுரம், கிளிநொச்சி, கருணாசாமி ஸ்டீபன் புஸ்பராஜா, பிறந்த இடம்: வி.கி, குடியுரிமை: நோர்வே சுழிபுரம் மேற்கு, சுழிபுரம், தர்மலிங்கம் கோணேஸ்வரன் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: நோர்வே 126/27, நல்லூர் வீதி, அரியாலை, பெஞ்ஜமின் ராஜா பிலிப் பிறந்த இடம் : வி.கி,குடியுரிமை: நோர்வே கரவெட்டி மேற்கு, கரவெட்டி, சிவராஜா விஜயரூபன் அல்லது ரூபன் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: 1ஆம் பிரிவு, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, ஜோன்பிள்ளை ஜோர்ஜ் அல்லது ஜோன்சன் பிறந்த இடம்: வி.கி, குடியுரிமை: நோர்வே 5 ஆம் பிரிவு, இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு,

சிவராசா சுரேஷ் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: நோர்வே இல. 19, வைபர்ட் வீதி, அரியாலை, லியோ எட்மர்ன் கிலாரி அல்லது ரமணன் பிறந்த இடம்: வி.கி, குடியுரிமை: நோர்வே இல. 54, இராசலிங்கம் யாழ்ப்பாணம், சிவபாலசிங்கம் சிவதாஸ் அல்லது சோதியா, பிறந்த இடம்: வி.கி, குடியுரிமை: நோர்வே இல. 29, புங்கன்குளம் வீதி, கொழும்புதுறை, யாழ்ப்பாணம் புவனின்மாஸ்டர் என அறியப்படுகின்ற வீரசிங்கம் நாகேஸ்வரன் பிறந்த இடம்: வி.கி, குடியுரிமை: இலங்கையில் வசிக்கிறார், இல. 473, குப்பிலான், ஏழாலை, சுன்னாகம், யாழ்ப்பாணம் சின்னப்பா மாஸ்டர் என அறியப்படும் ராமன் சின்னபபா, பிறந்த இடம்: வி.கி, குடியுரிமை:

இலங்கையில் வசிக்கிறார். மோடைகடை, நானாத்தான் மன்னார். சோதிநாதன் புனிதவதி, பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: சுவீடன் பாலவிநாயகர் வீதி, தவசிக்குளம், கனகசபை பாலச்சந்திரன் பிறந்த இடம்: வி.கி, குடியுரிமை: சுவீடன் இல. 49/6, சுபத்ராராம வீதி, டி சில்வா மாவத்தை, கொழும்பு 06, ரவி செல்லத்துரை, பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: சுவீடன் குரும்பசிட்டி, தெல்லிப்பளை, ஆனந்தராஜ் கனகசபை, பதவி பெயர்: வி.கி. பிறந்த இடம்: வி.கி, குடியுரிமை: சுவீடன் நடராசா கருணாகரன் அல்லது கரண் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: சுவீடன். செல்லையா ஜெயபாலன் அல்லது அப்துல்லா அல்லது செல்லையா போலன் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: சுவீடன் ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம் செல்லையா குலசேகரராஜசிங்கம் அல்லது குலம் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: சுவீடன். பிரான்சிஸ் அல்பேர்ட் இல்மான் அல்லது அல்பேர்ட் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: சுவீடன். காசிலிங்கம் ராமகிருஷ்ணன் அல்லது மாம்பழம் பிறந்தஇடம்: வி.கி, குடியுரிமை: சுவிஸ்லாந்து. ரத்னவேல் சசிதரன் அல்லது சசி, பிறந்த இடம்: வி.கி, குடியுரிமை: சுவிட்சர்லாந்து. சோமசுந்தரம் ராமலிங்கம் பிறந்த இடம்: வி.கி, குடியுரிமை: சுவிஸர்லாந்து சுப்ரமணியம் சண்முகதாசன் பிறந்த இடம்: வி.கி, குடியுரிமை: சுவிஸ்லாந்து. விஜயரட்ணம் சிவநேசன் அல்லது ரகுபதி அல்லது சிவன் பிறந்த இடம்: வி.கி, குடியுரிமை: சுவிஸலாந்து. கிரிஸ்டி லோரன்ஸ் ரெஜினோல்ட் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: தாய்லாந்து. காசிப்பிள்ளை கணேசமூர்த்தி அல்லது பியூடி கணேஷ் அல்லது முருகையா சிவலிங்கம் அல்லது சுப்பிரமணியம் வேணுகோபால் பிறந்த இடம்: வி.கி, குடியுரிமை: தாய்லாந்து. மார்கண்டு தயாகரன் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: தாய்லாந்து. ஆற்று வெளி வடக்கு, யாழ்ப்பாணம், பஞ்சலிங் கம விஜயகுமார் அல்லது கப்டன் ஜெகன் பிறந்த இடம்: வி.கி, குடியுர்ரிமை: தாய்லாந்து. கந்தையா நகுலதாஸ் பிறந்த இடம்: வி.கி, குடியுரிமை: ஜக்கிய இராச்சியம். உடுப்பிட்டி கிழக்கு, தெல்லிப்பளை. சின்னராஜா வசந்தராஜன் அல்லது வசந்தன் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: ஜக்கிய இராச்சியம் கோப்பாய் தெற்கு, கோப்பாய், யாழ்ப்பாணம், கனகரத்தினம் கணேஸ்வரம் அல்லது பாகி, பிறந்த இடம்: வி.கி, குடியுரிமை: ஜக்கிய இராச்சியம் 2 ஆம் பிரிவு, புங்குடுதீவு, கிரிசோரம் லின்டன் ஜுட் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: கரம்பன் தெற்கு, காரைநகர் பூபால சுந்தரம்பிள்ளை குசிகன் பிறந்த இடம்: வி.கி, குடியுரிமை: ஜக்கியஇராச்சியம் வேலணை மேற்கு, வேலணை, கிருஷாந்தகுமார் அருணாசலம் அல்லது சாந்தன் பிறந்த இடம்: வி.கி, குடியுரிமை: ஜக்கிய இராச்சியம். கிருஸ்ணசாமி மனோகரன் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: கொக்குவில் வீதி, தொண்டமானாறு. தம்பாபிள்ளை பரமாத்மா, பிறந்த இடம்: வி.கி, குடியுரிமை: ஜக்கியஇராச்சியம் நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி, பாலசிங்கம் விஜயகுமார் பிறந்த இடம்: வி.கி, குடியுரிமை: ஜக்கியஇராச்சியம். மயூரன் வீதி, மல்லாகம், யாழ்ப்பாணம், துரைசாமி தயாசீலன் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: ஜக்கியஇராச்சியம் 'கருணாநிதி' நூலக வீதி, வல்வெட்டித்துறை, விஜயபாலன் விஜயகாந்தன் பிறந்த இடம்: வி.கி குடியுரிமை: ஜக்கிய இராச்சியம். உயரம்பலம், ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம், துரைராஜா அந்தோனி புஸ்பராஜா, பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: ஜக்கியஇராச்சியம் இல. 15/ 7, பேகரி வீதி, திருகோணமலை, சின்னத்துரை சிவகுமார் பிறந்த இடம்: வி.கி, குடியுரிமை: ஜக்கிய இராச்சியம். கேணியடி, குப்பிளான், யாழ்ப்பாணம், நல்லையா கௌரிதாஸ் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: ஜக்கிய இராச்சியம். இல. 19, கனகரத்தினம் வீதி, அரியர்லை, யாழ்ப்பாணம், நாகரத்தினம் நாககசுகந்தன் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: ஜக்கியஇராச்சியம். காங்கேசன்துறை வீதி, சுன்னாகம், சண்முகசுந்தரம் கல்யாணி, பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: ஜக்கியஇராச்சியம். இன்பருட்டி, பருத்திதுறை, கணபதிப்பிள்ளை யோகேந்திரன் அல்லது கெண்டி, பிறந்த இடம்: வி.கி, குடியுரிமை: ஜக்கியஇராச்சியம். கச்சேரி வீதி, சாவகச்சேரி, ராமசண்முகம் சிவதாசன் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: ஜக்கியஇராச்சியம். நாவற்குழி கிழக்கு, கைதடி, ஐஸ்வர்யரஜித்ஸ்ரீஸ்கந்தராஜா அல்லது சியோன பிறந்த இடம்: வி.கி, குடியுரிமை: ஜக்கிய இராச்சியம் வரதாப்பளை, பருத்தித்துறை, ஜெயசீலன் செல்வராசா அல்லது கண்ணன் பிறந்த இடம் : குடியுரிமை: ஜக்கியஇராச்சியம். துண்ணாலை தெற்கு, கரவெட்டி, அஜித் செல்வராஜா அல்லது பம்பு அல்லது வஜிரா அல்லது வலெரா, பிறந்த இடம் :- வி.கி. குடியுரிமை :- ஜக்கியஇராச்சியம். ஜெகதீசன் ஜெகன்மோகன் அல்லது ஜெகன் பிறந்த இடம்:- வி.கி குடியுரிமை :- ஜக்கிய இராச்சியம் 49/ 3, வெடிகந்த வீதி, ரத்மலானை நடேசன் சத்யேந்திரா, பிறந்த இடம்: வி.கி குடியுரிமை :- தாமோதரம்பிள்ளை சுதர்சன் அல்லது சுதன் பிறநத இடம்: வி.கி, குடியுரிமை: ஜக்கிய இராச்சியம். வற்றாப்பளை, முள்ளியவளை, முல்லைத்தீவு, ரவி, ரூட் ரவி, ரவீந்திரன் என அறியப்படுகின்ற விசாகப்பெருமாள் ரவீந்திரம் பதவி பெயர் : வி.கி. குடியுரிமை: ஜக்கிய இராச்சியத்தில் வசிக்கிறார், கல்வியன்காடு, நல்லூர் , யாழ்ப்பாணம் , விலாசம் (வெளிநாடு).

ஜெயாநந்தமூர்த்தி சேனாதிராஜா, பிறந்தஇடம்: வி.கி, குடியுரிமை: ஐக்கிய் இராச்சியத்தில் வசிக்கிறார், ரத்தினம் வாழைச்சேனை, மட்டக்களப்பு, 2. நாராஹேன்பிட்டி. எலியஸ் ஜோசப் ஜெயராஜா, பிறந்த இடம்: வி.கி, குடியுரிமை: அமெரிக்காவில் வசிக்கிறார், ரலைக், வடக்கு கரோலினா. பிறந்த இடம்: வி.கி குடியுரிமை: வி.கி. குடியுரிமை: சிறுவில் வல்வெட்டித்துறை, கந்தசாமி கமல்ராஜ், வி.கி. பதவி: பிறந்த இடம்: வி.கி குடியுரிமை: வி.கி. பேவரமீடன்.

கருணா குலரத்னம், பதவி பெயர்: வி.கி. பதவி: பிறந்தஇடம்: வி.கி குடியுரிமை: வி.கி விலாசம் (இலங்கை):- பண்டாரிக்குளம், வவுனியா. துரைசாமி செல்வகுமார் பதவி பெயர்: பிறந்த இடம்: குறிப்பிடப்படவில்லை, குடியுரிமை:- வி.கி விலாசம் நாராயனவத்த, கடபொல, ராமச்சந்திரன் ஆப்ரஹாம் பிறந்தஇடம் : வி.கி குடியுரிமை: வி.கி விலாசம் இல 393/17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், விலாசம் (வெளிநாடு). சண்முகசுந்தரம் கந்தஸ்கரன் , வி.கி. பிறந்தஇடம் :- வி.கி குடியுரிமை:- வி.கி விலாசம் (இலங்கை):- இல 157/ 6 ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு - 13, விலாசம் (வெளிநாடு).

ரவிசங்கர் கனகராஜா வி.கி. பிறந்த இடம்:- வி.கி குடியுரிமை:- வி.கி விலாசம் (இலங்கை):- ஊரிக்காடு, வல்வெட்டிததுறை, விலாசம் (வெளிநாடு):- வி.கி கிஸ்ணப்பிள்ளை சிவஞானம், வி.கி. பிறந்த இடம்:- வி.கி குடியுரிமை:- குறிப்பிடப்படவில்லை, மாணிக்கம் அருணகிரிநாதன் வி.கி. பதவி: வி.கி., குறிப்பிடப்படவில்லை, பிறந்த இடம்: வி.கி குடியுரிமை: 09 ஆம் ஒழுங்கை, புதுக்குடியிருப்பு. சிவராசா பிருந்தாபன் வி.கி குடியுரிமை:- வி.கி விலாசம் (இலங்கை):- நிக்லபிள்ளை அன்டனி எமில் லக்ஸமிகா வி.கி., குறிப்பிடப்பட வில்லை, வி.கி விலாசம் (இலங்கை):- மரகவடி வீதி, வேப்பங்குளம், வவுனியா. பெயர் குறிப்பிடப்படவில்லை, விலாசம் (இலங்கை):- அளவெட்டி வடக்கு, யாழ்ப்பாணம், ஜயரத்னம் ஜெயசந்திரன், பிறந்த இடம்:- வி.கி குடியுரிமை : வி.கி விலாசம் (இலங்கை):- 1 வி. சி. ஒழுங்கை கொல்லன்குளம், யாழ்ப்பாணம், சுபேஸ் சட்குணராஜா பிறந்த இடம்:- வி.கி குடியுரிமை:- 1 வி. சி. ஒழுங்கை கொல்லன்குளம், யாழ்ப்பாணம், 'செல்லையா ராமசந்திரன் அல்லது மதியரசன், பதவி: வி.கி., , யாழ்ப்பாணம், இஸ்காஜன், நெதர்லாந்து, பொன்னையா ஆனந்தராஜா, வி.கி., பிறந்த இடம்:- சங்கானை, யாழ்ப்பாணம், பேங்கொக், தாய்லாந்து,

குணரத்ன பந்துல கஜவ்ர, அக்கரைப்பற்று, அம்பாறை, :- அன்னலிங்கம் காண்டீபன், பிறந்த இடம்:- வி.கி குடியுரிமை :- இன்பருட்டி பருத்தித்துறை.

தணிகாசலம் ஸ்ரீ சங்கர், பதவி பெயர்: வி.கி. பிறந்த இடம் :- வி.கி குடியுரிமை:- இல 14/ ஏ. கண்ணமுனகேசர் வீதி, புலோலி தெற்கு, மந்திகை, விலாசம்

சுப்ரமணியம் விவேகானந்தன் , வி.கி., பிறந்த இடம் : வி.கி குடியுரிமை:- இல 260.'. 01 காலி வீதி, ரத்மலானை,

(தொடரும்...)

# தண்ணிமுறிப்பில் காணி பகிர்ந்தளிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவு, தண்ணி முறிப்பு கிராம சேவகர் பகுதிக்குட்பட்ட பெருமுறிப்பு சவாரத்துவெளி, காதர் மீரான்குளம், தண்ணிமுறிப்பு குடியேற்றக் காணிகளை மீண்டும் பாரம்பரிய தமிழ், முஸ்லிம் உரிமையாளர்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு நீதியமைச்சரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தண்ணிமுறிப்பு பெருநீர்ப்பாய்ச்சல் குளத்தின் கீழ் இருந்த விவசாயிகள் 12 மைல்களுக்கு அப்பால் அமைந்துள்ள முளளியவளை, தண்ணீர ஊற்று, முல்லைத்தீவு, அலம்பில், செம்மலை ஆகிய இடங்களில் வசித்து வந்ததால் அப்போதைய அரசு இந்த வறிய விவசாயிகளின் போக்குவரத்துச் சிரமங்களை கருத்தில் கொண்டு அவர்கள் குடியிருப்பதற்காக ஓர் ஏக்கர் வீதம் குடிநிலக் காணிகளை 1974 ஆம் ஆண்டு வழங்கியிருந்தது.

இது தண்ணிமுறிப்பு குளத்துடன், பெருமுறிப்பு சவாரத்து வெளி, கலிங்குவெட்டை, காதர் மீரான்குளம் ஆகிய விவசாய நிலங்களைக் கொண்ட விவசாயிகளுக்கான தண்ணிமுறிப்பு குடியேற்றம் ஆகும்.

- பின் சில காரணங்களால் சுமார் 33 வருடங்களின் பின்னர் இத் தண்ணி முறிப்பு மீள்குடியேற்ற கிராமம் முற்றாகக் கைவிடப்பட்டிருந்த நிலையில் பற்றைக் காடுகளாக மாறியிருந்தது.

இந்த விடயத்தை முல்லைத்தீவு மாவட்ட வடமாகாண சபை முஸ்லிம் காஙகிரஸ் வேட்பாளர் ரஹீம்நீதியமைச்சரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீமின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து, பாரம்பரிய காணி உரிமையாளர்களுக்கு அக் காணிகளை துப்புரவு செய்து அங்கு வீடுகளை அமைத்து, குடியேறுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முல்லைத்தீவு மாவட்ட செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

இதனை அமைச்சர் ஹக்கீம், வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன், வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி, வட மாகாண காணி ஆணையாளர் ஆகியோருக்கும் தெரியப்படுத்தியுள்ளார்.

## நாடாளுமன்றத்தில் நடந்தது என்ன அடுத்த மாதம் முதல் நேரடி அஞ்சல்

(கொழும்பு)

நாடாளுமன்ற அமர்வுகள், அடுத்த மே மாதம் முதல் நேரடி ஒளிபரப்புச் செய்யப்படும் என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை அறிவித்தார்.

வரவு - செலவுத் திட்டத்தின் இறுதி விவாதங்கள் தொலைக்காட்சிகளில் நேரடி ஒளிபரப்புச் செய்யப்பட்டன. இந்த விவாதத்தின் போதான நாடாளுமன்ற உறுப்பினர்களின் மரியாதையற்ற வார்த்தைப் பிரயோகங்கள் மற்றும் நடத்தைகள் காரணமாக நேரடி ஒளிபரப்புக்கு தடைவிதிக்கப்பட்டது.

இருப்பினும், தற்போது இவ்வாறான தவறான வார்த்தைப் பிரயோகங்கள் மற்றும் தவறான நடத்தைகள் இடம்பெறுமாயின் சபாநாயகர், தனது மேசையிலுள்ள பொத்தானை அழுத்தினால் அந்த நடத்தையின் நேரடி ஒளிபரப்பு தணிக்கை செய்யப்படும்.

என்னிடம் விசேட பொத்தான் உள்ளது. 'எவரேனும் தேவையற்றதைப் பேசினால் நான் அந்த பொத்தானை அழுத்தி ஒளிபரப்பில் தணிக்கை ஏற்படுத்துவேன் என்று சபாநாயகர் தெரிவிதத்துள்ளார்.

# முடிவு இன்றி தொடர்கிறது மலேசிய விமான மர்மம்

## ரஷ்யாவின் உளவுத்துறை வெளியிடுகிறது புதுக்கதை




மாயமான மலேசிய விமானம் ஆப்கானுக்கு கடத்தப்பட்டுள்ளது, பயணிகள் அனைவரும் உயிருடன் உள்ளனர் என ரஷ்ய உளவுத்துறை அதிர்ச்சிகரமாக தகவலை வெளியிட்டுள்ளது.

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் இருந்து சீன தலைநகர் பீஜிங் சென்ற மலேசியன் ஏர்லைன்ஸ் விமானம் கடந்த மாதம் 7ஆம் திகதி நள்ளிரவு திடீரென காணாமல் போனது, அதில் 12 ஊழியர்கள் உட்பட 239 பயணிகள் இருந்தனர்.

தெற்கு சீன கடலுக்கு மேலே பறந்து கொண்டிருந்த போது விமானம் மாயமானது தெரிய வந்தது. விசாரணையில், விமானத்தின் தகவல் தொடர்பு சாதனங்கள் திட்டமிட்டு அணைக்கப்பட்டதும், விமானம் திசை மாறி சென்றதும் தெரிய வந்தது.

விமானம் மாயமானதில் ஏதோ மர்மம் இருக்கிறது. விமானத்தை பற்றிய முழு விவரங்களையும் வெளியிட வேண்டும் என்று சீன அரசும், விமானத்தில் சென்ற 156 சீன பயணிகளின் உறவினர் களும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

எனினும் கடலில் மிதந்த பாகங்கள் மலேசிய விமானத்தினுடையது என்பது உறுதி செய்யப்படவில்லை. இதற்கிடையில், கடலுக்கு அடியில் இருந்து விமானத்தின் கறுப்பு பெட்டியில் இருந்து சிக்னல் வந்ததாக சீன அரசு தெரிவித்தது.


இதுகுறித்து ரஷ்ய உளவுத்துறையினர் வெளியிட்டுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது, மலேசிய விமானம் தீவிரவாதிகளால் திசை திருப்பப்பட்டு ஆபகானிஸ்தானுக்கு கடத்தி செல்லப்பட்டுள்ளது. பாகிஸ்தான் எல்லையோரம் ஆப்கானிஸ்தான் பகுதியில் மலை பகுதிகள் நிறைந்த இடத்தில் விமானம் தரையிறக்கப்பட்டுள்ளது.

அங்கு விமானத்தின் பாகங்கள் தனித்தனியாக பிரிக்கப்பட்டுள்ளன. பயணிகள் அனைவரையும் 7 குழுக்களாக பிரித்து வேறு வேறு இடங்களில் அடைத்து வைத்துள்ளனர். மண் குடிசைகளில் எந்த தொலைதொடர்பு வசதியும் இல்லாத இடத்தில் பயணிகளை தீவிரவாதிகள் அடைத்து வைத்துள்ளனர். அவர்கள் உணவு, தண்ணீர் இல்லாமல் தவித்து வருகின்றனர்.

மேலும் விமானத்தில் சென்றவர்களில் ஆசிய நாடுகளை சேர்ந்த பல்துறை நிபுணர்கள் 20 பேரை பாகிஸ்தான் எல்லையில் உள்ள பதுங்குகுழிகளில் தீவிரவாதிகள் பிணைக் கைதிகளாக அடைத்துள்ளனர்.

இவ்வாறு ரஷ்ய உளவுத்துறையினர் தெரிவித்துள்ளதாக டெய்லி ஸ்டார் என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

# இந்தியாவின் அக்னி–ஐ பரிசோதனை வெற்றி




இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அக்னி - ஐ ஏவுகணை வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டுள்ளது.

ஒரிஸா மாநிலம் பாலாசூர் அருகே வீலர் தீவில் இருந்து நேற்று முன்தினம் இரவு இந்தச் சோதனையை இந்திய இராணுவம் மேற்கொண்டது. முதன்முறையாக இரவில் மேற்கொண்ட ஏவுகணை பரிசோதனை இதுவாகும்.

தரையில் இருந்து பாய்ந்து சென்று தரையில் 700 கி.மீ. தொலைவு வரை உள்ள எதிரிகளின் இலக்கைத் தாக்கும் அணு ஆயுத வல்லமை கொண்ட அக்னி - ஐ ஏவுகணை, நேற்றுமுன்தினம் இரவு 11.10 மணியளவில், வாகனம் ஒன்றில் இருந்து ஏவப்பட்டது.

இந்தச் சோதனை அனைத்து வழிவகைகளிலும் வெற்றிகரமாக இலக்கை எட்டியதாக பாதுகாப்பு ஆய்வு மற்றும் வளர்ச்சி அமைப்பின் செய்தித் தொடர்பாளர் ரவிகுமார் குப்தா தெரிவித்துள்ளார்.

எந்தவித பாதுகாப்பு அச்சுறுத்தலையும் சமாளிக்கும் வகையில் இராணுவம் தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்யும் வகையில், இரவு நேரத்தில் இந்தச் சோதனை முதன்முறையாக நடத்தப் பட்டுள்ளது.


இந்தச் சோதனையை, இந்திய இரா்ணுவத்தில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சிறப்பு உத்திசார் அதிரடிப்படையினர், பயன்பாட்டு நோக்கில் நடத்தியதாக வீலர் தீவில் உள்ள ஒருங்கிணைந்த சோதனைத் திட்டத்தின் இயக்குநர் எம்.வி.கே.வி. பிரசாத் தெரிவித்தார்.

# அனைத்து விசாரணைக்கும் தயார் காங்கிரஸ்க்கு மோடி பதிலடி

(புதுடில்லி)


என் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க, மத்தியில் ஆட்சியில் உள்ள காங்கிரஸ் அனைத்து புலனாய்வு அமைப்புகளையும் பயன்படுத்தாலாம் என, பா.ஜ., பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நரேந்திர மோடி, தேர்தல் பிரசாரங்களுக்காக, 10 ஆயிரம் கோடி ரூபாய் செலவழித்துள்ளதாக, காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது. இந்த பணம் கணக்கில் காட்டப்படாத கருப்புப் பணம் என்றும். அவரின் புகழை பறப்ப, ஏராளமான தொகை சட்ட விரோதமான முறையில் செலவழிக்கப்பட்டுள்ளதாகவும் காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது. இந்த குற்றச்சாட்டை மறுத்துள்ள மோடி, காங்கிரசுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் பதிலளித்துள்ளார்.



இதுகுறித்து மோடி கூறியதாவது,நான், தேர்தல் பிரசாரங்களுக்காக, 10 ஆயிரம் கோடி ரூபாய் செலவழித்துள்ளதாக, காங்கிரஸ் குற்றம் சாட்டியுளளது. இன்னும், 30 முதல் 40 நாட்கள் மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சியே நீடிக்கப் போகிறது. மத்தியில் ஆட்சியில் உள்ள காங்கிரஸ் தனக்குள்ள அனைத்து அதிகாரங்களையும் பயன்படுத்தி, இராணுவம், பொலிஸ், உளவுத்துறை ஆகிய அனைத்து தரப்பின் மூலமும், என்னிடம் விசர்ரணை நடத்தட்டும். நான் செலவழித்ததாக கூறப்படும் பணம் எங்கிருந்து வந்தது, எப்படி செலவழிக்கப்பட்டது என, அவர்கள் கண்டுபிடிக்கட்டும். இதுகுறித்த் முழு விசாரணைக்கும் ஒத்துழைப்பு தர நான் தயார். வீண் குற்றச்சாட்டுகளை எழுப்புவதே காங்கிரசின் வழக்கமான [illegible]லாக மாறிவிட்டது.இவ்வாறு மோடி கூறினார்.

# தீவிரவாதிகளிடையே சண்டை பாகிஸ்தானில் 19 பேர் பலி




பாகிஸ்தானில் ஏராளமான தீவிரவாதக் குழுக்கள் உள்ளன. பாகிஸ்தான் தெக்ரிக்-இ-தலிபான் என்ற தலிபான் தீவிரவாதிகள் அதிக அளவில் உள்ளனர். இவர்கள் பல்வேறு குழுக்களாக உள்ளனர். அனைவரும் வடக்கு வசிரிஸ்தான் மலைப் பகுதியில் தங்கள் ஆதிக்கத்தை நிலநாட்டியுள்ளனர்.அவர்களுக்குள் அதிகார பகிர்வு போட்டி அவ்வப்போது நடைபெறும். இந்த நிலையில் சமீப காலமாக கொல்லப்பட்ட ஹக்கிமுல்லா மசூத் பிரிவைச் சேர்ந்த சாஜ்னா மற்றும் கொமாண்டர் கான் தலைமையிலான பிரிவுகளுக்கு இடையே கடும சண்டை நடந்து வருகிறது.

டெக்சில் தத்தா கெய்ல் பகுதியில் ஹக்கானி பிரிவைச்சேர்ந்த தலிபான் தீவிரவாதிகளின் வாகனம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் கொமாண்டர் உட்பட 3 பேர் கொல்லப்பட்டனர். 2 பேர் காயம் அடைந்தனர். ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள 'வால் பகுதியில் சாஜ்னா தலைமையிலான தலிபான் தீவிரவாதிகளின் வாகனம் மீது ரொக்கெட் வீசப்பட்டது. அதில் 10 பேர் பலியாகினர். மற்றொரு குண்டு வெடிப்பு தாக்குதலில் வாகனம் வெடித்து சிதறியது. அதில் 6 பேர் பலியாகினர். இந்தத் தாக்குதல்கள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன.

உலகச் செய்திகள்

# 10 இலட்சம் பேருக்கு புற்றுநோய் பாதிப்பு

(மும்பை)



இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 10 இலட்சம் பேர் புற்றுநோயால் பாதிக்கப்படுவது சமீபத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் 6 முதல் 7 சதவீதம் பேர் புற்றுநோயால் உயிரிழந்து வருகின்றனர். 2035ஆம் ஆண்டில் புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்களின் எண் ணிக்கை 17 இலட்சமாகவும், உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை 10 சதவீதமாக உயரும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

# பெண்களைப்பற்றி பேசும் மோடி மனைவியை மறந்துவிட்டார்

## ராகுல் குற்றச்சாட்டு



(தோடா)

வேட்புமனுவில் மனைவியின் பெயரை குறிப்பிடாதவர் பெண்களின் பெருமை குறித்து பேசுகின்றார் என்று மோடி மீது ராகுல் காந்தி குற்றம்சாட்டியுள்ளார். ஜம்மு-காஷ்மீர் மாநிலம் தோடா பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ராகுல் காந்தி பேசியதாவது, நரேந்திர மோடி தேர்தலில் வேட்புமனு செய்யும்போது மனைவியின் பெயரைக் குறிப்பிடவில்லை. இதுவரை எத்தனை தேர்தல்களில் போட்டியிட்டார் என்று தெரியவில்லை. பெண்களின் பெருமை பற்றி பேசுபவர், தனது மனைவியின் பெயரை வேட்புமனுவில் குறிப்பிட மறந்துவிட்டார்.

ஆனால், இப்போது வதோதரா தொகுதி வேட்புமனுவில்தான், மனைவியின் பெயரை 'ஜசோதாபென்' என்று கூறியுள்ளார். 2012 சட்டமன்ற தேர்தல் முதல், கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தலில் வேட்புமனு செய்தபோது, திருமணம் ஆனவரா என்ற கட்டத்தை வெறுமையாக விட்டுள்ளார். கர்நாடக அமைச்சர்கள் சட்டமன்றத்தில் செல்போனில் வீடியோ படம் பார்த்துள்ளனர். அது என்ன படம் என்பதை செய்தித்தாள்களில் நீங்கள் பார்த்து இருப்பீர்கள். பா.ஜ ஆட்சி செய்யும் சட்டீஸ்கருக்கு நான் சென்றபோது, அங்கு 20,000 பெண்களை காணவில்லை என்று என்னிடம் கூறினார்கள்.

இதுபோன்ற செயல்கள், பா.ஜ கட்சியின் உண்மையான முகத்தை வெளி உலகிற்கு காட்டியுள்ளது என்றும் ராகுல் குற்றஞ்சாட்டினார்.



தேர்தல் ஆணைக்குழு ஏற்பாட்டில் சென்னை அண்ணாநகர் டவர் பூங்காவில், விழிப்புணர்வு ஸ்டிக்கர்களை நடிகர் ஜெயம் ரவி வாகனங்களில் ஒட்டினார். இதில் தேர்தல் அதிகாரி அருண் சுந்தர் தயாளன், மண்டல அதிகாரி இளங் கோவன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# 510 பல்கலை மாணவர்களுக்கு 'மகாபொல' புலமைப் பரிசில்கள்



கடந்த 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற 510 க்கு மாணவர்களுக்கான மகா பொல புலமைப்பரிசில்கள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுக்காலை 9மணியளவில் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இப்புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கான மகாபொல புலமைப் பரிசில்களை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில், மகாபொல புலமைப்பரிசில் திட்டத்தை ஆரம்பித்து வைத்த மறைந்த சிரேஷ்ட அமைச்சர் லலித் அத்துலத்முதலிக்கு அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது யாழ். பல்கலைக்கழகதுணைவேந்தர் பேராசிரியர் வசந்திஅரசரட்ணம், யாழ். மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா யாழ் மாவட்டமேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம், மற்றும் பிரதேச செயலாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (பா)

# புதிய கட்சி யாழில் உதயம்

(யாழ்ப்பாணம்)

முற்போக்கு தமிழ்த்தேசியக்கட்சி என்ற பெயரில் புதிய அரசியல் கட்சி ஒன்று நேற்று யாழ்ப்பாணத்தில் உதயமாகியுள்ளது.

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் முன்னாள் பிரதி அதிபரும் ஆசிரியருமான உதயகுமாரைத் தலைவராகவும் முன்னாள் யாழ். மாநகரசபை உறுப்பினர் எஸ்.விஜயகாந்தை செயலாளராகவும் கொண்ட இந்தப்புதிய கட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வும் ஊடகவியலாளர் சந்திப்பும் கடற்கரை வீதியில் அமைந்துள்ள சுவேந்தா விடுதியில் நேற்று நண்பகல் நடைபெற்றது.

இளைஞர்களினது பிரச்சினைகள் மற்றும் தொழிலாளர்களது பிரச்சினைகளைத்தீர்த்து வைக்கும் முகமாகவே இந்தப் புதிய கட்சி உதயமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இந்தக் கட்சியின் பொது மாநாடு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் கட்சியின் பதிவினை அடுத்து வடக்கில் நடைபெறவுள்ள தேர்தல்களில் போட்டியிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (பா)

# அநாகரிக வார்த்தைப் பிரயோகம்; காவலாளி மீது விசாரணை

(முழங்காவில்)

பிரதேசசபையொன்றின் விடுமுறைநாள் பகல் காவலாளி ஒருவர் சபைக்கு முன்பாக இருந்த கமநலச்சேவை நிலையத்தில் உள்ள இடத்தில் ஆங்கில பாடத்தை போதித்துக்கொண்டிருந்த ஆசிரியை மீது அநாகரிக வார்த்தைப்பிரயோகம் செய்து அவமானப்படுத்தியதாக சம்பந்தப்பட்ட ஆசிரியை பூநகரி பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

பூநகரிப் பிரதேச சபையின் காவலாளி ஒருவரே தனது கடமை நேரத்தில் மதுப்போத்தலுடன் முன்பாக உள்ள கட்டடத்தில் இருந்து இச்செய்கையில் ஈடுபட்டுள்ளார்.

இதுசம்பந்தமாக பூநகரிப் பொலிசார் குறித்த நபரை அழைத்து விசாரணைகளை மேற்கொண்டதோடு பிரதேசசபை நிர்வாகத்தோடும் தொடர்புகளை மேற்கொண்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் ஆங்கிலம் கற்கும் மாணவர்களின் பெற்றோர் விசனம தெரிவித்துள்ளனர். (112)

## கூட்டறிக்கையின்...

மனிதாபிமான சட்டங்களை மீறிய சம்பவங்கள் தொடர்பில் பதிலளிக்கும் பொறுப்புக் கூறும் ஒரு செயற்பாட்டின் முக்கியத்துவம் குறித்து ஐ.நா. செயலாளர் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இலங்கையில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும், பொறுப்புக் கூறலையும் நீடித்த சமாதானத்தையும் ஊக்குவிக்க மனித உரிமை ஆணையாளர் மேற்கொண்டுள்ள உறுதியான நடவடிக்கையை வரவேற்கின்றோம்.

இலங்கையில் நீடித்த அரசியல் தீர்வு, பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்க செயற்பாடுகளில் ஈடுபட ஐ.நா. இலங்கைக்கு ஆதரவு வழங்கும் எனவும் ஐ.நா பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கோபி...

நீதவானுடைய உத்தரவுக்கமைய இந்தச் சடலங்கள் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்ட போதிலும், இறந்தவர்களை அவர்களின் உறவினர்கள் அடையாளம் காட்டுவதற்கும், இறுதிக்கிரியைகளில் அவர்கள் பங்குபற்றுவதற்கும், அவரவர் கலாசாரத்திற்கமைவாக கிரியைகளை மேற்கொள்வதற்கும் வசதிகள் செய்யப்பட்டிருந்ததாகவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

கோபி என்று படையினரால் குறிப்பிடப்படுகின்ற செல்வநாயகம் கஜீபனின் மாமனராகிய செகராசசிங்கம் பாலகுருபரன், கஜீபனின் சடலத்தைப் பார்வையிட்ட போதிலும், இறுதிக்கிரியைகளில் தான் கலந்து கொள்ளவில்லை என்றும், தனது மகளும், கஜீபனின் தாயாரும் கலந்து கொண்டார்களா இல்லையா என்பது பற்றிய தகவல் தனக்குக் கிடைக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

## வடக்கில்...

அமர்வுகளில் கேள்வி எழுப்பப்பட்டதாகவும், நெடுங்கேணிச் சம்பவம் இதற்கான பதிலை அளித்துள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேற்குலக நாடுகள் இராணுவ பிரசன்னத்தை குறைக்குமாறு கோரி வந்த போதிலும், இறைமையுடைய நாடு என்ற ரீதியில் இலங்கை அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என அவர் தெரிவித்தார்.

எனினும், அரசாங்கத்தின் இந்தத் தீர்மானம் நியாயமானது என்பதனை சர்வதேச சமூகத்திற்கு இந்தச் சம்பவம் உணர்த்தியிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனவும் அதனை அமுல்படுத்தப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளக பொறிமுறைமை ஒன்றின் மூலம் நிரந்தர நல்லிணக்கத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

## அமைதிச்....

கைகள் எனச் சகலவற்றையும் நாம் திட்டமிட்டு மேற்கொள்ள மக்களின் இயல்பு வாழ்க்கை என்பது அமைதிச் சூழலைப் பாதுகாப்பதன் மூலமே உருவாகும்ஆனால், மக்கள் விரோத அரசியலைச் செய்யும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் அவர்களோடு இணைந்த சில சக்திகளும் இந்த மண்ணிலே மீண்டும் அமைதியைக் குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதை நாம் அனுமதிக்க முடியாது. அப்படி அனுமதிப்போமாக இருந்தால் அதற்குக் கொடுக்க வேண்டிய விலையும் அதனால் படவேண்டிய அவலமும் மிகப் பயங்கரமானதாகவே இருக்கும்.

இது எமக்கு வரலாறு புகட்டுகின்ற பாடமாகும். மக்களின் அவல வாழ்வில் தமது அரசியல் ஆதாயங்களையும் சுகபோகங்களையும் அனுபவித்து வரும் இந்த மக்கள் விரோத சக்திகள் இளைய தலைமுறையை மீண்டும் ஓர் அழிவுப் பாதைக்குள் தள்ளிவிடவே முயற்சிக்கின்றன.

இதற்காக அவர்கள் சில புலம்பெயர் சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்து எமது மண்ணிலே நாம் உருவாக்கிய அமைதிச் சூழலைச் சீர்குலைக்க முயற்சித்து வருகிறார்கள்.இதனை சமூக அக்கறையுடையவர்களும், புத்திஜீவிகளும், பெற்றோரும், பொறுப்புவாய்ந்தவர்களும் விளங்கிக் கொள்ள வேண்டும்.வன்முறையின் மூலமாக இனிமேல் இலங்கையிலோ பிற இடங்களிலோ எத்தகைய தீர்வையும் நாம் எட்ட முடியாது என்பதே இன்றைய உலக யதார்த்தம்.

இலங்கையில் கூட வன்முறைப்போராட்டங்கள் நீண்டகாலமாக நடைபெற்றுள்ளன.

சிங்களச் சமூகத்திலும் தமிழ்ச் சமூகத்திலும் நடந்த போராட்டங்களை நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

ஆனால், அவை வெற்றியடையவில்லை. அந்தப் போராட்டங்களை பிராந்திய சக்திகளும் விரும்பவில்லை. சர்வதேச சக்திகளும் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தச் சூழலில்தான் அந்தப் போராட்டங்கள் தோல்வியைத் தழுவிக்கொண்டன.இந்த உலக யதார்த்தத்தைப் புரிந்து கொண்டே நாம் கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்னர் தீர்க்க தரிசனத்தோடு எமது அரசியற் பாதையைத் தெளிவாக வகுத்திருந்தோம்.

ஆனால், எம்மை எதிர்த்து, எமது பாதையைக் கொச்சைப்படுத்தி, எங்களின் மீது அவதூறுகளை வாரி இறைத்தவர்கள் இறுதியில் அடைந்த தோல்வி ஒரு வரலாற்றுப் பாடமாகும்.எமது வெற்றி என்பது உலக ஓட்டத்தைப் புரிந்து கொண்டு, எமது மக்களின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கும் வழிமுறையினால் ஏற்பட்டது.எனவேதான் நாங்கள் எமது மக்களை நெருக்கடிகளின் மத்தியிலே காப்பாற்ற முடிந்தது. யுத்தத்தின்போதும் யுத்தம் ஓய்ந்த பின்னரும் எமது மக்களைப் பாதுகாத்து அவர்களுடைய வாழ்க்கையை உயர்த்த முயன்றிருக்கிறோம். அதில் எமக்கு மிகப்பெரிய வெற்றியும் கிட்டியுள்ளது.

எமது பாதையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரும் பயணித்திருந்தால், அல்லது அவர்கள் சில இணக்கப்பாட்டுடன் செயற்பட்டிருந்தால் இன்று தமிழ் மக்களுடைய அரசியற் பிரச்சினையும் அபிவிருத்திச் செயற்பாடுகளும் கணிசமான அளவில் முன்னேற்றம் கண்டிருக்கும்.

ஆனால், இதை அவர்கள் செய்ய மறுக்கிறார்கள்.

அவர்களைப் பொறுத்தவரை மக்களின் அவலத்திலிருந்தே தமது அரசியல் அத்திவாரத்தை நிர்மாணித்திருப்பதால் அதை விடுத்து மக்களுக்கான சேவை, மக்களுக்கான அர்ப்பணிப்பு அரசியலுக்கு வரமுடியாமலிருக்கிறது.இதனால்தான் அவர்கள் நாடாளுமன்ற அரசியலிலும் பிரதேச சபைகள் மற்றும் மாகாணசபைகளின் செயற்பாடுகளிலும் படு தோல்வியான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.மிகப் பெரிய ஆதரவை மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் வழங்கியிருந்தாலும் மக்களுக்கான பணிகளைச் செய்வதற்கு அவர்களால் முடியவில்லை.

இந்தத் தோல்விகளை மூடி மறைக்கவும் மீண்டும் மக்களை ஒரு பயப் பீதியிலும் பதற்றத்திலும் வைத்திருக்கவுமே இவர்கள் விரும்புகிறார்கள்.

இதனை மக்களாகிய நீங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.எந்தப் பிரச்சினையும் நிரந்தரமாக எப்பொழுதும் இருப்பதில்லை. ஒரு காலம் சிங்களம் மட்டும் சட்டம் இருந்தது. பின்னர் அது இல்லாமற் போய்விட்டது.இன்னொரு காலம் சிங்களச் சிறி என்ற பிரச்சினை வந்தது. இப்பொழுது உள்ள இளைய தலைமுறையினரைக் கேட்டால் அப்படியொரு பிரச்சினை இருந்ததா? அது என்ன பிரச்சினை என்றுதான் கேட்பார்கள்.ஏனென்றால் ஒரு இரவில் அந்தச் சிறி என்ற அடையாளம் காணாமற் போய்விட்டது.

அதைப்போல ஒரு காலம் தரப்படுத்தலை தமிழர்களாகிய நாம் கடுமையாக எதிர்த்தோம். நான் கூட அன்று தரப்படுத்தலை எதிர்த்து போராட்டத்தில் குதித்தவனே. ஆனால், இன்று அதே தரப்படுத்தலை நாம் ஆதரிக்கிறோம். ஏன் என்றால் இன்று எமக்குத் தரப்படுத்தல் பெரும் பங்களிப்பைச் செய்கிறது. வசதியற்ற இடங்களில் உள்ள பல மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் படிப்பதற்கு இந்தத் தரப்படுத்தல் அளப்பரிய வாய்ப்பை அளித்துள்ளது.ஆகவே இந்த மாதிரி உடனடியாக எமக்குப் பிழையாகத் தெரிகின்ற விடயங்கள் காலப் போக்கில் நம்மை அறியாமலே காணாமல் போய் விடும். இதை நாங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இளைய தலைமுறையினராகிய நீங்கள் அமைதியைப் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பில் இருக்கின்றீர்கள். இந்த இளைய தலைமுறையை வளர்த்துப் பாதுகாக்க வேண்டிய கடப்பாட்டில் ,ருக:கும் பெரியோர்கள் நிலைமையை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்.மீண்டும் அழிவுப் பாதைக்கு மக்களையும் இளைய தலைமுறையையும் தூண்டும் மக்கள் விரோதச் சக்திகளை இனங்கண்டு தூர விலக்குங்கள்.நாங்கள் கல்வி, வீட்டு வசதி, போக்குவரத்து, தொடர்பாடல், சுகாதாரம், மருத்துவம், தொழில்துறைகள், மின்சாரம், நீர்வளம் போன்ற அனைத்துத் துறைகளிலும் செயற்பட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்திருக்கிறோம்.இது எமது மக்களுக்கு நாம் செய்துள்ள மிகப் பெரிய பணியாகும். இதன் மூலமாக மக்கள் பெரும் நன்மைகளைப் பெற்று, தங்களின் வாழ்க்கையை மிக மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் எமது அரசியலின் பெறுமதியையே மக்கள் அனுபவிக்கிறார்கள்.

ஆனால், மக்கள் விரோத அரசியலின் விளைவை அதற்கு ஆதரவளிப்போர் மட்டுமல்ல, அதைக் கண்டும் காணாமல் இருப்போரும் சந்திக்க வேண்டிவரும்.எனவே என் அன்புக்குரிய மாணவர்களே, அறிஞர்களே.. உங்களின் பொறுப்பிலிருந்து விலகி விடாதீர்கள். எதிர்காலத்தைப் பாதுகாத்து எமது மண்ணை வளப்படுத்தி மக்களின் வாழ்க்கையை உயர்த்த வேண்டிய பணி உங்களிடமே உள்ளது.

கல்வியிலே நாம் அடைந்து வருகின்ற முன்னேற்றத்தையும் நாம் உருவாக்கியிருக்கின்ற அபிவிருத்தியின் வளர்ச்சியையும் நீங்கள் பாதுகாத்து உங்கள் எதிர்காலத்தை வளப்படுத்திக் கொள்ள வேண்டும்.அமைதியினால் கிடைக்கின்ற அரிய பரிசாக இந்த வாய்ப்பை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள். ஏனென்றால், இது நாம் அனைவரும் ஒன்றாகக் கைகோர்த்து எமது எதிர்காலத்துக்காக உழைக்க வேண்டிய காலமாகும்.

## பொதுபல...

சிறுபான்மை மதக் குழுக்களுக்கு எதிராக சில பிக்குகள், பௌத்த தர்மத்திற்கு முரணாகச் செயற்படுவது கூடிய கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயமாகும்.

இவ்வாறான நபர்கள் மற்றும் குழுவினர் நடத்தை சம்பந்தமாக சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகளின் நடவடிக்கைகள் தொடர்பில் நாட்டின் கவனம் திரும்பியுள்ளது.

மேற்படி சம்பவம் நடைபெற்ற போது அது சாதாரணமான சம்பவமாக கருதி கொம்பனித் தெரு பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட பொலிஸார் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தமை ஆச்சரியமானது எனவும் அமைச்சர் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.-

# சர்வதேச விசாரணை நடந்தால் விளைவுகள் பாதகமாகலாம்

## எச்சரிக்கிறார் தயான் ஜயதிலக



(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் தீர்மானத்தின் அடிப்படையிலான விசாரணைகளுக்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்பது எனது நிலைப்பாடாக இல்லாத போதிலும், இலங்கைக்கெதிராக சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட்டால் அது இலங்கைக்கு பாதக விளைவுகளையே ஏற்படுத்துமென முன்னாள் ராஜதந்திரி தயான் ஜயதிலக எச்சரித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் இலங்கைக்கு எதிராக விசாரணை நடத்தப்பட்டால், சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தொடரப்படக் கூடிய அபாயம் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச விசாரணைகளுக்கு இலங்கை உரிய முறையில் ஒத்துழைப்பு வழங்காவிட்டால், வேறு வழிகளில் இலங்கை மீது மேற்குலக நாடுகள் அழுத்தங்களை பிரயோகிக்கக் கூடுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

விசாரணைகளின் மூலம் பாதிப்புக்கள் ஏற்படக் கூடிய சாத்தியங்கள் அதிகளவில் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கை விவகாரம் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் விசாரணை நடாத்தப்பட முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# திருமலை மாணவர் படுகொலை குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர்

## உறுதியளித்தார் சவேந்திர சில்வா



(கொழும்பு)

திருகோணமலை மாணவர் படுகொலைச் சம்பவம் தொடர்பாக உரிய விசாரணை நடத்தபட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர் என ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கை பிரதிவதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திரா சில்வா உறுதியளித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதிக்கான காரியாலயத்திற்கு எதிரில் போராட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தில் சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகளும் பங்கேற்றுள்ளனர்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகள் சவேந்திரா சில்வாவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், அதன் போது போராட்டக்காரர்களின் கோரிக்கை குறித்து கவனம் செலுத்துவதாகவும் சவேந்திர சில்வா உறுதியளித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

2006ஆம் ஆண்டில் திருகோணமலை கடற்கரையில் ஐந்து மாணவர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் 13 விசேட அதிரடிப்படை உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் பாவனை கட்டுப்படுத்த 1984

போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த விசேட வேலைத் திட்டத்தை அமுலாக்குவதற்கு புலனாய்வுத் தகவல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

1984 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு இதுபற்றிய தகவல்களை தெரிவிக்கலாம் என்றும் தகவல்கள் இரகசியமாகப் பேணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மதுவுக்கு முற்றுப்புள்ளி கோட்பாட்டை யதார்த்தமாக்கும் வேலைத திட்டத்தின் மற்றுமொரு அங்கமாக சட்டவிரோத போதைப் பொருள், புகையிலை, மதுபான, கைத்தொழில் புலனாய்வு தகவல் நிலையம் நேற்று முன் தினம் ஆரம்பிக்கப்பட்டது.

அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபையின் 30 ஆவது கொண்டாட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன போது இந்த நிலையம் திறந்து வைக்கப்பட்டது. புதிய நிலையம் இராஜகிரியில் அபாயரகமான ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபையில் அமைந்துள்ளது.

போதைப் பொருள் வர்த்தகம் தொடர்பான தகவல்களை திரட்டல், ஆய்வு செய்தல், மீளாய்வு, பரிமாற்றம் போன்றவை இதன் மூலம் மேற்கொள்ளப்படும். 1984 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாக போதைப்பொருள் பாவனை தொடர்பான தகவல்களை எவரும் அறிவிக்கலாம்.

இத்தகவலை அறிவிப்போரின் இரகசியம் பாதுகாக்கப் படும் என்று நிலையத்தின் திறப்பு விழாவின் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபையின் தலைவி லேஷா டி.சில்வா சந்திரசேன உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

## ஜனாதிபதித் தேர்தலில்

# பொது வேட்பாளரை நிறுத்த அரசியல் கட்சிகளுடன் பேச்சு

(கொழும்பு)

அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்தும் திட்டம் முன் வைத்து அரசியல் கட்சிகளுடன் விவாதித்து வருவதாக சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டாளரான மதுளுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

பொது வேட்பாளர் தொடர்பில் சில அரசியல் கட்சிகள் இடையில் ஒருமித்த கருத்தை ஏற்படுத்துவதற்கான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இது சம்பந்தமாக நேற்று முன் தினம் நடைபெற்ற சந்திப்பொன்றில் விவாதிக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, ஜனநாயகக் கட்சி மற்றும் சில முஸ்லிம் கட்சிகளுடன் பொது வேட்பாளரை தெரிவு செய்வதற்கான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அரசாங்கத்திற்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுப்பது எமது நோக்கமல்ல. அரசியல் அமைப்பை மாற்றியமைப்பதும் பிரச்சினைகளுக்கு உறுதியான தீர்வை வழங்குவதுமே எமது நோக்கம். எமது பொது வேட்பாளர் ஜனாதிபதி பதவிக்கு வந்து 6 மாதங்களில் அரசியல் அமைப்பில் மாற்றங்களைச் செய்ய அவசியமான திருத்தங்களை செய்ய வேண்டும்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கு அரசாங்கத்தில் உள்ள சில அமைச்சர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர் எனத் .தெரிவித்தார்.

# புலிகளைப் போல பொதுபலசேனாவும் தனி இராச்சிய நிர்வாகம் நடத்துகிறது

## அமைச்சர் றிசாத் குற்றச்சாட்டு




தமிழீழ விடுதலைப் புலிகளைப் போன்றே பொதுபல சேனா இயக்கமும் தனி இராச்சியமொன்றை நிர்வாகம் செய்து வருவதாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அமைச்சர்களில் ஒருவரான றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

ஏதெனும் ஓர் இடத்தில் எந்த நேரத்திலாவது போராட்டமோ அல்லது ஆர்ப்பாட்டமோ நடத்தும பொதுபல சேனா எவரின் கேள்விக்கும் உள்ளாகாமல் சுதந்திரமாக சென்று விடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் சிறுபான்மை இன மக்களினால் எதிர்நோக்கப்பட்டு வரும் நெருக்கடிகள் குறித்து விசாரணை நடாத்த ஓர் விசாரணை ஆணையாளரை நியமிக்க வேண்டுமென அவர் கோரியுள்ளார்.

பொதுபலசேனா உத்தியோகப் பற்றற்ற பொலிஸ்துறையாக இயங்கி வருவதாகவும், அதனை எவரும் கேள்வி கேட்பதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு வரும் தனது பிரஜைகளுக்கு பயண ஆலோசனை வழங்கும் பிரிட்டன்



(கொழும்பு)

இலங்கையின் தென் பகுதி கரையோரங்களில் இருக்கும் உணவகங்கள் மற்றும் மதுபான நிலையங்களுக்கு செல்லும் பிரித்தானிய பிரஜைகளை எச்சரிக்கையாக இருக்குமாறு அந் நாடு அறிவித்துள்ளது.

தென் பகுதிக் கரையோரங்களில் உள்ள உணவகம் மற்றும் மதுபான நிலையங்களில் மருந்துகள் கலக்கப்படுவதாக பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலகம் விடுத்துள்ள பயண ஆலோசனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் பகுதியிலுள்ள கரையோரங்களில் உள்ள சுற்றுலா உணவகங்கள் மற்றும் மதுபான நிலையங்களில் பானங்கள் வழங்கப்படும் முன்னர் அவற்றில் மருந்துகள் கலக்கப்படுவதாக தகவல்கள் கிடைத்துள்ளன. இதனால் பானங்களை அருந்தும் போது மிகவும் கவனமாக இருக்குமாறு பிரித்தானிய தனது பிரஜைகளிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

இலங்கைக்கு வெளிநாட்டவர்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் அதிகரித்துள்ளன. வெளிநாட்டவர்களுக்கு எதிரான குற்றங்கள் அடிக்கடி நிகழ்கின்றன.

இலங்கையில் பயணத்தை மேற்கொள்ளும் போது அந்த பயணங்களுக்கான ஏற்பாடுகளை பயண நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் கவனத்துடன் இருக்க வேண்டும்.

பெண்கள் தனியாகவோ அல்லது சிறு குழுக்களாகவோ செல்லும் போது தம்முடன் தனிப்பட்ட எச்சரிக்கைக் கருவிகளை கொண்டு செல்லவேண்டும்.

தென் பகுதிகளில் உள்ள ஹோட்டல்கள் மற்றும் விடுதிகளில் கொள்ளைச் சம்பவங்கள் நடந்துள்ளதாக செய்திகள் வந்துள்ளன.

கடவுச்சீட்டு, பணம் உட்பட பெறுமதியான பொருட்களை பாதுகாத்துக் கொள்வதற்காக அவற்றை தம்முடன் எடுத்துச் செல்ல வேண்டும். இலக்கு வைத்து கடத்தல்கள் மற்றும் வன்முறைகளுடன் தொடர்புடைய ஆயுதக் குழுக்கள் இலங்கையில் செயற்படுவதாக அறியக்கிடைத்துள்ளது.

பிரித்தானிய பிரஜைகளுக்கு ஆபத்து இருக்கின்றது என்பதற்கான எந்த ஆதாரங்களும் இல்லை என்ற போதிலும் சம்பந்தப்பட்ட வன்முறைக் குழுக்கள் சுற்றுலா பகுதிகளில் நடமாடுவதாக கூறப்படுகிறது.

2011 ஆம் ஆண்டு சுற்றுலா விடுதியொன்றில் வன்முறைக் குழுவின் தாக்குதலால் ஒரு பிரித்தானிய பிரஜை கொல்லப்பட்டார் எனவும் அந்த பயண ஆலோசனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டங்களுக்கு மதிப்பளிக்கும் பொதுபலசேனா செயலாளர்

சட்டத்தை மதிப்பதாக பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் கூறியுள்ளார்.

ஞானசார தேரர் நேற்யை தினம் கொம்பனித் தெரு பொலிஸ் நிலையத்தில் ஆஜராகினார். ஜாதிக பலசேனா அமைப்பின் செயலாளர் வட்டரெக்க விஜித தேரரின் முறைப்பாட்டுக்கு அமையவே அவர் பொலிஸில் ஆஜரானார்.

தாம் ஏற்பாடு செய்திருந்த ஊடக சந்திப்பொன்றில் அனுமதியின்றி புகுந்த ஞானசார தேரர் உட்பட அவரது அமைப்பினர் குழப்பும் வகையில் நடந்து கொண்ட சம்பவம் தொடர்பில் விஜித தேரர் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த முறைப்பாட்டுக்கு அமையவே கொம்பனித் தெரு பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற ஞானசார தேரர், வாக்கு மூலம் வழங்கி விட்டு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

இதன் போது ஊடகங்களிடம் பேசிய அவர், தான் நாட்டின் சட்டங்களுக்கு மதிப்பளித்து செயற்படுவதாக குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஏப்ரல் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.